விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 வைகாசி 11 செவ்வாய்க்கிழமை (24.05.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 157

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

# அதிகார வரம்பை மீறி ஆளுநர் செயற்படுகிறார்!

## அவர் தலைமையிலான கூட்டங்களை வடக்கு உறுப்பினர்கள் புறக்கணிக்க முடிவு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபைக்குரிய அதிகாரங்களில் வட மாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே வரம்பு மீறி செயற்படுவதனால் அவர் தலைமையில் நடைபெறும் கூட்டங்களை புறக்கணிக்க வடக்கு மாகாண சபை அமைச்சர்கள், உறுப்பினர்கள் முடிவு செய்துள்ளனர்.

23ஆம் பக்கம் பார்க்க....

## வாள்களுடன் இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், கந்தரோடைப் பகுதியில் வாள்களுடன் இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் தாக்குதல் ஒன்றுக்கு தயாராக நின்றதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். குறித்த சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

24ஆம் பக்கம் பார்க்க....

## 15 பவுண் நகை திருடப்பட்டது

(தெல்லிப்பளை)


தெல்லிப்பளை பிரதேசத்துக்குட்பட்ட துர்காபுரம் கவுணாவத்தைப் பகுதியில் நேற்று திங்கட்கிழமை காலை 11 மணியளவில் பாடசாலை அதிபர் ஒருவரின் வீடு உடைக்கப்பட்டு சுமார் 15 பவுண் மதிக்கத்தக்க தங்க நகைகள் களவாடப்பட்டுள்ளது.

வீட்டில் எவரும் இல்லாது

24ஆம் பக்கம் பார்க்க....

## வடக்கு அமைச்சில் மாற்றம்

### பொறுப்புக்கள் சில முதலமைச்சரிடம்



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் சத்தியலிங்கத்திற்கு கீழ் இருந்த

24ஆம் பக்கம் பார்க்க....

## புகையிரதம் மோதி ஒருவர் பலி



(யாழ்ப்பாணம்)

பாதுகாப்பான புகையிரத கடவைக்குள் புகுந்து ஓடிய வயோதிபர் ஒருவர் புகையிரதம் மோதியதில் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க....

## சகோதரியோடு சேட்டை புரிகின்ற நபரது மூக்கை உடைக்க முடியும்

### நீதிபதி இளஞ்செழியன் பேச்சு

(யாழ்ப்பாணம்)

சகோதரியோடு சேட்டை விட்டால், சேட்டை விட்டவரது மூக்கை உடைக்க முடியும், அவ்வாறு உடைத்தவர் நீதிமன்றினால் எவ்வித தண்டனைக்கும் உட்படுத்தப்பட மாட்டார்கள் என யாழ்.மேல்நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் தெரிவித்தார்.

சமூக சேவையில் நீண்ட காலம ஈடுபட்ட யாழ் மாவட்ட தேசோதய சபை உறுப்பினர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் யாழ் சர்வோதய மாவட்ட அலுவலகத்தில நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். யாழ்.மாவட்டத்தில் சட்ட ஒழுங்கிற்கு கட்டுப்பட்டு நடக்கும் சமுதாயம் உருவாக வேணடும். அந்த கட்டமைப்பை உருவாக்குவதற்கு தான் இங்குள்ள நீதிக் கட்டமைப்பு மற்றும் பொலிஸ் கட்டமைப்பு இயங்கி வருகின்றது. குற்றம் செய்பவர்களுக்கு தகுந்த தண்டனை வழங்குவதன் மூலமே



தவறான வழியில் சென்று கொண்டிருக்கும் சமூகம் ஒன்றினை திருத்த முடியும்.

ஒரு சமூகத்தில் மாணவர்கள் தடம் புரண்டு போக கூடாது. அவ்

24ஆம் பக்கம் பார்க்க....

## தன்னாட்சி அதிகாரம் வழங்க வேண்டும்



(கொழும்பு)

வடமாகாணத்திற்கு தம்மைத தாமே ஆளும் அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்று மகிந்த ஆதரவு பொது எதிர்க் கட்சி எம்.பியான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

தமிழர் பிரச்சினைக்கு ஒற்றையாட்சிக்குள்ளேயே தீர்வு வழங்கப்பட வேண்டும். எமது அரசியலமைப்பும் ஒற்றையாட்சியையே வலியுறுத்துகின்றது.

23ஆம் பக்கம் பார்க்க....

## அனர்த்த உயிரிழப்பு 92 ஆக உயர்வு

### இருப்பிடம் திரும்ப மக்கள் ஆர்வம்



(கொழும்பு)

நாட்டில் மழை வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகள் காரணமாக

24ஆம் பக்கம் பார்க்க....

## பிரமிட் கட்டமைப்புசார் நிதி மோசடிகள் அதிகரிப்பு

### கட்டுப்படுத்துமாறு மக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழில் தொடர்ச்சியாக அதிகரித்து வரும் பிரமிட் கட்டமைப்புசார் நிதி மோசடியை அதிகாரிகளும் மக்கள் பிரதிநிதிகளும் கண்டுகொள்ளாமல் உள்ளனர் என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இலங்கை மத்திய வங்கியால் தடை செய்யப்பட்ட பிரமிட் கட்டமைப்புசார் நிதி மோசடியொன்று யாழ். குடாநாட்டில் நடைபெற்று வருவதாக பாதிக்கப்பட்ட நபர்கள் பலர் கவலை வெளியிட்டிருக்கின்றனர்.

தென்னிலங்கையைச் சேர்ந்த நிறுவனம் ஒன்று இந்த நிதி மோச

24ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# முன்னாள் நீதியரசர் ஆப்ரூவுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

வீட்டில் பணியாற்றிய வீட்டுப் பணிப்பெண்ணை கடுமையாக பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்ட உயர்நீதிமன்ற முன்னாள் நீதியரசர் சரத் ஆப்ரூவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு எதிர்வரும் செப்டம்பர் மாதம் 14 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

வெள்ள நிலைமை காரணமாக தம்மால் நீதிமன்றத்தில் ஆஜராக முடியவில்லை என இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது குற்றம் சுமத்தப்பட்டவர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி திரந்த வரலியத்த தனது கனிஷ்ட சட்டத்தரணி ஊடாக நீதிமன்றத்திற்கு அறிவித்தார்.

இதனால் வழக்கு விசாரணைக்காக வேறு தினத்தை வழங்குமாறு கோரிக்கை விடுத்தார்.

இதனையடுத்தே கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நிஷ்சங்க பந்துல கருணாரத்ன வழக்கு விசாரணைகளை செப்டம்பர் 14 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்துள்ளார்.

உயர்நீதிமன்ற முன்னாள் நீதியரசர் சரத் ஆப்ரூ 2015ஆம் ஆண்டு தனது வீட்டில் பணிபுரிந்த பணிப்பெண்ணை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (செ-11)

# தொற்று நோய்கள் பரவுவதை தடுக்க விசேட மருத்துவ வசதி

(கொழும்பு)

நாட்டில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வெள்ள நீரானது வற்றி வருகின்றது.

இந்த நிலையில் தொற்று நோய்கள் பரவும் ஆபத்து உள்ளதால் அதை தவிர்க்கும் வகையில் உரிய மருத்துவ வசதிகளை வழங்க தீர்மானித்துள்ளதாக சுகாதார அமைச்சின் உதவிச் செயலாளர் சரத் அமுனுகம தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து கருத்து வெளியிட்ட சரத் அமுனுகம, தோல் நோய், சுவாசம் சம்பந்தமான நோய்கள் மற்றும் நுண்ணங்கி தொற்றுக்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய மருத்துவ உதவிகள் வழங்கப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

நுண்ணங்கிகளால் ஏற்படும் நீர் மற்றும் சூழல் தொடர்பான பாதிப்புக்களை தவிர்க்கும் வகையில் நுண்ணுயிர் கொல்லி வில்லைகள் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

மேலும் வெள்ள நீர் பாதித்த இடங்களிற்கு விசேட நடமாடும் மருத்துவ சேவைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சின் உதவி செயலாளர் சரத் அமுனுகம தெரிவித்தார். (செ-11)

# வாகன விபத்து இளைஞன் காயம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் இளைஞன் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் நேற்று மதியம் 12 மணியளவில் மானிப்பாய் கூழாவடி பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் சுதுமலை தெற்கினை சேர்ந்த நாவுக்கரசு சுதர்சன் (வயது 19) என்ற இளைஞனே படுகாயமடைந்தவராவார்.

இது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (செ-30)


## பிரதேச சபை, பூநகரி
## வெளிவாரி அடிப்படையிலான ஆளணிக்கான விலைமனுக் கோரல்

பூநகரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட **KN/59** கிராம சேவையாளர் பிரிவில் உள்ள முட்கொம்பன் பூங்காவைப் பராமரிப்பதற்கான ஆளணியை வெளிவாரி அடிப்படையில் வழங்குவதற்கு தகுதி வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

1. பூங்கா பராமரிப்பாளர் - 01
   கடமை நேரம் - காலை 6.00 - மாலை 6.00 வரை

   கேள்வி விண்ணப்பப்படிவம் வழங்கப்படும் காலம் - 24.05.2016 - 31.05.2016

   விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி - 05.06.2016

ஆர்வமுள்ள கேள்விதாரர் தலைமை அலுவலகத்தில் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று பூரணப்படுத்தி தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிட்டு **செயலாளர், பிரதேச சபை, பூநகரி** என்னும் முகவரிக்கு நேரிலோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைக்க முடியும். மேலதிக விபரங்களையும், நிபந்தனைகளையும் பூநகரி பிரதேச சபை தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**திரு.முத்துலிங்கம் இராஜகோபால்**
**செயலாளர்**
**பிரதேச சபை**
**பூநகரி**

(C-4675)



## காணி விற்பனைக்கு

ஆனைக்கோட்டை கரைப்பிரான் பிள்ளையார் ஆலயத்தினை அண்மித்துள்ள மானிப்பாய் வீதியில் 2 பரப்பு 10 குளி விஸ்தீரணமுள்ள தனிக்கிணற்றுடன் கூடிய சற்சதுரக் காணி உடனடியாக விற்பனைக்குண்டு.

**நேரடியாக தொடர்பு கொள்ளலாம்.**

**தொடர்புகளுக்கு : 071 881 8624**

(C-4674)



## வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
**021 221 7603**
**021 567 1532**





கரம்பொன், அன்னை வேளாங்கன்னி மாதா

## யாத்திரை தல திருவிழா

22.05.2016 ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு திருச்செபமாலையுடன் தொடர்ந்து அன்னை திருவுருவம் தாங்கிய கொடி ஏற்றப்பட்டு நவநாள் வழிபாடுகள் ஆரம்பமாகியது.

22ஆம் திகதியிலிருந்து தினமும் 5 மணிக்கு திருச்செபமாலையும் தொடர்ந்து திருப்பலியும் இடம்பெறும். 30.05.2016 திங்கட்கிழமை நற்கருணை விழாவும், 31.05.2016 செவ்வாய்க்கிழமை திருவிழா திருப்பலி காலை 6.30 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகி அன்னையின் திருச் சொருப பவனியுடன் திருவிழா இனிதே நிறைவடையும்.

அன்னையின் ஆசிர் பெற
அன்போடு அழைக்கின்றோம்

அனுசரணை :- ACD, Jaffna

பங்குத்தந்தையும்,
பங்கு மக்களும்.

(C-4676)



## மணிவிழா நாயகியை வாழ்த்துகின்றோம்

திருமதி **ஜெபசோதி திரவியரத்தினம்**



ஆசிரியர் சேவை (கிறிஸ்தவ ஆசிரியை வகுப்பு 01)
ஓய்வுபெற்ற தினம் 23.05.2016
கிளிநொச்சி மாவட்டத்தில் 1980-1990 விவசாய திணைக்களம் (எழுதுவினைஞர்)

**ஆசிரியையாக**
01. தட்டுவன்கொட்டி கண்ணகை அம்மன்
02. பளை மத்திய கல்லூரி
03. இயக்கச்சி சி.சி.த.க பாடசாலை

**யாழ் மாவட்டத்தில்**
01. வட இந்து மகளிர் கல்லூரி
02. புற்றளை மகா வித்தியாலயம்

ஆதவன் போல் பிரகாசமாய்
முகத்திலே புன்சிரிப்பு பரப்பி
எத்தனை துன்பங்கள் வந்த போதும்
தனி ஒருத்தியாய் அனைத்தையும் வென்று
குடும்பப் பொறுப்பையும் பாடசாலை பணியையும்
சரிசமமாய் மதித்து
அனைத்திலும் வெற்றி பெற்று
இன்று அறுபதாவது வயதிலே
மணிவிழா காணும் - அம்மாவை
இன்னும் பல இன்பம் கண்டு
நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்

"தேவவாசா"
துன்னாலை, மேற்கு,
கரவெட்டி.

வாழ்த்துவோர்:
மகள், மருமகன்,
பேரன்

(C-4677)



## அங்குரார்ப்பணமும் அங்கத்தவர் இணைப்பும் பொதுக்கூட்ட அறிவித்தலும். நோயாளர் நலன்புரிச் சங்கம் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை 'நோயாளர் நலன்புரிச் சங்கம்' 13.05.2016 தொடக்கம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது என்பதனை கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் பற்றுதல் கொண்டுள்ள சகலருக்கும் இத்தால் அறிவித்தல் செய்யப்படுகின்றது.

இச் சங்கத்தில் இணைந்து கொள்ள விரும்புவோர் அங்கத்தவர் படிவத்தை பூர்த்தி செய்து சந்தாப்பணத்தை செலுத்துவதன் மூலம் அங்கத்தவராக இணைந்துகொள்ள முடியும்.

**அங்கத்தவராக இணைவதற்கான சந்தா விபரம்**

| | | | |
|---|---|---|---|
| ஆயுள்கால அங்கத்தவர்கள் | - | ரூ. | 2,000.00 |
| ஆண்டு சந்தா | - | ரூ. | 100.00 |

அங்கத்தவர்கள் 06.06.2016 வரை இணைந்து கொள்ள முடியும்.

அங்கத்துவ படிவம் பெற்றுக்கொள்ளல் மற்றும் சந்தா செலுத்துதல் என்பவற்றின் பொருட்டு கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை நிர்வாக அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.


கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்க அங்கத்தவர்களுக்கான பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும் 11.06.2016 சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் நடைபெறும் என்பதனையும் இத்தால் அறியத்தருகின்றோம்.

**நோயாளர் நலன்புரிச் சங்கம்**
**மாவட்ட பொது வைத்தியசாலை**
**கிளிநொச்சி**
**021 228 5327**
***16.05.2016***

(C-4673)

# அகதிகளாக நிற்கின்றோம்

## கண்ணீர் சிந்தும் பாதிக்கப்பட்ட மக்கள்



வீடு, சொத்து, சுகம், பிறப்புச்சான்றிதழ் என அனைத்தையும் இழந்து நடு வீதியில் அகதிகளாக நிற்கிறோம். நாங்கள் கனவில் கூட நினைக்கவில்லை இப்படி ஒரு துயரத்தை அனுபவிப்போம் என்று. கடந்த ஆறு நாட்களாக ஒரே உடுப்போடு இருக்கிறோம். சில பொருட்களை வெளிப்படையாக வாய் திறந்து கேட்க முடியாத துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

கூலித்தொழில் செய்து கஷ்டப்பட்டு குருவி போன்று கொஞ்சம் கொஞ்சமாக சேர்த்து வைத்த அனைத்தும் இன்று இல்லாமல் போய்விட்டன என வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு வீதிகளிலும் விகாரைகளிலும் முகாம்களிலும் தங்கியிருக்கும் மக்கள் கண்ணீர் மல்க தெரிவித்தனர். நாட்டில் க்டந்த சில நாட்களாக ஏற்பட்ட சீரற்றகால நிலை காரணமாக இதுவரை 84 பேர் உயிரிழந்துள்ளதுடன் 3 இலட்சத்து 40 ஆயிரத்து 150 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.



இதில் குறிப்பாக கொழும்பில் மாத்திரம் ஒரு இலட்சத்து 47 ஆயிரத்து 666 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 5 பேர் பலியாகியுள்ளனர். பாதிக்கப்பட்ட மக்கள் கொழும்பின் பிரதான வீதிகளின் இருமருங்கிலும் விகாரைகளிலும் பாடசாலைகளிலும் என 84 இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பில் நிலவி வந்த சீரற்ற காலநிலை கடந்த மூன்று நாட்களில் வழமைக்கு திரும்பியுள்ள போதும் மக்களின் வடுக்கள் இன்னமும் மாறவில்லை. வீடுகள் இன்னமும் 6 அடி நீர்மட்டத்துக்குள் மூழ்கியுள்ளன.

பாதிக்கப்பட்ட மக்கள் கருத்து தெரிவிக்கையில்,

என்னுடைய பெயர் நியாஸ். மீதொட்டுமுல்ல பகுதியில் சுமார் பல்லாயிரக்கணக்கான மக்கள் இருக்கின்றோம். கடந்த சில நாட்களாக பெய்த மழை எங்களுக்கு பெரிய பாதிப்பை ஏற்படுத்திவிட்டது. இதுவரையில் அரசாங்கத்தில இருந்து வந்து எங்களுக்கு எந்தவொரு உதவியும் செய்யல. உணவு கிடைப்பதில் எந்தப் பிரச்சினையும் இல்ல. எங்கட பெண்கள் எல்லாம் இன்று வீதிக்கு தள்ளப்பட்டு இருக்காங்க. எங்கட பெண்கள் ரொம்ப கஷ்டத்தை எதிர்



கொள்ளுறாங்க. நாங்க எப்படியும் இருந்துட்டு போயிடுவோம். ஆனால் இந்த பெண்கள் படும் துயரத்தை வார்த்தையால் சொல்ல முடியாது. எங்கட வீடு மட்டும் இல்ல பிறப்புச் சான்றிதழ், விவாகப் பத்திரம், பொருட்கள் என அனைத்தும் இல்லாமல் போய்விட்டன. தண்ணீரால் சேதமான எங்கட வீடுகள் மீள திருத்தி அமைக்க அரசாங்கம் உதவி செய்ய வேண்டும். நாங்கள் எதிர்பார்க்கல இப்படி எல்லாத்தையும் இழப்போம் என்று. இந்த வான்கதவுகள் திறக்கப்போறாங்கனு முன்னாடி சொல்லியிருந்தா உடுத்த உடுப்புகள சரி எடுத்துக்கிட்டு வெளியாகி இருப்போம். ஆனால் போட்ட உடுப்போட இன்னமும் இருக்கிறோம். இது ஒரு அனர்த்தம். நாங்கள் யார் மீதும் குற்றம் சுமத்த விருப்பம் இல்ல. இருந்தாலும் அரசாங்கம் எங்களுக்கு பதில் ஒன்ற சொல்ல வேண்டும் என கவலையுடன் தெரிவித்தார். (இ-10)

# ஜெயலலிதாவின் வெற்றி இலங்கைக்கு ஆபத்து

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

**ஜெயலலிதாவின் வெற்றி இலங்கைக்கு ஆபத்தானது என எச்சரிக்கை விடுக்கும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் வடக்கு தமிழர்களுக்கு சுயநிர்ணய உரிமையைப் பெற்றுக் கொடுத்து தனித் தமிழீழத்தை பெற்றுக் கொடுக்கும் "இந்தியாவின்" தலையீடு இலங்கைக்குள் அதிகரிக்கும் என்றும் அவ் இயக்கத்தின் பொதுச்செயலாளர் வசந்தபண்டார தெரிவித்துள்ளார்.**

தமிழ்நாட்டில் அதிகப் பெரும்பான்மையுடன் வெற்றி பெற்று ஜெயலலிதா மீண்டும் தமிழ்நாட்டின் முதலமைச்சராகியுள்ளார்.

தமிழ்நாட்டில் ஏனைய கட்சிகள் பலமிழந்து ஜெயலலிதாவின் பலம் ஓங்கியுள்ளது. இது இலங்கைக்கு ஆபத்தானதாகவே அமையும்.

ஏனென்றால் ஜெயலலிதாவின் தேர்தல் அறிக்கை வெற்றி பெற்றால் இலங்கையின் வடபகுதி தமிழர்களுக்கு சுயநிர்ணய உரிமையை பெற்றுக்கொடுப்பேன். கச்சதீவை மீட்பேன் என்றெல்லாம உறுதிமொழி வழங்கினார்.

இந்த உறுதி மொழிகளை நிறைவேற்ற முதலமைச்சராக பதவியேற்ற பின்னர் ஜெயலலிதா அனைத்து முயற்சிகளையும் எடுப்பார். இதன்போது இந்தியப் பிரதமர மோடி இதனை எதிர்க்கமாட்டார். தனித்து அதிகப் பெரும்பான்மை பெற்ற தமிழ் நாட்டு முதலமைச்சரை பகைத்துக் கொள்வதை மோடி விரும்ப மாட்டார்.

எனவே இந்தியாவின்



மத்திய அரசின் ஆதரவுடன் ஜெயலலிதா இலங்கையில் வடபகுதி தமிழர்களுக்கு சுயநிர்ணய உரிமையை பெற்றுக்கொடுக்கும் திட்டங்களை முன்னகர்த்துவார்.

சுயநிர்ணய உரிமை கிடைத்த பின்பு தனித் தமிழீழம் என்பது தானாகவே உருவெடுக்கும். அதனை தடுக்க முடியாது. அதேபோன்று சட்ட ரீதியாக இலங்கைக்கு சொந்தமான கச்சதீவும் பறிபோகும் ஆபத்தும் உள்ளது.

கடந்த காலங்களை விட இலங்கையில் இந்தியாவின் தலையீடுகள் அதிகரிக்கும்.

எனவே ஜெயலலிதா முதலமைச்சரானது இலங்கைக்கு ஆபத்தானதாகவே அமையும் என்றும் வசந்த பண்டார மேலும் தெரிவித்தார். (இ-10)

# 2021 ஆம் ஆண்டு வரைக்கும் மைத்திரி-ரணில் ஆட்சி நீடிக்கும்

## மத்திய மாகாண ஆளுநர் நம்பிக்கை

(கொழும்பு)

2021 ஆம் ஆண்டு வரையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆட்சி நீடிக்கும் என மத்திய மாகாண ஆளுநர் நிலுகா ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

ஆளுநர் ஏக்கநாயக்க ஓர் முன்னணி சோதிடர் என்பதும் சோதிட பத்திரிகையொன்றின் ஆசிரியராக கடமையாற்றியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி, பிரதமரின் கிரக பலன்களின் அடிப்படையில் இந்த ஆட்சியில் மாற்றம் செய்யக்கூடிய சாத்தியமில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இரு தலைவர்களுக்கும் இடையில் மிகச் சிறந்த புரிந்துணர்வு காணப்படுவதாகவும், அரசாங்கம் பாரியளவில் சாதக மாற்றங்களை செய்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (இ-10)

# தொற்று நோய்கள் பரவும் அபாயத்தில் கொழும்பு!

நாட்டில் நிலவிய அசாதாரண காலநிலை அன்றாட சிறு விடயங்களைக் கூட பாதித்துள்ளது.?

இதனடிப்படையில், கொழும்பிலும் அதனை அண்மித்த பகுதிகளிலும் தினமும் குப்பைகள் சேகரிக்கப்படுவது வழக்கமாக இருந்த போதிலும் கடந்த ஓரிரு நாட்களாக இந்த குப்பைகள் சேகரிக்கும் செயற்பாடு ஸ்தம்பிதம் அடைந்துள்ளது.

இதன் காரணமாக வீடுகள், காரியாலயங்கள் மற்றும் கடைகள் போன்றவற்றிற்கு முன்னால் குப்பைகள் குவிந்து கிடக்கின்றன.

மழை காரணமாகவும், குப்பைகளை அகற்றும் ஊழியர்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டதன் காரணமாகவும், வழமையாக இடம்பெறும் இந்தப் பணி நடைபெறாதுள்ளது.

இதனால் குப்பைகள் தேங்கியுள்ள இடங்களில் நுளம்புகள், ஈக்கள் பரவுகின்ற அபாயநிலை காணப்படுகின்றது.

இதனால் கொழும்பு நகரில் தொற்று நோய்கள் பரவும் அபாயம் காணப்படுகின்றதாக சுகாதார தரப்பினர் குறிப்பிடுகின்றனர்.

இந்த தொற்று நோய்களிலிருந்து மக்களை பாதுகாப்பாக இருக்குமாறும் சுகாதார அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-10)

# சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர் கேரளக் கஞ்சாவுடன் கைதானார்

திருகோணமலை, ரொட்டவெவ பிரதேசத்தில் கேரளா கஞ்சாவுடன் சிவில் பாதுகாப்பு உத்தியோகஸ்தரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

கைது செய்யப்பட்ட நபர் ரொட்டவெவ பிரதேசத்திலுள்ள பள்ளிவாசலுக்கு முன்பாகவுள்ள கடைத்தொகுதியில் இரவில் தூங்குவதாகவும் காலை எழுந்து கஞ்சா பாவிப்பதாகவும் பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது. இதனைத் தொடர்ந்து சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார், தேடுதலினை மேற்கொண்டுள்ளனர்.

பொலிஸாரின் தேடுதல் வேட்டையின் போது குறித்த சந்தேக நபரிடம் இருந்து கேரளா கஞ்சாவும் தடைசெய்யபபட்ட தங்கூசி வலையும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (இ-10)

# அனர்த்தத்தின்போது அ.அட்டைகளை தொலைத்தவர்கள் மீளப் பெறலாம்

நாட்டில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவால் தமது தேசிய அடையாள அட்டைகளை இழந்தவர்களுக்கு, புதிய அடையாள அட்டைகளை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் அடையாள அட்டைகளை இழந்தவர்களின் விபரங்களை விரைவில் பெற்றுத்தருமாறு, கிராம சேவகர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களுக்கு ஆட்பதிவு திணைக்களம் அறிவித்தல் விடுத்துள்ளது.

இதேவேளை, அனர்த்தங்களின்போது கல்விச் சான்றிதழ்களை இழந்தவர்களுக்கும், சான்றிதழ்களை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஏற்கனவே அரசாங்கம் அறிவித்துள்ளது. (இ-10)

# 49 குளங்கள் சேதம்

அசாதாரண காலநிலை காரணமாக விவசாய அபிவிருத்தி திணைக்களத்திற்குட்பட்ட 49 குளங்கள் சேதமடைந்துளளதாக தெரிவிக்கப்பட்டுளளது.

குருநாகல் மாவட்டத்தில் மாத்திரம் 19 குளங்கள் சேதமடைந்துள்ளதாக திணைக்களத்தின் நீர் முகாமைத்துவ பிரிவின் பிரதானி பிரபாத் வித்தாரண தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் 08 குளங்களும், அம்பாறையில் 09 குளங்களும், திருகோணமலையில் 03 குளங்களும் கனமழை காரணமாக முற்றாக சேதமடைந்துள்ளன. இதேவேளை, புத்தளத்தில்ஒருகுளமும்மொனராகலையில் 3 குளங்களும் மழை காரணமாக சேதமடைந்துள் ளதாகவும் பிரபாத் வித்தாரண தெரிவித்தார். (இ-5)

# இங்கிலாந்துக்கு எதிரான தொடரில் இலங்கை அணியில் பெரேரா இணைவு



இலங்கை கிரிக்கெட் அணியின் விக்கெட் கீப்பராகவும், முன்னணி துடுப்பாட்டவீரருமான குசல பெரேரா, ஊக்க மருந்து விவகாரத்தில் சிக்கி தடை பெற்றிருந்தார்.

தற்போது ஐ.சி.சி. அந்த தடையை நீக்கியதால் இங்கிலாந்துக்கு எதிரான 2-வது டெஸ்டில் இலங்கை அணியில் இணைகிறார்.

இலங்கை கிரிக்கெட் அணியின் விக்கெட் கீப்பராகவும், முன்னணி துடுப்பாட்டவீரருமான குசல் பெரேரா, ஊக்க மருந்து விவகாரத்தில் சிக்கி தடை பெற்றிருந்தார். தற்போது ஐ.சி.சி. அந்த தடையை நீக்கியதால் இங்கிலாந்துக்கு எதிரான 2-வது டெஸ்டில் இலங்கை அணியில் இணைகிறார்.

கடந்த டிசம்பர் மாதம் இலங்கை அணி நியூசிலாந்து சென்றிருக்கும் போது, குசல் பெரேரா ஊக்க மருந்து பயன்படுத்தியதாக ஐ.சி.சி. அவருக்கு தடை விதித்தது.

இந்த முடிவை எதிர்த்து பெரேரா முறையீடு செய்தார். இதை விசாரித்த ஐ.சி.சி. குழு அவர் மீதான தடையை நீக்கியது. இதனால் கடந்த 11 ஆம் திகதி முதல் சர்வதேச போட்டியில் விளையாட அவருக்கு அனுமதி வழங்கப்பட்டது.

தற்போது இலங்கை அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இந்த அணியின் வேகப்பந்து வீச்சாளர் தமிகா பிரசாத்திற்கு காயம் ஏற்பட்டது. இதனால் அவருக்குப் பதிலாக குசல் பெரேரா சேர்க்கப்பட்டுள்ளார். விசா குறித்தான நடைமுறைகள் அனைத்தும் முடிந்தபின் விரைவில் இங்கிலாந்து செல்வார் என்று இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து இலங்கை கிரிகெட் சபை தலைமை தேர்வாளர் சனத் ஜெயசூரிய கூறுகையில், எனது தலைமையிலான குழு பிரசாத்திற்குப் பதிலாக குசல் பெரேராவை தேர்வு செய்துள்ளது.

ஏற்கெனவே, இலங்கை அணியில் போதுமான வேகப்பந்து வீச்சாளர்கள் உள்ளனர். முதல் டெஸ்டில் நான்கு முன்னணி பந்து வீச்சாளர்கள், இரண்டு ஆல்ரவுண்டர்கள் இடம்பிடித்திருந்தனர்.

மேலும், சுரங்க லக்மல், தில்ருவான் பெரேரா ஆகியோரும் இடம் கிடைக்காமல் இருந்தனர். இதனால் குசல் பெரேராவை தேர்வு செய்துள்ளோம் என்றார். (க)

# சிம்பாவே சுற்று தொடருக்கான இந்திய அணி அறிவிப்பு



சிம்பாவேயில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் ஒரு நாள் மற்றும் 20 ஒவர் போட்டிக்கான இந்திய கிரிக்கெட் அணியும், மேற்கிந்திய தீவுகளில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் டெஸ்ட் போட்டிக்கான இந்திய அணியும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தோனி தலைமையிலான 16 பேர் கொண்ட ஒருநாள், 20 ஒவர் கிரிக்கெட் அணியை அறிவித்தது பி.சி.சி.ஐ.

தோனி (அணித்தலைவர்), கே.எல்.ராகுல், ஃபசல், மணீஷ் பாண்டே, கருண் நாயர், அம்பத்தி ராயுடு, ரிஷி தவான், அக்ஸர் பட்டேல், ஜெயந்த் யாதவ், பும்ரா, பரிந்தர் சரண், மன்தீப் சிங், கேதர் ஜாதவ், தவல் குல்கர்னி, ஜெய்தேவ் உனத்கட், சாஹல் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.


**டெஸ்ட் அணி அறிவிப்பு,**

மேற்கிந்திய தீவுகளில் சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் டெஸ்ட் போட்டிக்கான அணி அறிவிப்பு.

விராட் ஹோலி தலைமையிலான 17 பேர் கொண்ட டெஸ்ட் கிரிக்கெட் அணியை அறித்தது பி.சி.சி.ஐ.

விராட் ஹோலி (அணித் தலைவர்), முரளி விஜய். ஷிகர் தவான், கே.எல்.ராகுல், புஜாரா, ராஹனே, ரோஹித் சர்மா, விருத்மான் சாஹா, ரவீந்திர ஜடேஜா, அஷ்வின், இஷாந்த் சர்மா, முகமது சமி, உமேஷ் யாதவ், ஷர்துல் தாக்கூர், ஸ்டூவர்ட் பின்னி, புவனேஷ் குமார். அமித் மிஷ்ரா ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். (க)

# தகாத வார்த்தை பயன்பாடு வோட்சனுக்கு எச்சரிக்கை



ராய்ப்பூரில் நடைபெற்ற டெல்லி அணிக்கெதிரான போட்டியில் பெங்களூர் அணி வீரர் வோட்சன் தகாத வார்த்தைகளை அதிக அளவில் பயன்படுத்தினார். இதனால் அவரை நடுவர் எச்சரித்து அனுப்பினார்.

ஐ.பி.எல். தொடரின் கடைசி லீக் போட்டி நேற்று முன்தினம் ராயப் பூரில் நடைபெற்றது. இதில் டெல்லி - பெங்களூர் அணி கள் மோதின. இரண்டு அணிக்கும் இது வாழ்வா? சாவா? ஆட்டம் என்பதால் ஆக்ரோஷமாக விளையாடினார்கள். வோட்சன் பந்தை டெல்லி அணி வீரர்கள் சிக்ஸ் மற்றும் பவுண்டரி அடிக்கும் போது வோட்சன் தகாத வார்த்தைகளால் திட்டினார். அதேபோல் துடுப்பாட்டம் செய்து அவுட்டாகி செல்லும் போதும் திட்டிக்கொண்டே சென்றார்.

இந்த விவகாரம் மைதான நடுவர் கவனத்திற்குச் சென்றது. இதனால் நடுவர் அவரை அழைத்து கண்டித்தார். வோட்சன் செயல் ஐ.பி.எல். நன்னடத்தை விதி 2.1.4-ன் கீழ் முதல் நிலை வரம்பிற்குள் வந்தது. இதனால் மைதான நடுவரின் எச்சரிக்கையுடன் தப்பித்தார்.

போட்டியில் விராட் ஹோலியின் அபார ஆட்டத்தால் பெங்களூர் அணி பிளே-ஓப் சுற்றுக்கு தகுதிப் பெற்றது. அத்துடன் புள்ளிகள் பட்டியலில் 2-வது இடம் பெற்றது. (க)

# வெற்றியின் ரகசியத்தை வெளியிட்டார் ஹோலி



ஐ.பி.எல் தொடரில் நான்கு சதத்துடன் 919 ஓட்டங்கள் குவித்து பெங்களூர் அணி பிளே ஓப் சுற்றுக்கு தகுதிபெற முக்கிய காரணமான அந்த அணியின் தலைவர் விராட் ஹோலி தனது வெற்றியின் ரகசியத்தை வெளியிட்டுள்ளார்.

கிரிக்கெட் விளையாட்டிற்கு அடிமையாகி களத்தில் அமைதியை கடைப்பிடித்ததும் மற்றும் உலக ரசிகர்களின் ஆதரவுமே தனது ஐ.பி.எல் தொடரின் வெற்றி பயணத்திற்கு காரணம் என ஹோலி தெரிவித்துள்ளார்.

டெல்லி அணிக்கு எதிரான போட்டியில் வெற்றி பெற்ற பிறகு பேசிய பெங்களூர் அணித்தலைவர் விராட் ஹோலி.

களத்தில் நமது திறமையை பற்றி ஆணவமாகவோ அல்லது நாகரிகமற்ற முறையிலோ சிந்திப்பதை தவிர்க்க வேண்டியது மிக முக்கியம்.

போட்டியின் போது என்ன நடந்தாலும் அமைதியை பின்பற்றுவது நல்லது, இது அனைத்து வீரர்களுக்கும் பொருந்தும்.

நமது திறமையின் மீது நமக்கு நம்பிக்கை இருக்க வேண்டியது முக்கியம்.

அதீத நம்பிக்கைக்கும், தன்னம்பக்கைக்கும், அமைதிக்கும் இடையே ஒரு மெல்லி கோடு வைத்து செயல் படுவதே நமது திறமை என ஹோலி கூறியுள்ளார். (க)

# பொலார்டுடன் ஏற்பட்ட மோதல் பிராவோவுக்கு அபராதம் விதிப்பு

சமீபத்தில் மும்பை-குஜராத் மோதிய ஐபிஎல் போட்டியின் போது பிராவோ,பொல்லார் உடன் மோதினார்.

இதனையெடுத்து பிராவோ ஐபிஎல் நன்னடத்தை விதியை மீறியதாகவும், இதனால் போட்டியின் சம்பளத்தில் இருந்து 50 சதவீதம் அபராதம் விதிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இது குறித்து பிராவோ தனது டுவிட்டர் பக்கத்தில கருத்து வெளியிட்டுள்ளார்.

களத்திலும், களத்திற்கு வெளியிலும் நாங்கள் இருவரும் சிறந்த நண்பர்கள், வேடிக்கைக்காக செய்தது ஒரு வழக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது என கூறியுள்ளார்.

கடந்த சனிக்கிழமை கான்பூரில மும்பை இந்தியன்ஸ் - குஜராத் லயனஸ் அணிகளுக்கு இடையிலான போட்டி நடைபெற்றது. இதில் குஜராத் லயன்ஸ் அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இப்போட்டியில், முதலில் துடுப்பெடுத்தாடிக்கொண்டிருந்த மும்பை அணியில் ஜோஸ் பட்லர் 33 ஓட்டங்கள் எடுத்து சிறப்பாக விளையாடிக் கொண்டிருந்த போது 14வது ஓவரில் அவரது விக்கெட்டை பிராவோ வீழ்த்தினார்.

இதையடுத்து பொலார்ட் களம் இறங்கினார். அந்த ஓவரின் கடைசி பநதை பொலார்ட் ஸ்ட்ரோக் வைக்க பந்து நேராக பிராவோ விடம் வந்தது.

பந்தை எடுத்த பிராவோ நேராக பொலார்டை நோக்கிச் சென்றார். அப்போது பொலார்ட் பிராவோவை







அடிக்கும் விதமாக துடுப்பாட்டமட்டையை தூக்கி தயாராக வைத்திருந்தார். அதேவேளையில் பொலார்டுடன் நெஞ்சுக்கு நேர் மோதினார். இது ஐபிஎல் நன்னடத்தை விதியை மீறியதாக தெரியவந்தது.

இதனால் போட்டியின் சம்பளத்தில் இருந்த 50 சதவீதம் அபராதமாக பிராவோவிற்கு விதிக்கப்பட்டுள்ளது. (க)

# மேலும் 2.5 இலட்சம் டொலர்களை அமெ.இலங்கைக்கு வழங்குகிறது

**இலங்கையில் வெள்ளம் மற்றும் நிலச் சரிவு அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அமெரிக்கா மேலும் இரண்டரை இலட்சம் டொலரகளை (38 மில்லியன் ரூபா) வழங்குவதாக அறிவித்துள்ளது.**

ஏற்கனவே, அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மனிதாபிமான உதவிகளுக்காக 50 ஆயிரம் டொலர்களையும், பாதிக்கப்பட்ட மக்களின் நீண்டகாலத் தேவைகளை நிறைவேற்ற மூன்றாண்டுத் திட்டத்தின் கீழ் 10 இலட்சம் டொலர்களையும் வழங்குவதாக அமெரிக்கா அறிவித்திருந்தது.

இந்த நிலையில், நேற்று முன்தினம் மேலதிகமாக, இரண்டரை இலட்சம் டொலரகளை வழங்குவதாக அமெரிக்கத் தூதரகம் தகவல் வெளியிட்டுள்ளது.

இதையடுத்து பாதிக்கப்பட்ட மக்களுக்கான அமெரிக்காவின் உதவித் தொகை 1.3 மில்லியன் டொலர்களாக (187 மில்லியன் ரூபா) அதிகரிக்கப்பட்டுள்ளது. (இ-10)

# நெருக்கடிக்குள் ஈழத் தமிழர்கள்

(கொழும்பு)

யுத்தம் நிறைவடைந்து 7 வருடங்கள் கடந்துள்ள நிலையிலும், இலங்கைத் தமிழர்கள் தொடர்ந்தும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாக, மலேசியாவின் பினாங் மாநில பிரதி முதல்வர் பீ. ராமசாமி தெரிவித்துள்ளார்.

யுத்த வெற்றியின் பின்னர் கிடைக்கப்பெற்ற சமாதானத்தின் நன்மைகள், அரசியல் உயர்குடிகள், வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கு கிடைத்துள்ள போதிலும், அங்கு வாழும் தமிழ் மக்களுக்கு கிட்டவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழர் விடுதலைப் போராட்டம் தோற்றம் பெறுவதற்கு காரணமாக அமைந்த, வடக்கு, கிழக்கு தமிழர்களின், இனப்பிரச்சினை உள்ளிட்ட, பிரதான மனித உரிமைப் பிரச்சினைகளுக்கு இன்னமும் தீர்வு கிடைக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

யுத்தம் இடம்பெற்ற காலத்திலான மனித உரிமை மீறல்கள், சித்திரவதைகள், பாலியல் வன்கொடுமைகள் மற்றும் காணாமற் போதல்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு சர்வதேச நிறுவனங்களும் அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகள் விடுத்து வரும் கோரிக்கைக்கு இதுவரையில் இலங்கை உரிய பதிலளிக்கவில்லை என்றும் குற்றம் சுமத்தினார்.

நல்லாட்சி என்றும், நல்லிணக்கம் என்றும் கூறும் மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அரசாங்கம், யுத்தக் குற்றச் செயல்களில் ஈடுபட்ட வர்களை தண்டிக்கத் தவறியுள்ளதாகவும் குற்றஞ்சாட்டினார். (இ-10)

# பசிலின் மற்றுமொரு முறைகேடு அம்பலம்

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ கொள்வனவு செய்த 16 ஏக்கர் காணி தொடர்பில் வர்த்தகர் திருக்குமரன் நடேசன் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

சுமார் 5 மணித்தியாலங்களாக அவரின் வாக்குமூலம் நேற்று முன்தினம் பதிவு செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருக்குமரன் நடேசன், நாடாளுமன்ற உறுப்பினர் நிருபமா ராஜபக்ஷவின் கணவராவார்.



இதன்படி பசில் ராஜபக்ஷவுக்கு சொந்தக்காரராவார்.

திருக்குமரன் நேற்று முன்தினம் காலை நிதிமோசடி பொலிஸ் பிரிவுக்கு அழைக்கப்பட்டு மாலையிலேயேவீடு செல்ல அனுமதிக்கப்பட்டார்.

மல்வானை என்ற இடத்தில் 2014 ஆம் ஆண்டு 64 மில்லியன் ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்பட்ட இந்த காணி திருக்குமரன் பெயரிலேயே பதிவு செய்யப்பட்டுள்ளது.

எனினும் இந்த காணியின் பெறுமதி 125 மில்லியன் ரூபாய்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தநிலையிலேயே இது தொடர்பான விசாரணைகள் ஆரமபிக்கப்பட்டுள்ளன.(இ-5)


## கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா:53 செவ் 1 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்:A/Lபிரான்ஸ் PR<br>தொ.இ: B/5881 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 41சூரி செவ் 2 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:ACCA/தனியார் தொழில்<br>தொ.இ: G/5897 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 10<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:O/L/ சொந்ததொழில்<br>தொ.இ: B/5859 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 47செவ் 8 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:BA/அரசதொழில்<br>தொ.இ: G/3634 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 28 உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:BE/ பொறியியலாளர் சிங்கப்பூர்<br>தொ.இ: B/5860 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 39 செவ் 12 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:BSc/ பொறியியலாளர்<br>தொ.இ: G/3957 |
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 33 செவ் 4 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:O/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/5861 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 8 உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்A/L/தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/5368 |

**கல்யாண மாலை**

(சர்வதேச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி,

யாழ்ப்பாணம்

பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே

தொடர்பு: 021 720 1005, 021 221 5434

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

( [illegible] )


## இராசி பலன்

**மீனம்** — நம்பிக்கைகள் நடைபெறும் நாள், வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள வள்ளல்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், மற்றவர்களின் மத்தியில் உங்களின் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**மேடம்** — மனக்குறை அகன்று மகிழ்ச்சி கூடும் நாள், வீட்டை அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், பொதுவாழ்வில் ஏற்பட்ட மனஸ்தாபம் அகலும்

**இடபம்** — சுற்றத்தாரை அனுசரித்து செல்வது நல்லது, பிள்ளைகள் வழியில் திடீர்ச் செலவுகள் ஏற்படலாம், பயணங்களின் போது கூடுதல் விழிப்புணர்வு அவசியம்.

**மிதுனம்** — விருந்தினர் வருகையால் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்படலாம், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், போசன சுகமுண்டு.

**கும்பம்** — எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி கிடைக்கும், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும் நாள், சமயோசித புத்தியால் பலரையும் கவர்வீர்கள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

| | | | |
|---|---|---|---|
| | புத | சூரி, சந் | |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>ரோகினி-மிருசீரிடம் | | |
| | | | குரு<br>ராகு |
| | சனி,<br>செவ் | | |

**இராசி பலன்**

24.05.2016

(வைகாசி 11, செவ்வாய்க்கிழமை)

சூரிய உதயம் காலை 5.54 மணிக்கு

திருதியை முழுவதும்

மூலம் பின்னிரவு 12.43 மணிவரை

சுபநேரம் 10.22-11.52 மணிவரை

இராகுகாலம் 2.52-4.22 மணிவரை

திருஞானசம்பந்தர் , திருநீலகண்ட யாழ்ப்பாணர் குருபூசை தினம்

அமிர்த சித்தம்

வளவன்

**கடகம்** — பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும் நாள், பயணங்களால் பலன் உண்டு, கடன்களை அடைக்க புதிய வழியைக் கையாள்வீர்கள்.

**மகரம்** — குடும்பத்தினர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள், உறவினர் வீட்டு சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, சயன சுகக் குறைவான நாள்.

**சிம்மம்** — எண்ணங்கள் எளிதில் கைகூடும் நாள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், புதிய நபர்களின சந்திப்பு இடம்பெறலாம், புண்ணிய காரியங்களில் ஈடுபாடு காட்டுவீர்கள்..

**தனுசு** — சிக்கனத்தை கடைப்பிடிக்க முற்படுவீர்கள், சோம்பலை விலக்குவது நல்லது, திடீர் பயணத்தால் வழக்கமான பணிகளில் சுணக்கம் ஏற்படலாம்.

**விருச்சிகம்** — பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, திடீர் பயணங்கள் தித்திக்க வைக்கும், பெரிய மனிதர்களின் தொடர்புகள் நன்மை தரும்.

**துலாம்** — இளைய சகோதர வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப்பெறுவீர்கள், நல்லவர்களின் தொடர்புகள் நன்மை தரும், பாராட்டும் புகழும் கூடும் நாள்.

**கன்னி** — இல்லத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள், செய்தொழிலில் சிறப்புகள் வந்து சேரலாம்.



யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் 40 ஆவது ஆண்டு நிறைவு விழா நிகழ்வு நேற்றைய தினம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் தலைவர் ஏ.எஸ்.அற்புதராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் ஸ்தாபகர்களான ஆர்.சிவகுமரன், கே.விஜயராஜசிங்கம், எஸ்.தர்மராஜா ஆகி யோர் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் தங்கப்பதக்கம் அணிவித்து கௌரவிக்கப்பட்டனர். அத்துடன் வடமாகாண முதலமைச்சருக்கு யாழ். விழிப்புலனற்றோர் சங்கம் சார்பாக நினைவுச்சின்னம் வழங்கப்பட்டதோடு கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. இந்த நிகழ்வில் கௌரவவிருந்தினர்களாக ஓய்வு பெற்ற அரச அதிபர் சி.பத்மநாதன், கைதடி நவீல்ட் பாடசாலையின் ஓய்வுபெற்ற அதிபர் ம.கோபாலகிருஷ்ணன், துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (படங்கள்: பொ.சோபிகா)

## சம்பந்தரின் குருபூசை

(யாழ்ப்பாணம்)

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரது குரு பூசை நிகழ்வு நீர்வேலி சி.சி.த.க. பாடசாலையில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு பாடசாலை அதிபர் தி.ரவீந்திரநாதன் தலைமையில் பிரார்த்தனை மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வில் கரந்தன் கருணாலய முகாமையாளர் ஐ.சிவராஜா திருஞான சம்பந்த நாயனார் குறித்து சிறப்பு சொற் பொழிவினை ஆற்றவுள்ளார்.

அதனைத் தொடர்ந்து மாணவர்களது கலை நிகழ்வுகளும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. (இ-136)

## கமநல சேவை உப நிலையம் பல வருடங்களாக முடக்கம்

வலிகாமம் மேற்கு பிரதேசத்திற்கு உட்பட்ட அராலி மத்தி பகுதியில் அமைந்து காணப்படும் கமநலசேவை உப நிலையம் பல ஆண்டுகளாக செயற்பாடுகள் இன்றிக் காணப்படுகின்றது. இக் கட்டடம் நீண்ட காலமாக பயன்படுத்தப்படாது சேதமடைந்து வருகின்றது.

அராலிப் பகுதியில் பெரும்பாலான மக்கள் விவசாயத்தினை பிரதான தொழிலாக செய்து வருகின்றனர். எனவே அவர்களின் விவசாய உற்பத்தியினை ஊக்குவிக்கும் முகமாக இந் நிலையம் செயற்பட வேண்டியது அவசியமானது ஆகும்.

இது தொடர்பில் கமநலத் துறைக்குப் பொறுப்பான அதிகாரிகள் எவ்விதமான நடவடிக்கையினையும் மேற்கொள்ளவில்லை. பிரதேசத்தின் முக்கிய வருமானமாகக் காணப்படும் விவசாயத்தினை விருத்தி செய்து கொள்வதன் மூலம் இப் பிரதேசத்தின் விவசாயம் சார்ந்த அபிவிருத்தியினை இலகுவாக மேற்கொள்ளமுடியும். எனவே இது தொடர்பில் மாகாண கமநல சேவை திணைக்களங்கள் மற்றும் பிரதேச விவசாய சம்மேளனங்கள் போன்றன உரிய நடவடிக்கையினை எடுத்து கமநல உப நிலையத்தினை மீளவும் இயங்க வைக்க வேண்டும் என்பதே பிரதேச வாழ் விவசாய மக்களின் எதிர்பார்ப்பாகும். (இ-91)

## முதியோருக்கான நாடக நிகழ்வு

கலாசார மற்றும் கலையலுவல்கள்ஊக்குவிப்புவேலைத் திட்டத்துக்கு அமைவாகநாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்தில் முதியோர் பக்திப்பாடல் மற்றும் நாடக நிகழ்வு நடைபெறவுள்ளது.

எனவே கலாசார அதிகார சபை உறுப்பினர்கள் தங்கள் பிரிவிலிருந்து நிகழ்வினை வழங்கவுள்ள கலைஞர்கள் மற்றும்முதியோர்களின்பெயர் விபரங்களை ஒருங்கிணைப்பாளரிடம் வழங்கி நிகழ்வுக்கு முழுமையாக ஒத்துழைப்பு வழங்கவும் என யாழ்.பிரதேச செயலாளர் பொன்னம்பலம் தயானந்தன் அறிவித்துள்ளார். (இ

## நிர்வாக சபைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப்பிரதேசகலாசார அதிகார சபை மற்றும் கலாசாரப்பேரவையின்நிர்வாக சபைக் கூட்டம் எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறும் என பிரதேச செயலர் பொன்னம்பலம் தயாநந்தன் அறிவித்துள்ளார். (இ

## வில்லூன்றிப் பெருவிழா

வில்லூன்றி விநாயகராலய வருடாந்தப் பெருவிழா நாளை மறுதினம் 26 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்துத் தினங்கள் நடைபெறும்.

தினமும் காலை 7.45 மணிக்கும் பிற்பகல் 5.30 மணிக்கும் வசந்தமண்டபப் பூசை நடைபெறும்.

ஜூன் மாதம் மூன்றாம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் 8.30 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு வசந்தமண்டபப் பூசையும் 9.30 மணிக்குத் தீர்த்தோற்சவமும் நடைபெறும்.(இ)




## பிற்போடல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டமானது தீர்மானிக்கப்பட்ட திகதியான இன்று 24ஆம் திகதி நடைபெறாது எனவும் கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது எனவும் நல்லூர் பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (இ

■■■■■■■■■■■■■■

நாளை புதன்கிழமை 25 ஆம் திகதி ஒழுங்கு செய்யப்பட்ட வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது என வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (இ

## தூய வேளாங்கண்ணி ஆலய திருவிழா நாளை

மிருசுவில் பழைய வாய்க்கால் தூய வேளாங்கண்ணி ஆலயத்தின் வருடாந்த திருவிழா நாளை 25 ஆம் திகதி புதன்கிழமை மாலை 5 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிமறுநாள்வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு ஆயத்த நாள் வழிபாடும் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு நற் கருணை விழாவும் 30 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6.30மணிக்கு திருவிழாதிருப்பலியும்அதனைத் தொடர்ந்து அன்னையின் திருச் சொரூப பவனி இடம் பெற்று அன்னையின் ஆசீர்வாதமும் இடம்பெறும்.

இத்திருவிழாவிற்கு இம்முறையும் பெருமளிவு பக்கதர்கள் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்பட்டுள்ளதால் சகல ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஆலய பரிபாலகர் அருள்தந்தை ஜேம்ஸ் அடிகளார் தெரிவித்துள்ளார். (இ

## யுத்த இழப்பீட்டை பெற்றுத்தந்து உயர்கல்வியை தொடர்வதற்கு வழி செய்யுமாறு கோரிக்கை

### முதலமைச்சர், ஆளுநருக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

யுத்த இழப்பீட்டினை பெற்றுத்தந்து உயர் கல்வியைத் தொடர வழிசெய்யுமாறு கோரி வடமாகாண ஆளுநர் மற்றும் வடமாகாண முதலமைச்சரிடம் இளவாலைப்பகுதியை சேர்ந்த இரு மாணவர்கள் கடிதம் ஒன்றினை கையளித்துள்ளனர்.

யுத்தத்தினால் வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து தற்போது சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட இளவாலை மாரீசன் கூடலில் வசித்துவரும் குடும்பத்தில் உள்ள அருள்ஞானசீலன் அருள்நாயகன் மற்றும் அருள்ஞானசீலன் ரூபகன் ஆகிய 2 மாணவர்களே இவ்வாறு அவசர உதவிகோரி கடிதம் ஒன்றினை கையளித்துள்ளனர்.

அவர்களுடைய கடிதத்தில் மேலும் குறிப்பிடுகையில், கடற்றொழிலை வாழ்வாதாரமாக கொண்ட எமது குடும்பம் கடந்த 2011 ஆம் ஆண்டு இறுதி யுத்தத்தின் போது 7 இலட்சம் பெறுமதியான புதிய படகு, இயந்திரம், வலைகள் என்பவற்றை முற்றாக இழந்துள்ளோம் தொழிலை மீள ஆரம்பிப்பதற்காக கடந்த 2011 ஆம் ஆண்டு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் பதிவு மேற்கொண்ட போதும் இதுவரை எமக்கு எந்த உதவிகளும் கிடைக்கவில்லை.

இதனால் எமது தொழிலை மீண்டும் ஆரம்பிக்க முடியாமல் கூலித்தொழில் மேற்கொண்டுவருகிறோம். எமது குடும்பத்தில் 6 அங்கத்தவர்கள் இருப்பதனால் வாழ்வாதாரத்தை கொண்டு செல்ல முடியாமல் உள்ளது.

தற்போது தொழில் இன்றி மிகவும் வறுமையில் வாடுகிறோம். நாம் இருவரும் உயர் கல்வியை தொடர முடியாமல உள்ளது. எமது இரு சகோதரர்களின் கல்வியும் பாதிக்கின்ற நிலைமையில் உள்ளது. எனவே தயவு செய்து நாம் வாழ்வதற்கும் கல்வியைத் தொடரவும் எமது தந்தை மீளத் தொழிலை ஆரம்பிப்பதற்கும் எமக்குரிய கொடுப்பனவை விரைவாக வழங்க உதவி செய்யுங்கள் என அக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக் கடிதத்தினை கடந்த 12 ஆம் திகதி வடமாகாண ஆளுநர் மற்றும் யாழ். மாவட்ட அரச அதிபர் ஆகியோருக்கும் கடந்த 18 ஆம் திகதி முதலமைச்சரின் அலுவலகத்தல் கையளித்துள்ளனர். (இ-9)



நெடுந்தீவு ஐக்கிய இராச்சியக் கிளையின் ஏற்பாட்டில் குமுதினி படுகொலை நினைவாக அண்மையில் நெடுந்தீவில் தென்னங்கன்றுகள் விநியோகிக்கப்பட்டுள்ளது. 1985ஆம் ஆண்டு மே மாதம் 15ஆம் திகதி நெடுந்தீவில் இருந்து குறிகாட்டுவான் நோக்கிச் சென்று கொண்டிருந்த குமுதினி படகில் பயணம் செய்தவர்கள் மீது கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் 36 பேர் படுகொலை செய்யப்பட்டனர். அவர்களது 31 ஆவது ஆண்டு நினைவையொட்டி நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் தென்னங்கன்றுகளை வழங்கி வைக்கும் நிகழ்ச்சி கடந்த 14 ஆம் திகதி நடைபெற்றது. கோட்டக்கல்விப் பணிப்பாளர் திருமதி கி.சாரதாதேவியின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், மாகாணசபை உறுப்பினர் விந்தன் கனகரட்ணம் ஆகியோர் கலந்து கொண்டு 700 தென்னை மரக்கன்றுகளை வழங்கி வைத்துள்ளனர்.

நல்லூர் ஸ்ரீதேவி வில்லிசை
கலைமாமணி
Dr.S.S. சர்மா குருஜி
076 725 6024 (C-4662)
நந்தாவில் அம்மன் கோவில், கொக்குவில்

# பொருட்களுக்கான உத்தரவாதப் பத்திரம் 3 மொழிகளிலும் வெளியிடப்பட வேண்டும்

## வர்த்தமானி அறிவித்தல்

இலங்கையில் பண்டங்களுக்கான உத்தரவாதப் பத்திரம் மூன்று மொழிகளையும் உள்ளடக்கிய வகையில் வெளியிடப்பட வேண்டுமென நுகர்வோர் விவகார அதிகாரசபை வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை வெளியிட்டுள்ளது.

பொருட்களை கொள்வனவு செய்யும் போது வழங்கப்படும் உத்தரவாத சான்றிதழ்களின் உள்ளடக்கம் எதிர்வரும் ஆண்டு ஜனவரி மாதம்முதல் மூன்று மொழகளிலும் அச்சிடப்பட வேண்டுமென வர்த்தமானி அறிவிததலில் குறிப்பிடப்பட்டுள்ளது. நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை 1966/43 என்ற இலக்க வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை வெளியிட்டுள்ளது.

நீண்ட காலம் பயன்படுத்தக் கூடிய பண்டங்களுக்காக வழங்கப்படும் உத்தரவாதச்சான்றிதழ்தற்போது ஆங்கில மொழியில் அச்சிடபபட்டு வழங்கப்படுகின்றது.

ஆங்கில மொழியறிவு அற்றவர்களுக்கு இந்த சான்றிதழ்களின் உள்ளடக்கம் நிபந்தனைகள் பற்றி தெரிந்து கொள்ள முடியாத நிலைமை காணப்படுகின்றது.

இது தொடர்பில் நுகர்வோர் அதிகாரசபைக்கு அடிக்கடி முறைப்பாடுகள் கிடைக்கப் பெறுவதாக தெரிவிக்கப படுகிறது.

இதன்படி, எதிர்வரும் ஆண்டு முதல் உத்தரவாத சான்றிதழின் அனைத்து விடயங்களும் மூன்று மொழிகளிலும் (சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம்) அச்சிடப்பட்டு வழங்கப்படும் என நுகர்வோர் அதிகாரசபையின் தலைவர் ஹசித திலகரட்ன ஊடக அறிக்கை ஒன்றின் மூலம் மேலும் தெரிவித்துள்ளார். (இ-10)

# சீருடைகளை இழந்தவர்கள் சாதாரண உடையில் பாடசாலைக்குச் செல்லலாம்

## கல்வியமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

சீரற்ற காலநிலையால் தமது பாடசாலை சீருடைகளை இழந்த மாணவர்கள், சாதாரண உடையில் பாடசாலைக்கு சமுகமளிக்கலாமென கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த சில நாட்களாக தொடர்ந்த இயற்கையின் சீற்றத்தால் ஏற்பட்ட அனர்த்தங்களில், பாடசாலை சீருடைகள் காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்பட்டதைய டுத்து, இத்தீர்மானம் எடுக்கப் பட்டதாக கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.



அத்தோடு, அசாதாரண காலநிலையால் பாதிப்புக்குள்ளான உயர்தர பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களின் பதிவு புத்தகங்களுக்கு பதிலாக, பிரதி செய்யப்பட்ட பதிவு புத்தகங்களை வழங்க நடவடிக்கை எடுக்கபட்டுள்ளது. கொழும்பு பல்கலைக்கழகம் இவ் வேலைத திட்டத்தை முன்னெடுத்துள்ளது.

இதேவேளை, இயற்கை அனர்த்தங்களால் பாதிப்புற்ற மக்கள் தொடர்ந்தும் பாடசாலைகள் மற்றும் வணக்கஸ் தலங்களில் தங்கியுள்ள நிலையில், சப்ரகமுவ மாகாணத்தின் 52 பாடசாலைகள் மற்றும் கேகாலை, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களின் 32 பாடசாலைகள் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

## கிளிநொச்சி சிவபூமி பாடசாலை திறப்பு விழா அழைப்பிதழ்

காலம்
26.05.2016 வியாழக்கிழமை மு.ப 9.30 மணி

**தலைவர்**
செஞ்சொற்செல்வர் கலாநிதி.ஆறு திருமுருகன்
*(தலைவர்-சிவபூமி அறக்கட்டளை)*

**இடம்**
சிவபூமி பாடசாலை
*முதலாம் பண்ணை வீதி, கனகபுரம், கிளிநொச்சி.*
*021 228 5938*

நிகழ்ச்சி நிரல்
9.00 மணி கோவில் வழிபாடு, ஊர்வலம்
9.25 மணி திருமுறை பாராயணம்
9.30 மணி பாடசாலை திறந்து வைத்தல்

வரவேற்புரை
**திரு.ம.தயாகரன்**
(இணைச் செயலாளர்-சிவபூமி அறக்கட்டளை)

**ஆசியுரை**
ஸ்ரீலஸ்ரீ.சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்
(முதல்வர்-நல்லை ஆதீனம்)
ஆன்மீக சுடர் ரிஷி.தொண்டுநாதன் சுவாமிகள்
(அமெரிக்கா)
சிவஸ்ரீ.கணேசானந்த சுவாமிகள்
(முதல்வர்-மகாதேவ ஆச்சிரமம்)
பிரமச்சாரி ஜாக்கிரத சைதன்யா சுவாமிகள்
(முதல்வர்-சின்மயாமிஷன்-யாழ்ப்பாணம்)
பிரமச்சாரி.சிவேந்திர சைதன்யா சுவாமிகள்
(முதல்வர்-சின்மயாமிஷன் -கிளிநொச்சி
வணபிதா.சி.யோசுவா
(பணிப்பாளர்-காவேரி கலாமன்றம்)

பாடசாலை குறிக்கோள் அறிமுகவுரை
வைத்திய நிபுணர் வேலும்மயிலும் ஜெகரூபன்
(மன நோயியல் நிபுணர்-மாவட்ட பொது வைத்தியசாலை,கிளிநொச்சி)
வைத்திய நிபுணர் நடராசா சரவணபவ
(மகப்பேற்று பெண் நோயியல் நிபுணர்- மாவட்ட பொது வைத்தியசாலை,கிளிநொச்சி)

வாழ்த்துரை
திரு.ஆறுமுகம் நடராஜன்
(துணைத்தூதுவர்-இந்திய தூதராலயம்,யாழ்ப்பாணம்)
திரு.கந்தையா நீலகண்டன்
(தலைவர்-அகில இலங்கை இந்துமாமன்றம்)
திரு.சுந்தரம் அருமைநாயகம்
(அரசாங்க அதிபர்-கிளிநொச்சி மாவட்டம்)
திரு.அன்றூ அம்பலவாணர் ஆனந்தராசா
(மாவட்ட நீதிபதி-கிளிநொச்சி)
கலாநிதி.அருளம்பலம் அற்புதராஜா
(பீடாதிபதி-பொறியியற்றுறை யாழ்.பல்கலைக்கழகம்-கிளிநொச்சி)
திரு.கோபாலபிள்ளை நாகேஸ்வரன்
(பிரதேச செயலர்-கரைச்சி,கிளிநொச்சி)
திரு.கந்தசாமி முருகவேள்
(வலயக் கல்விப் பணிப்பாளர்-கிளிநொச்சி)
திரு.கணேசன் கம்சநாதன்
(செயலாளர்-பிரதேச சபை கரைச்சி)

**கலை நிகழ்ச்சிகள்**
சிவபூமி பாடசாலை மாணவர்கள் (கோண்டாவில்)

**நிறைவுரை**
திரு.பு.ஸ்ரீவிக்னேஸ்வரன்
(இணை செயலாளர்-சிவபூமி அறக்கட்டளை)

மதிய விருந்து
நிறைவு

கலாநிதி ஆறு.திருமுருகன் தலைவர்
கண் வைத்திய நிபுணர் ச.குகதாசன்- பொருளாளர்
திரு.பு.ஸ்ரீவிக்னேஸ்வரன்
திரு.ம.தயாகரன்- இணைச் செயலாளர்

தலைமை அலுவலகம்
சிவபூமி, கோண்டாவில்,
யாழ்ப்பாணம், இலங்கை.
Sivapoomi@gmail.com
www.Sivapoomi.com/Org
021-222-7938

நிர்வாக சபை
சிவபூமி அறக்கட்டளை
இலங்கை.

## யாழ்.போதனா வைத்தியசாலையிலுள்ள சிற்றுண்டிச்சாலையை ஒப்பந்த அடிப்படையில் குத்தகைக்கு வழங்குதல் 01.07.2016 தொடக்கம் 30.06.2017 வரை

யாழ்.போதனா வைத்தியசாலை பிராந்திய பெறுகைகள் குழு தகுதியான/ தகைமை வாய்ந்த சிற்றுண்டிச்சாலை நடத்துநர்களிடமிருந்து 01.07.2016 தொடக்கம் 30.06.2017 வரையான காலப் பகுதிக்கு யாழ்.போதனா வைத்தியசாலையில் அமைந்துள்ள சிற்றுண்டிச்சாலையினை நடத்துவதற்கு முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றோம்.

1. நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர்கள் இவ் வைத்தியசாலையில் கிடைக்கும் "கேள்வி கோரும் ஆவணங்களைப் பெறுவதற்கான விண்ணப்பம்" என்ற படிவத்தினை பூர்த்தி செய்து மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக ரூபா 500/- காசாக அலுவலக காசாளரிடம் செலுத்தி பெறுகைப் பத்திரங்களை அலுவலக நாட்களில் 24.05.2016 தொடக்கம் 09.06.2016 வரையான காலப்பகுதியில் (மு.ப.) 09.00 மணி தொடக்கம் (பி.ப.) 03.00 மணிவரை (பி.ப. 12.30 தொடக்கம் பி.ப. 01.00 மணி தவிர்ந்த) நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

2. கேள்விதாரர்கள் மீளளிக்கப்படக்கூடிய வைப்புக் கட்டணமாக (Bid Bond) ரூபா 20,000/- ஐ அலுவலகத்தில் செலுத்தி அதனுடைய பற்றுச்சீட்டின் மூலப் பிரதியையும் கேள்வி விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.

3. விண்ணப்பப்படிவங்களைப் பெற வரும் போது உணவகத்திற்குரிய வியாபார பெயர்ப்பதிவுச் சான்றிதழின் (Business Registration) பிரதியையும் சுகாதாரப் பகுதியினால் வழங்கப்பட்ட "A" அல்லது "B" தரச் சான்றிதழின் பிரதியையும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

4. விலைக் கேள்விகள் 10.06.2016 ஆம் திகதி (பி.ப.) 03.00 மணிக்கு முன்பதாக இப்போதனா வைத்தியசாலையின் கணக்காளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட விலைக் கேள்விகள் கேள்வி நேர முடிவில் விலைக் கேள்வியாளர்கள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும்.

5. தகுதிவாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களையும் விலைக் கேள்வி பத்திரங்களையும் அலுவலக நேரங்களில் கீழ்க் காட்டப்பட்ட முகவரியில்/ தொலைபேசி இலக்கத்துடன் 021 222 2261 Inter com 202 தொடர்பை ஏற்படுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

6. கிடைக்கப்பெற்ற விலைக் கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக் கேள்வியாளர்களுக்கான பொறுப்புகள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச் செய்வதற்கு பிராந்திய பெறுகைகள் குழுவிற்கு அதிகாரமுள்ளது.

7.வைத்தியசாலை உணவகத்தினை மிகவும் தரமான முறையில் நடத்த முடிவு செய்யப்பட்டிருப்பதனால் அவ்வாறான கேள்வி ஒப்பந்தகாரர்கள் எதிர்பார்க்கப் படுகின்றனர்.

(சி-46671)

தலைவர்/பணிப்பாளர்.

## வலயக் கல்விப்பணிப்பாளர் வெற்றிடத்திற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(மல்லாவி)


வடக்கு மாகாண கல்வி யமைச்சிற்குட்பட்ட வவுனியா தெற்கு கல்வி வலயத்திற்கான வலயக் கல்விப் பணிப்பாளர் வெற்றிடத்திற்கு வடக்கு மாகாணத்தில் கடமையாற்றுகின்ற இலங்கை கல்வி நிர்வாக சேவை- I,II (பொது) ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுவதாக வடக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது,

எதிர்வரும் 15.08.2016 ஆம் ஆண்டு தொடக்கம் வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் ஏற்படவுள்ள வலயக் கல்விப் பணிப்பாளர் வெற்றிடத்திற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் இன்றுடன் முடிவடையவுள்ள இவ் வெற்றிடத்திற்கான விண்ணப்பப் படிவங்களை தாங்கள் கடமையாற்றுகின்ற வலயக் கல்வி அலுவலகங்களில் பெற்று அதனைப் பூரணப்படுத்தி அந்தந்த வலயக் கல்விப் பணிப்பாளர்களின் சிபார்சுடன் செயலாளர், கல்வியமைச்சு, வடக்கு மாகாணம், செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்குமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

## உருத்திரபுரத்தில் வெள்ளப்பெருக்கில் பாதிக்கப்பட்ட 81 குடும்பங்களுக்கு உதவிப் பொருட்கள் வழங்கல்



( கிளிநொச்சி)

நயினை சிவகாமி அறக்கட்டளை நிறுவனத்தினால் உருத்திரபுரத்தில் வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்ட 81குடும்பங்களுக்கு உதவிப் பொருட்கள் அண்மையில் வழங்கப்பட்டன.

அத்துடன் பாதிக்கப்பட்ட மேற்படி குடும்பங்களுக்கு தலா ஆயிரத்து 500 ரூபா பணம், கல்வி கற்கும் மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் என்பன வழங்கப்பட்டன.

சிவகாமி நினைவாக அவரது பிறந்த தினத்தை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்வில் அறக்கட்டளை நிறுவுநர் எஸ்.மகாதேவா மற்றும் உருத்திரபுரம் கிராம அலுவலர் ஆகியோர் உதவிப் பொருட்களை வழங்கி வைத்தனர். (2-254)

## அடுத்தாண்டுக்கான செயற்பாடுகள் தொடர்பான திட்டமிடல் செயலமர்வு

(மல்லாவி)

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்திற்குட்பட்ட கல்வி வலயங்களில் கடமையாற்றுகின்ற விஞ்ஞான பாட உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் , களத் துறை கல்வி மத்திய நிலையப் பொறுப்பாசிரியர்கள் ஆகியோருக்கான எதிர்வரும் 2017 ஆம் ஆண்டுக்கான செயற்பாடுகள் தொடர்பான திட்டமிடல் செயலமர்வு எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணி வரை மருதனார் மடம் சுன்னாகத்தில் உள்ள வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் ஒன்று கூடல் மண்டபத்தில் நடைபெறும் என வடக்கு மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி) திருமதி பி.செல்வின் இரேமியஸ் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

மேற்படி செயலமர்வில் கலந்து கொள்ளவுள்ளோர் செயலமர்விற்கு வருகை தரும் போது தங்கள் கல்வி வலயத்தில் எதிர்வரும் 2017 ஆம் ஆண்டு அமுல்படுத்தப்படவுள்ள விஞ்ஞான பாட செயற்பாடுகள் தொடர்பான திட்டம், தங்கள் வலயத்திற்குட்பட்ட சக்தி வள கழகங்களின் செயற்பாடுகளின் முன்னேற்ற அறிக்கை, தங்கள் வலயத்தில் புதிதாக தரம் 12 இல் விஞ்ஞானப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ள (2018 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தர விஞ்ஞானப் பிரிவில் தோற்றவுள்ள) மாணவர்களின் பாடசாலை மற்றும் பாட ரீதியான விபரம், இவ் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பிரிவில் புதிதாக விஞ்ஞானப் பிரிவு ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகளின் விபரம், அவற்றுக்கான தேவைகள் ஆகியவற்றுக்கான தரவுகளை வன் பிரதிகளுடன் மென் பிரதிகளையும் எடுத்து வருமாறு அவர் கேட்டுள்ளார். (2-15)

## புளொட் அமைப்பின் 8 ஆவது தேசிய மாநாடு வவுனியாவில்



ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் (புளொட்) 8 ஆவது தேசிய மாநாடு நேற்று முன்தினம் வவுனியா, கோவில்குளம், ஆதி மண்டபத்தில் நடைபெற்றது.

முன்னதாக புளொட் அமைப்பின் செயலதிபர் உமாமகேஸ்வரனின் நினைவு இல்லத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் அங்கிருந்து கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் ஊர்வலமாக சென்று உமாமகேஸ்வரன் சந்தியில் அமைந்துள்ள ஆதி மண்டபத்தில் மாநாட்டு நிகழ்வுகள் நடைபெற்றது.

இதில் புளொட் அமைப்பின் தலைவரும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன், மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான பா.கஜதீபன், க.சிவனேசன், ஜி.ரி. லிங்கநாதன், 14 நாடுகளில் இருந்து வந்த புளொட் அமைப்பின் உறுப்பினர்கள், கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-250)

## சமகால அரசியல் நிலைப்பாடுகள் குறித்து மக்களுடன் கலந்துரையாடல்

(குருமன்காடு)

சமகால அரசியல் நிலைப்பாடுகள் தொடர்பாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி பொது அமைப்புகளுடன் கலந்துரையாடலொன்றை மேற்கொண்டது.

வவுனியா முத்தையா மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இக் கலந்துரையாடலில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகமும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன், வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான எம்.பி. நடராசா, எம்.தியாகராசா, ஆர்.இந்திரராசா ஆகியோர் கலந்துகொண்டிருந்ததுடன் மாகாண சபை உறுப்பினர்களின் குறித்தொதுக்கப்பட்ட நிதியில் உதவி பெறும் அமைப்புகளின் பிரதிநிதிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது சமஷ்டி முறையின் உள்ளாந்தம். தமிழ் மக்களின் அரசியல் தீர்வு எதிர்பார்ப்புகள், எதிர்கால அரசியல் போக்குகள் எனப் பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டிருந்தன. (2-250)




## இளைஞர், யுவதிகளுக்கு இலவச தொழிற்சந்தை

கிளிநொச்சி மாவட்ட இளைஞர் யுவதிகளுக்கான இலவச தொழிற்சந்தை இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 தொடக்கம் நண்பகல் 12 மணி வரை கிளிநொச்சி டிப்போ சந்தியில் உள்ள கூட்டுறவு கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

க.பொ.த. சாதாரண தரம், க.பொ.த. உயர்தரம் மற்றும் ஏதேனும் தொழில் பயிற்சியை முடித்து தொழிலற்று இருக்கும் இளைஞர், யுவதிகளுக்கான தொழில் வாய்ப்பை பெற்றுக் கொள்வதற்கு இத் தொழில் சந்தை உதவுகின்றது.

அத்துடன் க.பொ.த. சாதாரண தரம் வரை படித்தவர்களுக்கு அதிக மான வேலை வாய்ப்பு மற்றும் தொழில் பயிற்சிக்கான சந்தர்ப்பமாகும்.

ஆதலால் வருகை தருபவர்கள் சுய விபரக் கோவையுடன் சமுகம் தருமாறு கேட்கப்படுகின்றனர்.

மேலதிக தகவல்கள் தேவைப்படுவோர் 011 532 5362, 077 441 0086 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும்.

கிளிநொச்சி மாவட்டச் செயலக மனிதவள அபிவிருத்திப் பகுதியினர் மற்றும் புலம் பெயர்தலுக்கான சர்வதேச அமைப்பு ஆகிய வற்றின் ஒருங்கிணைப்புடன் இந்த இலவச தொழிற் சந்தை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)



கிளிநொச்சி பரந்தன் குமரபுரம் கால் ஏக்கர் குடியிருப்புக்குச் செல்லும் பிரதான வீதியில் உள்ள பாலம் கொட்டித் தீர்த்த மழையினால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக சேதமடைந்து உடைந்த நிலையில் காணப்பட்டது. இதனூடாக போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில் நேற்று முன் தினம் பொதுமக்கள் ஒன் றிணைந்து சிரமதானப்பணி மூலம் போக்குவரத்துக்காக குறித்த பாலத்தை புனரமைத்துள்ளன.

(படம்:-மல்லாவி செய்தியாளர்)

## 9 இலட்சம் ரூபா செலவில்

## 75 பனம் கைப்பணிப் பயனாளிகளுக்கு கைப்பணி உபகரணங்கள் வழங்கப்பட்டது

பனை அபிவிருத்திச் சபையினால் வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த 75 பனம் கைப்பணிப்பயனாளிகளுக்கு 9 இலட்சம் ரூபாய் செலவில் பனம் கைப்பணி உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

குறித்த உபகரணம் வழங்கும் நிகழ்வானது பனை அபிவிருத்தி சபையின் தலைவர் மா.கணபதிப்பிள்ளை தலைமையில் கடந்த 20 ஆம் திகதி வவுனியா பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் முற்பகல் 10 மணிக்கும் பனை அபிவிருத்தி சபையின் மன்னார் மாவட்டக் காரியாலயத்தில் பிற்பகல் 2 மணிக்கும் நடைபெற்றது.

வவுனியாவில் நடைபெற்ற நிகழ்வில் 30 பயனாளிகளுக்கு தலா 12 ஆயிரம் ரூபாய் பெறுமதியான உபகரணங்கள் வழங்கப்பட்டதுடன் மூலப்பொருள் கொள்வனவுக்காக கொடுப்பனவுக் காசோலைகளும் வழங்கப்பட்டன.

அத்துடன் மன்னாரில் நடைபெற்ற நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட 45 பயனாளிகளுக்கு தலா 12 ஆயிரம் ரூபாய் பெறும்தியான உபகரணங்களும் மூலப் பொருட் கொடுப்பனவுக்கான காசோலைகளும் வழங்கப்பட்டன.(2-9)

## வெள்ளப்பெருக்கு நிலைமைகள் குறித்து பொதுமக்களுடன் கலந்துரையாடல்

( கிளிநொச்சி )

கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு தொடர்பாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக கெயர்சோவா, ஒக்ஸ்பாம் அக்ரெட், வேள்விசன், சிறீலங்கா ரெட் குறோஸ், கன்டி கப் ஆகிய நிறுவனங்கள் முன்வந்துள்ளன.

இதனடிப்படையில் கெயர் நிறுவனம் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள உருத்திரபுரம் கிழக்கு,சிவநகர் கிராமங்களையும் பளை பிரதேசசெயலர் பிரிவில் கோவில்வயல் கிராமத்தையும் பொறுப்பேற்றுள்ளது.

இதன்படி நேற்று முன்தினம் முற்பகல்10 மணியளவில் கெயர் நிறுவனப் பிரதிநிதி சிவநகர் கிராம பொதுமண்டபத்தில் இப்பகுதிப் பொதுமக்கள் மற்றும் அமைப்புகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து வெள்ளப் பாதிப்பு ஏற்படுத்தும் நிலைமைகள், அதற்காகச் செய்யப்பட வேண்டிய தீர்வுகள் தொடர்பாகக் கலந்துரையாடி தரவுகளையும் பெற்றுக் கொண்டார்.


இக்கிராமத்தில் உள்ள பொதுமக்களும் கிராம அலுவலர் அபிவிருத்தி அலுவலரும் கிராமத்தின் நிலைமைகளை அவருக்குத் தெளிவுபடுத்தினர்.


இதேபோன்று ஏனைய நிறுவனங்களும் வெவ்வேறு கிராமங்களைப் பொறுப்பேற்று நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (2-254)


## வடக்கு மாகாண சபையின் அனுமதி கிடைக்கப்பெற்றதும் வேலைத்திட்டங்கள் துரித கதியில் நிறைவேற்றப்படும்


மன்னார் பிரதேச சபை யினால் 2016ஆம் ஆண்டுக்கான பல்வேறு அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் மிக துரித கதியில் மேற் கொள்ளப்பட்டு வருவதாக மன்னார் பிரதேச சபையின் செயலாளர் இராசையா தயாபரன், நேற்று முன்தினம் தெரிவித்தார்.

அபிவிருத்தித் திட்டம் தொடர்பில் அவர் மேலும் கூறுகையில், "இந்த வருடத்தில் எம்மால் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள், பிர தேச ரீதியாக சமமாகவும் தெரிவு செய்யப்பட்டும் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. தலைமன்னார் கிராமத்தில் சுற்றுலாத்தள நிர்மாணம், பேசாலை தெற்கு சென்.அந்தோனியார் உள்ளக வீதி புனரமைப்பு, பெரியகரிசல், சின்னக் கரிசல் உள்ளக வீதி புனரமைப்பு, தாழ்வுபாடு சென் அந்தோனியார் வீதி புனரமைப்பு, முதலை உள் ளக வீதி, தாழ்வுபாடு பாடசாலை கொங்கிறீட் வீதி போன்றவை புனரமைக்கப்படுகின்றன. மேலும் வீதி விளக்குகள் பொருத்துதல், இறைச்சி கடைகள் நிர்மாணித்தல், வீதிகள் திருத்த வேலைகள், நீர் விநியோகம் என பல வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் வடக்கு மாகாண சபை அதிகாரிகளிடம் அனுமதியினைபெற ஆவணங்களை அனுப்பி வைத்துள்ளோம். அனுமதி கிடைக்கப் பெற்றதும் குறித்த வேலைத் திட்டங்களும் துரித கதியில் நிறைவேற்றப்படும்" என அவர் மேலும் கூறினார்.(2)








வரலாற்று பிரசித்தி பெற்ற வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த வைகாசி விசாகப் பொங்கல் நேற்று அதிகாலை 4 மணிக்கு ஆரம்பமானது. முள்ளியவளை காட்டா விநாயகர் ஆலயத்தில் இருந்து மடப்பண்டம் எடுத்து வரப்பட்டு ஆலயத்தில் வழிபாடுகள் நடைபெற்று பொங்கல் இடம்பெற்றது. பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் ஆலயத்திற்கு வருகை தந்து தமது நேர்த்திக் கடனை செலுத்தினர். அத்துடன் பால்செம்பு,காவடிகள் என்பன நேர்த்திக்காக எடுக்கப்பட்டதை படங்களில் காணலாம். (படங்கள்:-க.கீர்த்தனா,பனிக்கன்குளம்செய்தியாளர்)

# மீனவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண அமைக்கப்பட்ட குழுவின் செயற்பாடு மந்தகதியில்



(முல்லைத்தீவு)

வெளிமாவட்ட மீனவர்களின் ஊடுருவலினால் முல்லைத்தீவு மாவட்ட மீனவர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் குறித்து ஆராய்ந்து, அவற்றுக்கு நிரந்தரமான தீர்வை காண்பதற்காக கடற்றொழில் அமைச்சால் நியமிக்கப்பட்ட 8 பேர் கொண்ட குழு செயற்படாமல் இருப்பதாக மீனவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்தக் குழு ஒரு வார காலத்துக்குள் ஆராய்வுகளை மேற்கொண்டு, அமைச்சுக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் எனக் கூறப்பட்ட போதும், 1 1/2 மாதங்கள் கடந்தும், குழு செயற்படாமல் இருக்கின்றது.

குழுவின் அசமந்தப்போக்கு குறித்து மீனவர்கள், தங்கள் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு வெளிமாவட்ட மீனவர்களின் ஊடுருவலைத் தடுப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்டவர்களைக் கோரியுள்ளனர்.

முல்லை. மாவட்ட கடற்பரப்பில் வெளி மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்கள் அத்துமீறி தொழில் செய்வதுடன் சட்டவிரோதமான முறையில் தடை செய்யப்பட்ட தொழில்களிலும் ஈடுபட்டு வருகின்றார்கள். இதனால் முல்லை. மாவட்ட மீனவர்கள் தொழில் ரீதியாகப் பாதிக்கப்பட்டு வருவதுடன் கடலுணவுகளின் உற்பத்தியிலும் வீழ்ச்சி ஏற்படுகின்றது.

இந்நிலை குறித்து பாதிக்கப்பட்ட மீனவர்கள், கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகளிடமும் கடற்றொழில் அமைச்சரிடமும் பல தடவைகள் சுட்டிக்காட்டியதைத் தொடர்ந்து இதற்கு சமரசமான முறையில் தீர்வு காண முன் வந்துள்ள கடற்றொழில் அமைச்சர் கடந்த ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டத்துக்கு வருகை தந்து பாதிக்கப்பட்ட மீனவர்களுடனும் கலந்துரையாடினார்.

இதையடுத்து இப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு கிட்டும் வகையில், வெளி மாவட்ட மீனவர்களின் ஊடுருவல் பற்றியும் எத்தனை மீனவர்கள் தொழிலில் ஈடுபடுகின்றார்கள், இதனால் ஏற்படும் பாதிப்புக்கள் என்பன பற்றியும் விரிவாக ஆராய்ந்து ஒருவார காலத்துக்குள் அறிக்கை சமர்ப்பிப்பதற்காக திட்டமிடல் கண்காணிப்பு பணிப்பாளர் தலைமையில் 8 பேர் கொண்ட குழுவொன்றை நியமித்திருந்தார்.

இக்குழுவில் கரைதுறைப்பற்று பிரதேச செயலர், முல்லை. மாவட்ட கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் உட்பட பல அதிகாரிகள் அங்கம் வகிக்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (2)

# உழவு இயந்திரம் கிணற்றினுள் வீழ்ந்து விபத்துக்குள்ளானது

விவசாய நடவடிக்கைக்காக உழவு வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த உழவு இயங்திரமொன்று திடீரென வேகக் கட்டுப்பாட்டை இழந்து கிணற்றினுள் விழுந்து விபத்துக்குள்ளானது. இவ்விபத்தில் சாரதி சிறு காயங்களுக்கு உள்ளானார்.

இச்சம்பவம் நேற்று கிளிநொச்சி மலையாளபுரத்தில் இடம்பெற்றது.இது தொடர்பில் தெரியவருவதாவது,






கிணற்றினை சுற்றி உழவு வேலை செய்து கொண்டிருந்த உழவு இயந்திரம் கட்டுப்பாட்டை இழந்து கிணற்றினுள் விழுந்துள்ளது. இதன் போது சாரதி சிறு காயங்களுக்கு உள்ளான நிலையில் அயலவர்களால் காப்பாற்றப்பட்டார். சுமார் 35 அடி ஆளமான கிணற்றில் நீர் அதிகமாக காணப்பட்டுள்ளது.

இதனால் குறித்த கிணற்றில் இருந்த நீரினை கிராம மக்களின் ஒத்துழைப்புடன் அகற்றிய பின்னர், உழவு இயந்திரம் மீட்கப்பட்டது,


குறித்த கிணறு பாதுகாப்பற்ற கிணறு என்பது குறிப்பிடத்தக்கதாகும். (2-15)

# வெசாக் தினத்தை முன்னிட்டு பொலிஸாரினால் மாடு வழங்கப்பட்டது

வெசாக் தினத்தினை முன்னிட்டு தர்மபுரம் பொலிஸாரினால் வறுமைக் கோட்டிற்குட்பட்ட குடும்பம் ஒன்றிற்கு மாடு ஒன்று வழங்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வு கடந்த 21 ஆம் திகதி பிற்பகல் 3 மணியளவில் தர்மபுரம் பொலிஸ் நிலையத்தில் பொறுப்பதிகாரி தலைமையில் இடம் பெற்றது.


அனுமதிப்பத்திரம் இன்றி இறைச்சிக்காக கொண்டு செல்லப்பட்ட போது தர்மபுரம் பொலிஸாரினால் மீட்கப்பட்ட இம் மாட்டினை வறுமைக்கோட்டிற்குட்பட்ட ஒருவருக்கு கிளிநொச்சி மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வழங்கி வைத்தார்.

இதற்கு முன்னரும் இறைச்சிக்காக அனுமதிப்பத்திரமின்றி கொண்டு செல்லப்பட்ட மாடுகள் மீட்கப்பட்டு வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட மக்களுக்கு தர்மபுரம் பொலிஸாரினால் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-44)








யா/ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடத்திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கலந்து கொண்டிருந்ததுடன் சிறப்பு விருந்தினராக யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந்திரராஜா கலந்து கொண்டிருந்தார்.



நல்லூரரான் தேரடியில் தைப்பூசம் முதல் சித்திரை கார்த்திகை வரை நடைபெற்ற கந்தபுராண படலத்தின் நிறைவு நிகழ்வில் உரையாசிரியர் சு.சிவராசா கௌரவிக்கப்பட்ட போது...


யாழ். பல்கலைக்கழகத்தில் கற்கும் வறிய மாணவர்களுக்கு சிவன் பவுண்டேசன் நிறுவனம் ஊடாக நிதியுதவி வழங்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. யாழ்.பல்கலைக்கழகத்தின் கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் மாணவர் ஒன்றியத் தலைவர் க.நிவாஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சிவன் பவுண்டேசன் நிறுவனப் பணிப்பாளர் கணேஸ் வேலாயுதம் கலந்து கொண்டு மாணவர்களுக்கான நிதியுதவியினை வழங்கி வைத்தார். (படங்கள்:-அராலிச் செய்தியாளர்)


யாழ்.குருநகர் பேர்கன் ஒஸ்லோ இணையம் நடத்திய 3,4,5 ஆம் ஆண்டுக்குரிய பயிற்சிப்பட்டறை அண்மையில் சென்.ஜேம்ஸ் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. இப்பயிற்சிப்பட்டறையில் புனித யாகப்பர் ஆலய பங்குத்தந்தை அருட்பணி ஜே.ஜே.மௌலிஸ் அடிகளார் , சென். ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை அதிபர் அருட்சகோதரி மேரி சயந்தி ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கியிருந்தனர்.




2015-2016 ஆண்டுக்கான காலப்பகுதியில் சிறந்த சேவைகளை ஆற்றிய 306 B1 இற்கான லயன்ஸ் கழக பிரமுகர்களை கௌரவித்து விருது வழங்கும் நிகழ்வு அண்மையில் கொழும்பு வத்தளை பிஹாசஸ் றீவ் ஹோட்டலில் நடைபெற்றது. 2016 ஆம் ஆண்டுக்கான காலப்பகுதியில் சிறந்த சேவைகளை வழங்கியமைக்காக யாழ்ப்பாணம் கேற்வே லயன்ஸ் கழகத்திற்கு இரண்டு விருதுகள் வழங்கப்பட்டன. விருதுகளை யாழ்ப்பாணம் கேற்வே லயன்ஸ் கழகத் தலைவர் லயன் எம்.ஆர்.கிருபாகரன் லயன்ஸ் 306 B1 பிரமுகர்களிடமிருந்து பெற்றுக்கொள்வதை படத்தில் காணலாம்.



மூதறிஞர் தந்தை செல்வாவின் 39 ஆவது நினைவுப்பேருரை நிகழ்வு யாழில் அண்மையில் நடைபெற்ற போது நினைவுப் பேருரை ஆற்றிய கனடா, டொறன்ரோ பல்கலைக்கழக பேராசிரியர் சந்திரகாந்தனுக்கு மீளாய்வு செய்யப்பட்ட ஆங்கில சட்ட தத்துவ நூல் ஒன்று அன்பளிப்பாக கையளிக்கப்பட்டது. இந்நூலினை சட்ட ஆய்வாளர் சோதிநாதன் கையளிப்பதையும் அருகில் தமிழரசுக்கட்சி பிரமுகர் குலநாயகம் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# ஜி-7 இல் கலந்து கொள்ள ஜனாதிபதி ஜப்பான் விஜயம்

(கொழும்பு)

**ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாளை 25 ஆம் திகதி புதன்கிழமை ஜப்பானுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்கிறார். ஜப்பானில் இடம்பெறும் ஜி -7 நாடுகளின் பொருளாதார மாநாட்டில் கலந்து கொள்வதற்காகவே ஜனாதிபதி ஜப்பான் செல்கிறார்.**



இதன்போது அம்மாநாட்டில் ஜி-7 அங்கத்துவ நாடுகளின் தலைவர்களைச் சந்தித்து ஜனாதிபதி பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளார். இம்மாநாடு 26 மற்றும் 27 இரண்டு தினங்கள் ஜப்பானில் நடைபெறவுள்ளது.

இதேவேளை. ஜப்பானியப் பிரதமர் ஷின்சோ அபேயின் விசேட பிரதிநிதி இலங்கை வந்ததோடு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்துப் பேச்சுவார்த்தைகளை நடத்தியதோடு ஜப்பானிய பிரதமரின் விசேட செய்தியையும் கையளித்துள்ளார்.

ஜனாதிபதியின் ஜப்பான் விஜயத்தால் இலங்கையில் வெளிநாடுகளின் முதலீடுகள் அதிகரிப்பதோடு அபிவிருத்திகளுக்கு பெருமளவு நிதி கிடைப்பது மட்டுமின்றி எமது நாட்டவர்களுக்கு ஐரோப்பிய நாடுகளில் தொழில் வாய்ப்புக்கள் கிடைக்கும் என்றும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

ஜி - 7 பொருளாதார மாநாட்டில் அமெரிக்கா. பிரிட்டன். கனடா. பிரான்ஸ். ஜேர்மனி. இத்தாலி. ஜப்பான் ஆகிய நாடுகள் அங்கத்துவம் வகிக்கின்றன. உலகில் பலம்பொருந்திய பொருளாதார அபிவிருத்தி கண்ட நாடுகளின் மாநாட்டில் ஜனாதிபதி கலந்து கொள்வது விசேடத்துவமாகும் என தெரிவிக்கப்படுகிறது.

வரலாற்றில் முதன் முறையாக ஜி - 7 நாடுகளின் பொருளாதார மாநாட்டிற்கு இலங்கைத் தலைவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். தெற்காசியாவில் இந்தியாவுக்கும் இம் மாநாட்டிற்கான அழைப்பு விடுக்கப்படவில்லை. மாறாக இலங்கை. பங்களாதேஷ் நாட்டுத் தலைவர்களுக்கே அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (இ-10)

## காவி உடைகளை திருடிய இராணுவ சிப்பாய் கைது

விற்பனைக்காக வைத்திருந்த பெருந்தொகையான காவி உடைகளை திருடிய இராணுவ சிப்பாய் ஒருவரை கொஸ்வத்தை பொலிஸார் கைது செய்துள்ளனர்.


தனது இல்லத்தில் விற்பனைக்காக களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள 56 ஆயிரத்து 275 ரூபா பெறுமதியான காவி உடைகள் மற்றும் பிக்குகளுக்கு உரிய பொருட்கள் காணாமற்போயிருப்பதாக கொஸ்வத்தைப்பிரதேசத்தைச் சேர்ந்த 40 வயதான வியாபாரி ஒருவர் கொஸ்வத்தை பொலிஸ்நிலையத்தில் செய்த முறைப்பாட்டிற்கு அமையவே குறித்த இராணுவ சிப்பாய் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் சந்தேகநபர் நாத்தாண்டிய்யா-மொரகலே பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. சந்தேக நபரை கைது செய்த பொலிஸார் அவரது வீட்டிலிருந்து திருடப்பட்ட பொருட்களையும் கைப்பற்றியுள்ளனர்.

இதேவேளை. சந்தேக நபரை நேற்றைய தினம் மாரவில நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-10)

## டெங்கு நுளம்பு கடித்து மனிதன் சாகலாமா?

நுளம்புக்கு மூன்றே மூன்று அறிவுகள்தான் உண்டு. இந்த நுளம்புகளில் இற்றைவரை 3200 நுளம்பு வர்க்கங்கள் இனம் காணப்பட்டுள்ளன. இவற்றுள் அனோபிலிஸ் (Anopheles), கியூலெக்ஸ் (Culex), ஈடிஸ் ( Aedes) போன்ற இன்னும் பல உப பிரிவுகள் உள்ளடங்குகின்றன.



இதில் ஈடிஸ் எனும் நுளம்பு வர்க்கத்தில் ஈடிஸ் எஜிப்ரை (Aedes Aegipti), ஈடிஸ் அல்போபிக்டஸ் (Aedes Albopictus) எனும் இரு நுளம்புகளுமே டெங்கு (மொழி முறிச்சான் காய்ச்சல்) மற்றும் சிக்கின்குனியா எனும் மரணக் காய்ச்சலைப் பரப்புகின்றன. முக்கியமாக மழைக்காலத்தில் மழைத் தண்ணீரில் வீசி எறியப்பட்ட பல சிறுசிறு பாத்திரங்களில் தேங்கி நிற்கும் மழை நீரில் இவை பல்கிப் பெருகி டெங்கு நோயைப் பரப்புகின்றன. இது பற்றிய விளக்கம் கேள்வி பதில் மூலம் விபரிக்கப்படுகின்றது.

**கேள்வி: மழையில்லாத காலத்தில் இந்நுளம்புகள் எங்கே தங்குகின்றன?**

பதில்: ஆண் நுளம்புகள் 14 நாட்களும் பெண் நுளம்புகள் சராசரி 3 மாதங்களும் வாழ்ந்து வாழ்க்கை வட்டத்தை முடிக்கின்றன. இந்நுளம்புகளின் முட்டைகள் தம்மைச் சுற்றி ஒரு கூட்டை (Cyst) உருவாக்கி அக்கூட்டுக்குள் உறங்கு நிலையில் (Esti vation) பல வருடக்கணக்கில் உறங்கி மீண்டும் மழை காலம் வர மீள் உயிர்ப்புப் பெற்று பல்கிப் பெருகுகின்றன.

**கேள்வி: டெங்கு நோயாளிகள் இல்லையெனில் நுளம்புகள் மட்டும் இருக்கும்போது எப்படி இந்நோய் பரவும்?**

பதில்: இயற்கையின் படைப்பில் இந்நோயைப் பரப்பும் நுண்ணங்கிகளான (Virus) ஆர்போ வைரஸ், சிக்கன்குனியா வைரஸ் என்பன உறங்கு நிலையில் இருக்கும் முட்டைக்கலங்களுடனேயே ஒன்றி வாழும் ஆற்றல் உள்ளதனால் நுளம்புகள் பல்கிப்பெருகும்போது டெங்கு நுண் கிருமிகளும் மனிதரிடம் இரத்தம் குடிக்கும் போது உமிழ்நீர்ச்சுரப்பியுடன் மனித உடலினுள் பாய்ச்சப்படுவதனால் டெங்கு நோயாளிகள் இல்லாவிடத்தும் இக்காய்ச்சல் பரவும் வாய்ப்புண்டு.

**கேள்வி: டெங்கு நுளம்புகள் மனித இரத்தம்தானா குடிக்கும்? மிருக இரத்தம் குடிக்காதா?**

பதில்: இந்நுளம்புகள் கூடுதலாக நகரப் புறங்களிலேயே சன நெருக்கடியான குடியிருப்புக்களிடையே பல்கிப் பெருகுவதனால் அனைவரையும் பாதிக்கிறது. ஆகவே வேண்டியளவு மனிதர் கள் இருப்பதனால் மனித இரத்த த்தையே குடிக்கின்றன. மனிதர்கள் இல்லையென்றால் மிருக இரத்தத்தைக் குடித்து அது தன் பரம்பரையை முன்னெடுத்துச் செல்லும் முட்டை வளர்ச்சிக்கு மனித இரத்தமோ மிருக இரத்தமோ இன்றியமையாத தேவையாக இருக்கின்றது என்பது இயற்கையின் நியதி.




**கேள்வி: ஏன் வருடாவருடம் மழைக்காலத்தில் டெங்குநோய், மனிதனை மிரட்டுகின்றது?**

பதில்: மனிதன் தன் பகுத்தறிவான 6 ஆவது அறிவை இழந்து அசண்டை (Carelessness), கல்வியறிவின்மை( Illiteracy), சோம்பேறித்தனம் (Laxiness) ஆகிய மூன்று காரணிகளுக்குள்ளும் அடங்கி தன்னை மறந்த நிலையில் பணம் ஒன்றே வாழ்வாதாரம் என்று எண்ணி இரவு பகலாக உழைக்க ஆரம்பித்ததனால் இவ்வாறான நிலை என்பதை எவராலும் மறுக்க முடியாது. மற்றையது டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகள் பற்றிய போதிய விளக்கமான அறிவின்மை காணப்படுதல்.

**கேள்வி: டெங்கு நோயைத் தடுக்கவே முடியாதா?**

பதில்: உலக சுகாதார நிறுவனம் ( World Health Organization) சொல்லியதற்கிணங்க வருமுன் காக்கும் நடவடிக்கையில் (Preventi on is better than cure) யாம் இறங்க வேண்டும். இதைச் சிறுவர் பாடசாலையில் இருந்து சர்வ கலா சாலை வரையான சகல வயதினருக்கும் அறிவூட்டல் மூலம் முன்னெடுத்துச் சென்று டெங்கு ஓர் உயிர்க்கொல்லி நோய் என்பதை கலந் துரையாடல்கள், கண்காட்சிகள், காணொளிப் படங்கள் என்பவற்றின் ஊடாக மக்களை விழிப்படையச்செய்தல் வேண்டும். நகரங்கள், கிராமங்கள் என்பவற்றிலுள்ள பொது அமைப்புக்கள் மூலமும் விழிப்புண ர்வை முன்னெடுத்து செல்வதன் மூலம் டெங்குக் காய்ச்சலைப் பரப்பும் நுளம்புகளை இல்லாதொழிக்கலாம்.

**கேள்வி: டெங்கு நுளம்பு கள் மனிதனின் இரத்த வேறுபாட்டினை உணர்ந்து, தெரிந்து, இரத்தம் குடித்து டெங்கு நோயைப் பரப்புமா?**

பதில்: இல்லை. அதற்கு மனித இரத்தம் மட்டுமே தேவைப்படும். இதில் சாதி, மதம், இனம், இரத்த வகை (Blood group) என எவற்றையுமே நுளம்பு பாகுபாடு பார்ப்பதில்லை. ஈடிஸ் வர்க்க நுளம்புக்கு தேவை மனித இரத்தம் மட்டுமே.

**கேள்வி: இவ்வளவும் சொல்லியும் ஏன் மனிதர்கள் கவனத்திற் கொள்வதில்லை?**

பதில்: மனிதர்கள் தாம் உழைத்து உண்டு வாழ்ந்தால் போதும் எனும் மனோபாவத்தில் வாழ்கின்றார்கள். அவர்கள் தம்மைப் பற்றியோ தம்மைச் சூழவுள்ளவர்கள் பற்றியோ அக்கறைகொள்வதில்லை. இதனால்தான் பொலிஸாரின் உதவியுடன் சுகாதாரத் திணைக்களத்தினர் டெங்கு நுளம்புகள் உண்பாகும்வீசியெறியப்பட்ட பொலித்தீன் பைகள், மழை நீர் தேங்கி நிற்கும் சிறு பொருட்களை வலுக் கட்டாயமாக தண்டம் செலுத்தச் செய்து அகற்றுவிக்கின்றார்கள். இது மென் மேலும் தொடரும். ஏனெனில் இன்று மனிதர்களாக வாழ்பவர்கள் ஒரு சிலரே.

**கேள்வி: இப்படியான நகர, கிராம மக்களை திருத்துவதற்கு வேறு வழிகள் உண்டா?**

பதில்: உண்டு. மேலுள்ள பந்தியிலுள்ள பதிலில் கூறியது போன்று வயது வித்தியாசமின்றி, சாதி, சமய வித்தியாசமின்றி, படித்தவர்கள், படியாதவர்கள், ஏழை, பணக்காரன் என்ற பேதமின்றி சகலருக்கும் போதிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவேண்டும்.

முக்கியமாக நகரத்தில் வாழும் படித்த பணக்கார வர்க்கத்தினரையே இந்த டெங்கு நோய் மாரி காலத்தில் தாக்கி இறப்பை ஏற்படுத்துகின்றது என்ற உண்மையை சகலரும் தெரிந்து அதற்கிணங்க நடக்கப் பழக வேண்டும்.

# தீ விபத்தில் சிக்கிய 17மாணவிகள் பலி!




தாய்லாந்தின் வடக்கு பகுதியில் உள்ள வின்க் போடா மாவட்டத்தில் பழங்குடியின பகுதி மக்கள் வசிக்கும் பகுதி அருகே தனியாருக்கு சொந்தமான பாடசாலை ஒன்று செயற்பட்டு வருகிறது. இரண்டு மாடிகளைக் கொண்ட அந்த பாடசாலையில் மாணவிகள் தங்குவதற்கும் வசதி செய்யப்பட்டுள்ளது.

3 முதல் 13 வயது வரை மாணவிகள் மட்டுமே படிக்கும் இந்த பாடசாலையில் நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் தீ விபத்து ஏற்பட்டது.

தீப்பிழம்பு கொழுந்து விட்டு எரியத்தொடங்கியதில் தங்கியிருந்த 17 மாணவிகள் பரிதாபமாக தீயில் கருகி பலியாகினர். 2 மாணவிகளை காணவில்லை என்பதால், அவர்களின் நிலைமை குறித்து அஞ்சப்படுகிறது. 5 மாணவிகள் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தீ விபத்து ஏற்பட்டதற்கான காரணம் குறித்து உள்ளூர் பொலிஸார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். தாய்லாந்தில் மோசமான சுகாதார தரமும் தரமற்ற பாதுகாப்பு அம்சங்களும் நிலவுவதால் இது போன்ற விபத்துக்கள் அடிக்கடி நிகழ்வதுண்டு. (இ-10)

## சென்னையில் பயங்கரம்; 16பேர் மீது திடீர் வெட்டு!

சென்னை, வியாசர்பாடி பகுதியில் மூன்று மோட்டார் சைக்கிளில் வந்த 6 பேர் கொண்ட மர்ம கும்பல், வீதியில் சென்று கொண்டிருந்த பொதுமக்கள் மீது அரிவாளால் வெட்டி திடீர் தாக்குதல் நடத்திய சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்த சம்பவத்தில் ஒரு குழந்தை உட்பட 16 பேர் காயமடைந்தனர்.

சென்னை வியாசர்பாடியில் மல்லிகைப்பூ காலனி, சத்தியமூர்த்தி நகர் உள்ளிட்ட பகுதியில் நேற்று முன்தினம் இரவு திடீரென மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

அப்போது வீதியில் நடந்து சென்று கொண்டிருந்த மக்கள் மீது, இருசக்கர வாகனங்களில் வந்த மர்மநபர்கள் அரிவாளால் வெட்டி திடீர் தாக்குதல் நடத்தினர்.

மின்வெட்டால் இருள் சூழ்ந்த பகுதியில் நடந்து சென்று கொண்டிருந்த மக்கள் இந்த திடீர் தாக்குதலால் நிலைகுலைந்தனர்.

சிறியவர்கள், முதியவர்கள் என்றும் வித்தியாசம் பாராமல் கண்ணில்பட்ட மக்களை எல்லாம் சரமாரியாக வெட்டிய அந்தக் கும்பல் பின்னர் தப்பிச் சென்றது. இந்தத் தாக்குதலில் 16 பேர் படுகாயமடைந்தனர். (இ-10)

## வெற்றிகரமாக விண்ணில் ஆர்.எல்.வி-டிடி விண்கலம்

இந்தியா சொந்தமாக தயாரித்த ஆர்எல்வி- டிடி விண்கலம் நேற்றுக் காலை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டுள்ளது என இஸ்ரோ அதிகாரபூர்வமாக அறிவித் துள்ளது.

ஸ்ரீஹரி கோட்டாவில் உள்ள சதீஸ்தவான் ஏவுதளத்தில் இருந்து ஆர்.எல்.வி.. விண்கலம் விண்ணில் பாய்ந்தது. இந்த விண்கலம் 1.75 டொன் எடை கொண்டது. இந்த விண்கலம், முழுக்க முழுக்க இந்தியாவில் தயாரானது. ஐந்து ஆண்டுகளாக, இந்திய விஞ்ஞானிகளின் தீவிர முயற் சியில் உருவாக்கப்பட்டுள்ள இதுபோன்ற விண்கலத்தை, இதுவரை அமெரிக்கா மட்டுமே பயன்படுத்தி வந்தது குறிப்பிடத்தக்கது. பூமியிலிருந்து 70 கி.மீ., தூரம் சென்றபின் வங்கக்கடலில் விழுந்துள்ளது. இதன் மூலம் ஆர்.எல்.வி. விண்கலம் சோதனை வெற்றி பெற்றுள்ளது என இஸ்ரோ அறிவித்துள்ளது. (இ-10)

# ஹிரோஷிமா அணுகுண்டு வீச்சுக்கு அமெரிக்கா மன்னிப்புக் கேட்காது

(டோக்கியோ)

**இரண்டாம் உலகப்போரின்போது ஜப்பானின் ஹிரோஷிமா நகரின் மீது அணுகுண்டுவீச்சு தாக்குதல் நடத்தியதற்காக அந்நாட்டு மக்களிடம் அமெரிக்கா மன்னிப்பு கேட்காது என ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.**

ஜப்பான் நாட்டுக்கு நாளை செல்லும் ஒபாமா, அங்கு அணுகுண்டு வீச்சால் தரை மட்டமான ஹிரோஷிமா நகரில் நடைபெறும் பொருளாதாரத்தில் வளர்ந்த ஏழுநாடுகளின் தலைவர்கள் பங்கேற்கும் ஜி-7 எனப்படும் நாடுகளின் உச்சிமாநாட்டில் பங்கேற்று உரையாற்றுகிறார்.


இந்நிலையில், இதுதொடர்பாக ஜப்பானின் பிரபல தொலைக்காட்சி நிறுவன நிருபரின் கேள்விக்கு நேற்று பதிலளித்துள்ள ஒபாமா, ஹிரோஷிமா அணுகுண்டு வீச்சுக்கு அமெரிக்கா மன்னிப்பு கேட்காது என திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளார். ஜி-7 நாடுகளின் உச்சி மாநாட்டில் பேசும் போது ஹிரோஷிமா அணுகுண்டு வீச்சுக்கு மன்னிப்பு தெரிவிக்கும் வகையில் உங்களது உரை இடம்பெறுமா? என அந்த நிருபர் கேள்வி எழுப்பினார். இதற்கு பதிலளித்த ஒபாமா, இல்லை, இதுதொடர்பாக,



### ஒபாமா திட்டவட்டம்

கேள்வி எழுப்புவதும், ஆய்வு செய்வதும் வரலாற்று ஆசிரியர்களின் பணியாகும். ஏனெனில், போர்க்காலங்களின் இடையில் பதவியில் இருக்கும் தலைவர்கள் அனைத்து வகையான முடிவுகளை எடுக்கக்கூடிய அதிகாரம் படைத்தவர்களாக உள்ளனர் என்பதை அங்கீகரிக்க வேண்டிய கட்டாயம் நமக்குள்ளது. தங்களது பதவிக்காலங்களில், குறிப்பாக போர்க்காலங்களில் ஒவ்வொரு தலைவரும் மிக கடினமான முடிவுகளை எடுக்க நேரிடுகிறது என்பதை அதைப்போன்றதொரு பதவியில் கடந்த ஏழரை ஆண்டுகளாக அமர்ந்திருப் பவன் என்ற வகையில் என்னால் அறிந்து கொள்ள முடிகிறது என்று தெரிவித்துள்ளார். (இ-10)

## சவுதியில் உலகின் மிகப்பெரிய மெட்ரோ ரயில் திட்டம் ஆரம்பம்



ஐக்கிய அரபு நாடுகளில் ஒன்றான சவுதி அரேபியாவில், உலகின் மிகப் பெரிய மெட்ரோ ரயில் நிலையம் அமைக்கும் பணிகள் ஆரம்பமாகியுள்ளன. சவுதி அரேபிய தலைநகர் ரியாத்தில், 60 இலட்சம் பேர் வசிக்கின்றனர். எதிர்வரும்2035க்குள், மக்கள் தொகை, 50 சதவீதம் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மக்கள் தொகை பெருக்கத்திற்கு ஏற்ப, இங்கு, பொது போக்குவரத்துக்கு இதுவரை எந்த வசதியும் செய்யப்படவில்லை. இந்நிலையில், மெட்ரோ ரயில் போக்குவரத்து திட்டத்திற்கு சவுதி அரசு அனுமதி அளித்துள்ளது.

பல இலட்சம் கோடி ரூபாய் செலவில், 177 கி.மீ., நீளத்தில், 85 மெட்ரோ ரயில் நிலையங்களுடன் கூடிய, ஆறு வழித்தடங்கள் அமைக்கப்படுகின்றன. இதில், 64 கி.மீ., தொலைவுக்கு சுரங்கப் பாதையில் செல்லும் வகையில் கட்டப்படுகின்றன. அனைத்து ரயில் நிலையங்களிலும் வை - பை வசதி செய்யப்படுகிறது. இத்திட்டத்திற்கு, 20 சதவீதம் சூரிய மின்சக்தி பயன்படுத்தப்படுகிறது.இதன் கட்டுமான பொறுப்பு, அமெரிக்காவின் பிரபல கட்டுமான நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. (இ-10)

## இந்தோனேசியாவில் எரிமலை வெடித்தது

### 7 பேர் பலி; பலர் மாயம்



இந்தோனேசியாவில் சுமத்ரா தீவில் உள்ள 2460 மீற்றர் உயரமான சினபங் எரிமலை நேற்றுமுன்தினம் புகை சாம்பல் மற்றும் தீப்பிழம்புகளை கக்கியபடி பயங்கரமாக சீறியது.

இந்த சீற்றத்தால் எரிமலையின் அடிவாரத்தில் உள்ள கிராமங்களை நோக்கி சூடான பாறைகளும் தீக்குழம்பும் தெறித்து விழுந்ததில் 7 பேர் உயிரிழந்துள்ளனர். 2 பேர் உயிருக்குப்போராடி வருகின்றனர். மேலும் இதில் சிக்கி காணாமற்போன பலரை தேடும் பணிகள் முழுவீச்சில் நடை பெற்று வருவதாகவும் தேசிய பேரிடர் மேலாண்மை தகவல் தெரிவித்துள்ளது. (இ-10)

# தமிழகத்தின் முதலமைச்சராக ஜெயலலிதா நேற்று பதவியேற்பு

(சென்னை)

6 ஆவது முறையாக தமிழகத்தின் முதலமைச்சராக ஜெயலலிதா நேற்று பதவி ஏற்றுக்கொண்டார். அதை தொடர்ந்து 28 அமைச்சர்களும் இரண்டு குழுவாக பதவியேற்றுக்கொண்டனர்.


ஆளுநர் கே. ரோசய்யா அனைவருக்கும் பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.


இந்த பதவியேற்பு விழாவில் மத்திய அரசின் சார்பில் மத்திய அமைச்சர் வெங்கையா நாயுடு, பொன்.ராதா கிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சென்னை பல்கலைக்கழக நூற்றாண்டு மண்டபத்தில் நேற்று நண்பகல் இந்த பதவியேற்பு விழா இடம்பெற்றது.

இந்த நிலையில், தமிழக முதல் அமைச்சராக பொறுப் பேற்றுக் கொண்ட ஜெயலலிதாவுக்கும் அவரது தலைமையிலான அமைச்சர்களுக்கும் பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.


தமிழகத்தின் வளர்ச்சிக்கு புதிய அரசுடன் இணைந்து மத்திய அரசு உறுதுணையுடன் செயற்படும்" என்று தெரிவித்துள்ளார். (இ-10)







## ஜெயலலிதாவின் பதவியேற்பு நிகழ்வில் தி.மு.க. பொருளாளர் ஸ்ராலின் பங்கேற்பு



தமிழகத்தின் முதலமைச்சராக ஜெயலலிதா நேற்று பதவியேற்றார். இவ் விழாவில் தி.மு.க., பொருளாளர் மு.க.ஸ்ராலின், துரைமுருகன், பொன் முடி, பி.கே. சேகர் பாபு உள்ளிட்ட தி.மு.க. பிரமுகர்கள் பங்கேற்றனர்.

தமிழக சட்டசபைக்கு நடந்த தேர்தலில் 134 தொகுதிகளில் வெற்றி பெற்று அ.தி.மு.க. தனிப் பெரும்பான்மையுடன் ஆட்சியைப் பிடித்தது.

காமராஜர், எம்.ஜி.ஆரைத் தொடர்ந்து முதலமைச்சர் ஜெயலலிதா தொடர்ந்து இரண்டாவது முறையாக ஆட்சியைப் பிடித்து சாதனை படைத்துள்ளார்.

புதிதாக தேர்வு செய்யப்பட்ட அ.தி.மு.க. எம்.எல்.ஏக்கள் கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை சென்னையில் நடந்தது. அந்த கூட்டத்தில் சட்ட சபை அ.தி.மு.க. தலைவராக ஜெயலலிதா ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இதையடுத்து கடந் ஞீத சனிக்கிழமை ஆளுநர் கே.ரோசய்யாவை சந்தித்து முதலமைச்சர் ஜெயலலிதா ஆட்சி அமைக்க உரிமை கோரினார். அப்போது அவர் 28 அமைச்சர்கள் கொண்ட அமைச்சர் பட்டியலையும் கொடுத்தார்.

அதை ஏற்றுக்கொண்ட ஆளுநர் கே.ரோசய்யா, ஆட்சி அமைக்க வருமாறு ஜெயலலிதாவுக்கு அதிகார பூர்வமாக அழைப்பு விடுத்தார். இதைத் தொடர்ந்து அ.தி.மு.க. அரசு பதவி ஏற்பு விழா ஏற்பாடுகள் சென்னை பல்கலைக் கழக நூற்றாண்டு விழா அரங்கில் செய்யப் பட்டன.

பதவி ஏற்பு விழாவில் கலந்து கொள்வதற்காக ஜெயலலிதா முற்பகல் 11.40 மணிக்குப் புறப்பட்டார். 11.50 மணிக்கு அவர் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா அரங்கிற்கு வந்தார். அங்கு அவருக்கு உற்சாக வரவேற்பு கொடுக்கப்பட்டது.

முன்னதாக, ஜெயலலிதாவின் பதவியேற்பு விழாவில் பங்கேற்க தி.மு.க. பொருளாளர் மு.க.ஸ்ராலின், சென்னை முன்னாள் மேயர் மா.சுப்பிரமணியன், சென்னை வடக்கு மாவட்ட செயலாளரும் துறைமுகம் தொகுதி எம்.எல்.ஏவுமான பி.கே. சேகர் பாபு, முன்னாள் அமைச்சர் துரைமுருகன், பொன் முடி, நடிகரும் வேளச்சேரி எம்.எல். ஏவுமான வாகை சந்திரசேகர் உள்ளிட்டோர் வி.ஐ.பிக்களுக்கான இருக்கையில் அமர்ந்திருந்தனர்.

விழா மேடைக்கு அவர் வந்ததும் "புரட்சித்தலைவி வாழ்க", "அம்மா வாழ்க" என்று அ.தி.மு.கவினர் வாழ்த்தி கோஷமிட்டனர்.

அவர்களுக்கு ஜெயலலிதா கை கூப்பி வணக்கம் தெரிவித்தார். இதையடுத்து ஆளுநர் கே.ரோசய்யா வந்ததும் சுமார் 12 மணியளவில் பதவி ஏற்பு விழா தொடங்கியது.

சரியாக 12-07 மணிக்கு ஜெயலலிதாவுக்கு ஆளுநர் ரோசைய்யா பதவிப் பிரமாணமும், இரகசிய காப்பு பிரமாணமும் செய்து வைத்தார். (இ-10)

## 500மதுசாலைகள் மூடல் விவசாயக் கடன் இரத்து முதல் நாளில் ஜெ. அதிரடி



தமிழக முதலமைச்சராக நேற்று பதவியேற்றுக் கொண்ட ஜெயலலிதா தலைமை செயலகத்தில் முதல் நாள் 5 கோப்புகளில் கையெழுத்திட்டார். அவற்றில் முதலில் விவசாயிகளுக்கான பயிர் கடன் அனைத்தையும் தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளார். மேலும் தமிழ்நாட்டின் முக்கிய பிரச்சினையாக கருதப்பட்டது டாஸ்மாக் பிரச்சினை. இதில் டாஸ்மாக் வேலை நேரத்தை 10 மணி நேரமாக குறைத்து ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார். மேலும் முதல்கட்டமாக 500 மதுக் கடைகளை மூட உத்தரவிட்டுள்ளார்.

* விவசாயிகளின் பயிர்க் கடனை இரத்துசெய்து தள்ளுபடி செய்ய முதலமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார். பயிர்க்கடன் இரத்து உத்தரவால் அரசுக்கு ரூ.5,780 கோடி செலவு ஏற்படும்

* வீடுகளுக்கு 100 யூனிட் வரை இலவச மின்சாரம் வழங்க ஜெயலலிதா கையெழுத்திட்டுள்ளார். வீடுகளுக்கு இலவச மின்சாரம் வழங்குவதால் அரசுக்கு கூடுதலாக ரூ.1,607 கோடி செலவு என தகவல் தெரிவித்துள்ளனர்.


* படித்த ஏழைப் பெண்களுக்கு திருமண உதவி திட்டத்தின் கீழ் 8 கிராம் தங்கம் வழங்கும் கோப்பில் முதலமைச்சர் ஜெயலலிதா கையெழுத்திட்டுள்ளார்.

* முதல் கட்டமாக 500 மதுக் கடைகள் மூடப்படும் என ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

* டாஸ்மாக் கடைகள் நண்பகல் 12 மணியில் இருந்து 10 மணிவரை இயங்கும்

* விசைத்தறி நெசவாளர்களுக்கு கட்டணமில்லா மின்சாரம் 750 யூனிட் வரை வழங்கப்படும். கைத்தறி நெசவாளர்களுக்கு 200 யூனிட் வரை இலவச மின்சாரம் வழங்க ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார். (இ-10)

## வெண்ணெயில் 'ஜெ' சிலை



சென்னையில் சமையற்கலை நிபுணர் ஒருவர் முதல்வர் ஜெயலலிதாவின் உருவத்தை வெண்ணெயில் முப்பரிமாண சிலையாக வடிமைத்துள்ளார்.

சென்னை சைதாபேட்டையில் இயங்கிவரும் தனியார் சமையல் கலை கல்லூரியின் நிறுவுநர் வினோத்.

காய்கறிகளில் சிற்பம் செதுக்கும் வல்லுநரான இவர், கின்னஸ் உட்பட பல்வேறு உலக சாதனைகளை படைத்துள்ளார்.

இந்நிலையில் அண்மையில் நடந்துமுடிந்த சட்டமன்ற தேர்தலில் வெற்றி பெற்ற ஜெயலலிதா, தமிழக முதல்வராக மீண்டும் பொறுப் பேற்பதை வரவேற்கும் வகையில், அவரது உருவத்தை முழுவதும் வெண்ணெயில் முப்பரிமாண சிலையாக வடிவமைத்துள்ளார். (இ-10)

## விழாக்கோலம் பூண்ட போயஸ் தோட்டம் தொண்டர்கள் குவிந்தனர்



சென்னை பல்கலைக்கழகத்தில் நேற்று நடைபெற்ற பதவியேற்பு நிகழ்ச்சியில் தமிழக முதலமைச்சராக அதிமுக பொதுச் செயலாளர் ஜெயலலிதா 6ஆவது முறையாக பதவியேற்றார். இதனால் இவ் விழாவை முன்னிட்டு, சென்னையில் உள்ள போயஸ் தோட்டத்தில் ஜெயலலிதாவை வரவேற்கும் விதமாக ஏராளமான தொண்டர்கள் நேற்றுக் காலை குவிந்துள்ளனர். போயஸ் தோட்டமே திருவிழாக் கோலம் பூண்டுள்ளது.

போயஸ் கார்டனில் உள்ள பிள்ளையார் கோயிலில் சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டன. (இ-10)




# மலைப்பாம்பும் மான் குட்டியும்

குறட்டி என்ற பெயர் கேட்டால் மஞ்சளாறு காட்டில் சிறுத்தைகளும், புலிகளும் கூட பயப்படும்.

இருபது அடிக்கும் நீளமாக மரங்களின் கிளைகளில் படர்ந்து இருக்கும் தனது அழகிய உடம்பும், கரும்புள்ளிகளும் அதற்கு பெருமையாக இருந்தது.


கரும்பழுப்பு, பழுப்பு என்று பல நிறங்களில் மலைப்பாம்புகள் இருக்குமே தவிர இப்படி லட்சணமான கரும்புள்ளிகளுடன் பார்ப்பது ரொம்பவும் அரிது.

மலைப்பாம்புகள் பொதுவாக பறவைகள், முயல் போன்ற சிறிய பிராணிகளைப் பிடித்து உண்ணும். சில சமயம் மான் போன்ற சற்றுப் பெரிய விலங்குகளைக் கூடத் தாக்கும்.

ஆனால் குறட்டி சற்று வித்தியாசமானது. காட்டெருமைக்கன்று, சிறுத்தை போன்றவற்றைக் கூட தனது குறட்டிப் பிடியில் நொறுக்கி எடுத்துவிடும். அதனால் அதற்கு குறட்டி என்று பெயர் வழங்கி வந்தது.

குறட்டி தனது தலையை ஒரு கிளையின் மீது வைத்தபடி ஆற்றங்கரையையே பார்த்துக் கொண்டு இருந்தது.

மிரண்டு மிரண்டு ஆற்றங்கரையில் வரும் மிளா மான் குட்டி அதன் கண்ணில் பட்டது.



நீண்டு கிடந்த தனது உடலை வேகமாக தன்னை நோக்கி இழுத்தது.

அநேகமாக அந்த மான்குட்டி மிகவும் குறுகலாக ஓடும், அந்த ஆற்றைக் கடந்து வரலாம். அப்படிக் கடந்து வந்தால் குறட்டி இருக்கும் வழியாகத்தான் வரவேண்டும்.

அந்த மிளா மான் ஆற்றில் இறங்கியது. குறட்டியில் வாயில் நீர் சுரந்தது.

மீதமுள்ள குறட்டி தனது உடலை கிளையில் சுற்றி தனது தலையை மட்டும் தொங்க வைத்தபடி அசையாமல் இருந்தது. பார்வை மட்டும் ஆற்றில் இறங்கிய மான் மீது இருந்தது.

ஆற்றில் மான் நீந்தியது. இதே மரத்திலிருந்துதான் குறட்டி ஒரு நாள் ஒரு சிறுத்தையை மடக்கிப் பிடித்தது. ரப்பர் போன்ற தனது உடம்பை கயிறு போல் பாவித்து இறுக்கிய வேகத்தில் சிறுத்தையின் எலும்புகள் மடமடவென்று முறிநதன.

மான் கரையேறி விட்டது. குறட்டி அசையாமல் இருந்தது. அந்த மரத்திற்கு அருகாமையில் வந்த பாதையில் சுற்றிப் பார்த்தபடி நடந்து வந்தது அந்த மான்.

சொல்லி வைத்தது போல் அந்த மரத்தடியில் வந்து நின்றது. குறட்டி மான்குட்டியில் கழுத்தில் மாலையாய் விழுந்தது.

"அம்மா" என்று கதறியது மான்குட்டி. எதிர்பாராத தாக்குதலால் நிலை குலைந்து போனது. அப்படி இப்படி கூட அசையாமல் நின்றது.

குறட்டிக்குக் கூட ரொம்ப ஆச்சரியமாக இருந்தது. குறட்டி அதன் முகத்தைப் பார்த்தது பாவமாக இருந்தது. அதற்குள் குறட்டி ரப்பர் போன்ற நீண்ட தனது உடலால் மானைச் சுற்றியது.

மான் தேம்பி அழுதது. அதன் கண்களில் கண்ணீர் வழிந்தது.

குறட்டி இப்படி திடீர் தாக்குதல் நடத்தும் போது எந்த ஒரு மிருகமும் இதனிடம் தப்பிக்க போராட்டம் நடத்துமே தவிர இப்படி அழுது ஆர்ப்பாட்டம் செய்யாது.

"ஆமாம்.... ஏன் அழுகிறாய்" என்றது குறட்டி.

மான் தனது அழுகையை நிறுத்தி விட்டு உறுதியான குரலில் சொன்னது.

"இப்போது சாவு என்பது நிச்சயமாகி விட்டது. சாகும் முன்னர் அம்மாவின் உயிரைக் காப்பாற்றிய பெருமையாவது என்னைச் சேரும். நீங்கள் மனது வைத்தால் எனக்கு உதவலாம்" என்றது.

(தொரும்)




- 1738 - மெதடிஸ்த இயக்கம் ஜோன் உவெஸலியால் ஆரம்பிக்கப்பட்டது.
- 1798 - அயர்லாந்தில் பிரித்தானிய ஆக்கிரமிப்புக்கெதிராக ஐரியர்களின் எழுச்சி ஆரம்பமாயிற்று.
- 1844 - முதலாவது மின்னியல் தந்திச் செய்தி சாமுவேல் மோர்ஸ் என்பவரால் வாஷிங்டனடிசியில் இருந்து மேரிலாந்துக்கு அனுப்பப்பட்டது. அனுப்பப்பட்ட செய்தி: What hath God wrought.
- 1861 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: ஐக்கிய அமெரிக்கப் படைகள் வேர்ஜீனியாவின் அலெக்சாண்டிரியா நகரைக் கைப்பற்றினர்.
- 1883 - நியூ யோர்க்கில் புரூக்ளின் பாலம் திறந்து விடப்பட்டது.
- 1901 - தெற்கு வேல்சில் இடம்பெற்ற விபத்தில் 78 சுரங்கத் தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர்.
- 1941 - இரண்டாம் உலகப் போர்: வடக்கு அட்லாண்டிக் பெருங்கடலில் "பிஸ்மார்க்" என்ற ஜெர்மன் போர்க்கப்பல் "ஹூட்" என்ற பிரித்தானியக் கப்பலைத் தாக்கி மூழ்கடித்தது.
- 1956 - சுவிட்ஸர்லாந்தில் முதலாவது யூரோவிஷன் பாடல் போட்டி இடம்பெற்றது.
- 1962 - அமெரிக்க விண்வெளி வீரர் ஸ்கொட் கார்ப்பெண்டர் அவ்ரோரா 7 விண்ணூர்தியில மூன்று முறை பூமியைச் சுற்றி வந்தார்.
- 1991 - எத்தியோப்பியாவில் இருந்து யூதர்களை இஸ்ரவேலுக்குக் கொண்டு வரும் சொலமன் நடவடிக்கையை இஸ்ரேல் ஆரம்பித்தது.
- 1993 - எதியோப்பியாவிடம் இருந்து எரித்திரியா விடுதலை அடைந்தது.
- 2000 - 22 வருட முற்றுகைக்குப் பின்னர் இஸ்ரேலியப் படையினர் லெபனான்னில் இருந்து வெளியேறினர்.
- 2000 - இலங்கையில் நோர்வேத் தூதரகம் மீது குண்டு வீசப்பட்டது.
- 2001 - எவரெஸ்ட் சிகரத்தை 15 வயது ஷெர்ப்பா டெம்பா ஷேரி எட்டினார். அச்சிகரத்தின் உச்சியை எட்டிய வயதில் குறைந்தவர் இவாரே.
- 2002 - ரஷ்யாவும் ஐக்கிய அமெரிக்காவும் மொஸ்கோ உடன்பாட்டை எட்டின.
- 2006 - விக்கிமேப்பியா ஆரம்பிக்கப்பட்டது.
- 2007 - ஈழப்போர்: யாழ்ப்பாணத்தின் நெடுந்தீவில் இலங்கைக் கடற்படைத தளத்தைக் கடற்புலிகள் தாக்கியளித்தனர்.
- 2007 - ஈழப்போர்: கொழும்பில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் இரண்டு இராணுவத்தினர் உயிரிழந்து நால்வர் காயமடைந்தனர்.

பிறப்புகள

- 1686 - கப்ரியேல் பரன்ஹைட், ஜெர்மனிய இயற்பியலாளர். (இ. 1736)
- 1819 - விக்டோரியா மகாராணி, ஐக்கிய அமெரிக்காவின் அரசி. (இ. 1901)
- 1905 - மிகயில் ஷோலகவ், நோபல் பரிசு பெற்ற ரஷ்ய எழுத்தாளர். (இ. 1984)
- 1921 - சு. வேலுப்பிள்ளை, ஈழத்து நாடகாசிரியர், எழுத்தாளர்
- 1979 - ட்ரேசி மெக்ரேடி, அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர்.

இறப்புகள்

- 1543 - நிக்கோலாஸ் கோப்பர்னிக்கஸ், வானியலாளர். (பி. 1473)
- 1981 - சி. பா. ஆதித்தனார் தினத்தந்தி நாளிதழ் நிறுவனர். (பி. 1905)

சிறப்பு நாள்

- எரித்திரியா: விடுதலை நாள். (1993)

### சு. வேலுப்பிள்ளை
### ஈழத்து நாடகாசிரியர், எழுத்தாளர்



சு.வே என அழைக்கப்படும் சுப்பிரமணியம் வேலுப்பிள்ளை இலங்கையின் சிறப்புமிக்க உருவகக்கதை எழுத்தாளரும் நாடகாசிரியரும் தமிழ்ப் பண்டிதரும் ஆவார். வேலுப்பிள்ளை யாழ்ப்பாண மாவட்டம், நாவற்குழியில் சுப்பிரமணியம், தையல்நாயகி ஆகியோருக்குப் பிறந்தவர். ஒரு பயிற்றப்பட்ட தமிழாசிரியராக 1946 முதல் 1981 வரை இலங்கையின் டிக்கோயா, மானிப்பாய், சுன்னாகம் ஆகிய இடங்களில் ஆசிரியப் பணி புரிந்தவர். சு.வேயின் முதல் சிறுகதை "கிடைக்காத பலன" 1943 இல் ஈழகேசரியில் வெளியானது. சு.வே யின் சிறுகதைகள், "மண் வாச்னை", "பால்காவடி" ஆகிய தலைப்புகளில் தொகுதிகளாக வெளிவந்தன. இவரது உருவகக்கதைகள் 1999 இல் மித்ர வெளியீடாக தொகுப்பாக வெளிவந்தன. 1965 இல் இலங்கை கலைக்கழகம் நடாத்திய நாடகப்போட்டியில் இவரது "வஞ்ச" என்ற ஓரங்க நாடகம் முதல் பரிசு பெற்றது. அடுத்த ஆண்டும் இவரது "எழிலரசி" என்ற் முழுநீள நாடகம் முதல் பரிசு பெற்றது. 1960 இல் இலங்கை வானொலி நாடகப்போட்டியில் இவரது "மண் வாசனை" க்கு முதல் பரிசு கிடைத்தது. 1968 இல் "ஒருமை நெறித்தெய்வம்" என்ற நாடகம் பரிசு பெற்றது. சு.வே வானொலி கிராம சேவைக்கு பல வானொலித் தொடர் நாடகங்களையும் எழுதினார். செங்கை ஆழியான் தொகுத்து வெளியிட்ட ஈழகேசரி சிறுகதைகள், மறுமலர்ச்சி சிறுகதைகள் ஆகிய தொகுப்புகளில் இவருடைய சிறுகதைகள் சில இடம்பெற்றுள்ளன

# அனர்த்த நிலைமைகளால் உளவியல் பாதிப்புக்கள்

## மருத்துவர் எச்சரிக்கை

(கொழும்பு)

**அனர்த்த நிலைமைகளினால் பாதிக்கப்பட்டவர்கள் நீண்ட கால உளவியல் பாதிப்புக்களை எதிர்நோக்கக் கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதாக காலி, கராப்பிட்டிய வைத்தியசாலையின் உளவியல் மருத்துவ நிபுணர் ரூமி ரூபன் எச்சரிக்கை விடுத்துள்ளார்**

அவர் மேலும் தெரிவிக்கையில்.

அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டு உளவியல் பாதிப்புக்கு உள்ளானவர்களிடம் நோய் அறிகுறிகளை காண முடியும்.

அனர்த்தங்களின் போது ஏற்படும் உயிர் மற்றும் உடைமைச் சேதங்கள் மற்றும் இழப்புக்களினால் ஏற்படக்கூடிய உளவியல் ரீதியான அச்சம் மற்றும் பாதிப்புக்கள் நீண்ட காலத்திற்கு தொடரக் கூடும்.

தூக்கமின்மை. அதிக கோபம். தனிமையில் இருத்தல். அடிக்கடி ஏற்படும் பயம் போன்றவற்றினால் இவ்வாறு பாதிக்கப்படுகின்றனர்.

குறிப்பாக சில சிறுவர்கள் இவ்வாறான உளவியல் பாதிப்புக்களை எதிர்நோக்குகின்றனர்.

அவ்வாறு பாதிக்கப்படும் சிறுவர் சிறுமியர் உடனடியாக அவர்களை பாடசாலை. கல்வியில் முழுமையாக ஈடுபடுத்த வேண்டியதுடன் அவர்களின் கருத்துக்களை செவிமடுக்கவும் வேண்டுமென டாக்டர் ரூபன் தெரிவித்துள்ளார். (இ-10)

# பாதிப்புக்குள்ளான வீடுகளைத் திருத்த இராணுவத்தைப் பயன்படுத்தத் தீர்மானம்

(கொழும்பு)

கொழும்பு மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் வெள்ளப்பாதிப்புக்கு உள்ளான வீடுகளை சுத்தப்படுத்தும் பொறுப்பை, இராணுவத்தில் உள்ள தொண்டர் அமைப்புகளுக்கு வழங்கவுள்ளதாக கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

வெள்ளத்தால் பெருமளவில் பாதிக்கப்பட்ட வெல்லம்பிட்டி, கொலன்னாவை உள்ளிட்ட பிரதேச மக்களின் தேவைகளை நிறைவேற்றுவது தொடர்பில், கொலன்னாவ பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் முக்கிய கலந்துரையாடலொன்று இடம்பெற்றுள்ளது.

இதன் போதே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டதாக, முஜிபுர் ரஹ்மான் குறிப்பிட்டுள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,



"வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக நாம் விரிவாக கலந்துரையாடி, பல தீர்மானங்களை எடுத்துள்ளோம். அவற்றில் குறிப்பாக, பாதிக்கப்பட்ட மக்களில், மீண்டும் அவர்களின் வீடகளுக்கு செல்லமுடியாத நிலையில் இருப்பவர்களுக்கு தற்காலிக கூடாரங்களை அமைத்து, அவர்களை தங்கவைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் மீண்டும் வீடுகளுக்கு செல்வதற்கு முடியுமாக இருப்பவர்களின் வீடுகளை சுத்தப்படுத்தும் பொறுப்பை, இராணுவத்தில் இருக்கும் தொண்டர் அமைப்புக்கு வழங்குவதென தீர்மானிக்கப்பட்டது. அதேபோன்று வெள்ளம் ஏற்பட்ட பகுதிகளில் பாரியளவில் திருட்டு சம்பவங்கள் இடம்பெறுவதாக தெரிவிக்கப்படுகின்றது. ஆகவே, பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு பொலிஸாரை ஈடுபடுத்துவதற்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அத்தோடு, முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு, தொடர்ந்து சமைத்த உணவு வழங்குவதற்கும் உறவினர்களின் வீடுகளில் இருப்பவர்களுக்கும் உலர் உணவுகளை வழங்குவதற்கும் இங்கு தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு தேவையான பாடசாலை உபகரணங்கள், அச்சுப்புத்தகங்கள், சீருடைகள் மற்றும் காலணிகள் தொடர்பில் பட்டியல் ஒன்றை தயாரிப்பதற்கு மாகாண கல்வி அமைச்சு ஊடாக பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்தல் கொடுப்பதற்கும் இதன் போது தீர்மானிக்கப்பட்டது" என்றார். (இ-5)

# நீர்மின் உற்பத்தி 50 வீதத்தால் அதிகரிப்பு

தேசிய மின்சார உற்பத்தி கட்டமைப்பில் நீர்மின் உற்பத்தி 50 வீதத்தால் அதிகரித்துள்ளது.

மின்உற்பத்தி நிலையங்களை அண்மித்த பகுதிகளிலுள்ள நீர்த்தேக்கங்களில் 68 வீதம் நீர்மட்டம் உயர்வடைந்துள்ளதாக இலங்கை மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் சுலக்ஷன ஜயவர்தன குறிப்பிட்டுள்ளார்.

காசல்ரீ நீர்த்தேக்கத்தில் 63.2 வீதமாகவும், மவுசாகலை நீர்த்தேக்கத்தில் 48.6 வீதமாகவும், கொத்மலை நீர்த்தேக்கத்தில் 80.9 வீதமாகவும், விக்டோரியா நீர்த்தேக்கத்தில் 70.1 வீதமாகவும் , ரந்தனிகலை நீர்த்தேக்கத்தில் 86.6 வீதமாகவும் நீர்மட்டம் உயர்வடைந்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, வெள்ளம் மற்றும் மண்சரிவால் சேதமடைந்த மின்விநியோக திட்டமிடல் கட்டமைப்பை திருத்துவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் சுலக்ஷன ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

இலகுவில் சென்றடையக் கூடிய ஆபத்து நிலைமையற்ற அதி வலு மற்றும் குறை வலு கொண்ட மின்சார விநியோக கட்டமைப்புகள் திருத்தியமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

குறிப்பாக வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள கொழும்பின் பல பகுதிகளில் தொடர்ந்தும் மின்சார விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

மின்விநியோகம் அல்லது அனர்த்தங்கள் தொடர்பில் 1901 என்ற துரித அழைப்பு இலக்கத்தின் ஊடாக மின்சக்தி அமைச்சுக்கு அறிவிக்க முடியும்.

மேலும், 1987 என்ற துரித அழைப்பு இலக்கத்தினூடாக இலங்கை மின்சார சபைக்கு அறிவிக்க முடியும்.

இதேவேளை, 011 303 0303 என்ற இலக்கத்தினூடாகவும் இலங்கை மின்சார சபைக்கு முறைப்பாடுகளை முன்வைக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

## இன்று ஒரு தகவல்

### குடித்தனக்காரர் விரும்பும் வீட்டுக்காரராக இருப்பது எப்படி?

சட்டம் பெரும்பாலும் குடித்தனக்காரர்களுக்கே சாதகமாக இருக்கிறது என்பதை வீட்டுக்காரர்கள் மறந்துவிடக்கூடாது.அது மட்டுமா? வருடக் கணக்கில் வழக்குப் பயில்கள் நீதிமன்றத்தில் கும்பகர்ணதூக்கத்தில் இருப்பதை நாம் கண்கூடாகக் கண்டும் கேட்டும் வருகிறோம். இவை போதாதென்று வாய்தா வக்கீல்களிடம் வேறு மாட்டிக் கொண்டால் அப்புறம் தீர்ப்புக் கிடைத்துக் குடித்தனக்காரர்களைக் காலி செய்வதற்குள் ஒரு யுகம் முடிந்துவிடும்.

எனவே சட்டத்தைச் சாந்திருப்பதைவிட, குடித்தனக்காரர்களோடு நல்லுறவு வைத்துக் கொண்டு மனிதாபிமானத்தோடு அணுகினால் தான் பிரச்சினைகள் சுமுகமாகத் தீர்க்கப்பட முடியும்.வாடகை கொடுப்பவர்கள் என்றால் கைகட்டி,வாய் பொத்தி நடக்க வேண்டும் என்று எந்த வீட்டுக்காரரேனும் எதிர்பார்ப்பாரே யானால் அவரைக் காட்டிலும் வேறு பத்தாம் பசலி இருக்க முடியாது.

எங்கள் வீட்டுக்காரரா? சரியான வம்பன் , வீம்பன் என்ற பெயரெடுப்பதைவிட தங்கமான மனிதர் என்று பெயரை எடுப்பதே அவர்களுடன் காலத்தை நல்லபடியாக ஓட்ட உதவும்.

வாடகையை உயர்த்தும் போது அதிகாரமிடாமல் வரி உயர்வைச் சொல்லி பக்கத்து வீட்டு,எதிர் வீட்டு அடுத்த வீட்டு வாடகை உயர்வைச் சொல்லி ,வாடகை உயர்வின் அவசியத்தைப் பக்குவமாக எடுத்துச் சொல்லுங்கள்.

வாடகையைத் தாமதமாக தர நேர்ந்தால் ஏதோ உங்களுக்கு எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டிருக்கலாம்.இல்லாவிட்டால் சரியாகத் தந்துவிடுவீர்களே! என்று சொல்லியபடி வாங்கிக் கொள்ளுங்கள்.மாறாக மனக் கசப்பைக் காண்பிக்காதீர்கள்.வாடகை சேர்ந்து கொண்டே போனால் அப்புறம் மொத்தமாகக் கொடுப்பது உங்களுக்குத்தானே கஷ்டம் என்று சொல்லுங்கள்.மாறாக இத்தனை மாதம் வாடகை தராவிட்டால் அதற்கு என்னையா அர்த்தம் என்று பாயாதீர்கள்.

வீட்டு ரிப்பேர்களை நம் வீடு என்ற அக்கறையுடன் செய்து கொடுப்பதில் அனுகூலம் இருக்கிறது.மாறாக, இத்தகைய செலவுகளை ஏற்க மறுப்பது பெரும் சண்டை சச்சரவில் கொண்டு போய் விட்டுவிடுகிறது.இயலவில்லையா? பரவாயில்லை .பண்புடன் மறுத்துவிடுங்கள்.ஆய் ஊய் என்று கூச்சல் வேண்டாம்.அதே போல் உங்கள் ஆட்சேபங்களையும் இந்த வகையிலேயே வெளிப்படுத்துங்கள். வார்த்தைகளை வரையறை இன்றி அவிழ்த்துவிட்டு விட்டுப் பின்னர் வருந்தாதீர்கள்.

ஆண் இல்லாத போது பெண்களிடம் வாடகை கேட்டுக் கத்துவதை தவறு என்று தெரியாமல் சிலர் செய்து கொண்டிருக்கிறார்கள்.

அதிகாரம் செய்ய முழு உரிமையுள்ள ஒரு வீட்டுக்காரார் தன்மையுடன் நடந்து கொண்டால் குடித்தனக்காரர்கள் தானாக இறங்கி வருவார்கள்.

சில வீட்டுக்காரர்கள் இப்படிப் புலம்புவார்கள். நல்ல குடித்தனக்காரர்கள் அமையணும்னா போன பிறவியில் புண்ணியம் பண்ணியிருக்கணும் என்று. இதெல்லாம் ஒன்றும் வேண்டாம்.

குடித்தனக்காரர்கள் நல்லவர்களாக இருப்பதும் அவர்களைப் பொல்லாதவர்களாக ஆக்காமலிருப்தும் வீட்டுக்காரர்களின் கையிலேயே இருக்கிறது.

**லேனா தமிழ்வாணன்**

# முன்னாள் இந்திய இராஜதந்திரியின் யாழ்ப்பாண பயணத்தின் வெளிப்பாடு

சீனாவானது கொழும்பு மற்றும் இலங்கையின் பிற இடங்களில் நிலைத்திருப்பதால் இந்தியாவின் பாதுகாப்பிற்கு எவ்வித சவால்களும் ஏற்படாது என்பது தெளிவாக நோக்கப்பட வேண்டிய நிலை காணப்படும் அதே வேளையில் இந்தியாவும் திருகோணமலையில் தனது நிலையைப் பலப்படுத்திக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு இந்தியாவின் முன்னாள் இராஜதந்திரி ஜி.பார்த்தசாரதி டில்லியில் இருந்து வெளியாகும், TheTribune நாளிதழில் எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். இதனைப் புதினப்பலகைக்காக மொழியாக்கம் செய்துள்ளவர் நித்தியபாரதி.

உள்நாட்டுப் போர் முடிவடைந்த பின்னர் இடம்பெறும் மீள்கட்டுமானப் பணிகளைப் பார்வையிடுவதற்காக மூன்று பத்தாண்டுகளுக்குப் பின்னர் கடந்த வாரம் நான் இலங்கைக்கு சென்றபோது அது மிகவும் ஒரு உணர்ச்சிபூர்வமான அனுபவமாக இருந்தது.

இந்திய இராணுவக் கட்டளைத் தளபதி லெப்.ஜெனரல் திபெந்தர் சிங்குடன் 1987 ஒக்டோபரில் நான் முதன் முதலாக யாழ்ப்பாணத்திற்குப் பயணம செய்திருந்தேன். எமது உலங்கு வானூர்தி யாழ்பபாணத்தில் தரையிறங்கியபோது கேட்ட ஏ.கே-47 ரக துப்பாக்கிச் சூட்டின் சத்தமானது இன்றும் என் நினைவில் பதிந்துள்ளது.

நான் தற்போது யாழ்ப்பாணத்தின் பலாலி விமானநிலையத்தில் தரையிறங்கிய போது இந்த நிலைமை மிகவும் மாறுபட்டிருந்தது. போரின் வடுக்கள் ஆறுவதற்கு இன்னமும் பல பத்தாண்டுகள் எடுக்கும் அதேவேளையில், யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுள்ள மாற்றங்களானது அனைவரையும் அதன்பால் ஈர்க்கும் என்பதே உண்மை.

யாழ்ப்பாணமானது தற்போது மிகவும் சுறுசுறுப்பான ஒரு நகரமாக மாறியுள்ளது. மாணவர்கள் தமது துவிச்சக்கர வண்டிகளில் பாடசாலைகளுக்குச் செல்வதையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின்



சிறப்பான மாற்றங்களையும் அவதானிக்க முடிந்தது.

மின்சாரம் மற்றும் நீர் வழங்கல் மிகவும் சீராகக் காணப்படுவதுடன், புதிய விடுதியானது விருந்தினர்களால் நிறைந்திருந்தது. இந்தியாவால் வழங்கப்படும் முழுமையான புனர்வாழ்வு உதவித் திட்டத்தைக் கண்காணிப்பதற்காக யாழ்ப்பாணத்தில் இந்தியத் தூதரகம் அமைகப்பட்டுள்ளமை மகிழ்ச்சியைத் தருகிறது.

இலங்கைக்கான குறிப்பாக போரால் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கான இந்தியாவின் அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பான தகவல்கள் பெரியளவில் வெளியிடப்படவில்லை.

போரால் பாதிக்கப்பட்ட 46 ஆயிரம் தமிழ் குடும்பங்களுக்கு இந்தியா வீடுகளை நிர்மாணித்துக் கொடுத்துள்ளது. இதற்கும் அப்பால, வடக்கு மாகாணம் முழுவதற்கும் சிறு வியாபாரத்தை விரிவுபடுத்துவதற்கும் யாழ்ப்பாணத்தின் தொழிற்றுறையை மேம்படுத்துவதற்கும் இந்தியா உதவிவருகிறது.

வைத்தியசாலைகளை நிர்மாணித்தலும், அவற்றுக்கான உபகரணங்களைப் பெற்றுக்கொடுத்தலும், நீர் வழங்கல் திட்டங்கள் போன்றவற்றையும் இந்தியா மேற்கொள்கிறது.

யாழ்ப்பாணத்திலுள்ள தமிழ் மீனவர்களுக்குப் படகுகள், மீன்பிடி வலைகள், குளிர்பதனிடும் உபகரணங்கள் போன்றவற்றையும் இந்தியா வழங்கியுள்ளது. தமிழ்நாட்டு மீனவர்களின் மீன்பிடி ரோலர்கள் தமது மீன்வளத்திற்கு குந்தகம் விளைவிப்பதாக யாழ்ப்பாணத்து மீனவர்கள் ஆத்திரப்படுவதில் எவ்வித இரகசியமும் இல்லை.

இந்திய மீன்பிடி ரோலர்கள் தமது கடல் எல்லைக்குள் மீன்பிடியில் ஈடுபட வேண்டும் என யாழ். குடாநாட்டு மக்கள் தெரிவித்தனர். இது உண்மையில் ஒரு மனிதாபிமான விவகாரமாகும். இந்த விடயத்தில் தமிழ்நாட்டிலுள்ள தமது சகோதரர்கள் புரிந்துணர்வுடனும ஆதரவுடனும் செயற்பட வேண்டும் என யாழ்ப்பாண வாழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

காங்கேசன்துறை துறைமுகம் மற்றும் பலாலி விமான நிலையம் போன்றன மேலும் விரிவுபடுத்தப்பட்ட பின்னர் இந்தியாவின் முதலீடுகளுக்கான வாய்ப்புக்கள அதிகமாக உள்ளன.

குறிப்பாக பாக்கு நீரிணையில் சுற்றுலாத்துறை மையம் ஒன்றை உருவாக்குவதற்கான பொருத்தமான இடமாக பலாலி விமானநிலையத்தை இந்தியா மாற்றுவதற்கான சாத்தியம் உள்ளது. இதற்கும் அப்பால், இந்தியாவின் உதவியுடன் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வரையான புகையிரதப் பாதைகள் மிக விரைவாகவும் முழுமையாகவும் நிர்மாணிக்கப்பட்டுள்ளமை மிகவும் மகிழ்ச்சியானதொரு விடயமாகும்.

கிழக்கு மாகாணத்தில் சம்பூர் அனல் மின்நிலையம் உருவாக்கப்படுவதில் நீண்ட காலமாக இழுபறி நிலை காணப்படுகின்றது.

இந்நிலையில், திருகோணமலையை பிராந்திய மையமாக மாற்றுவதில் இந்தியா எவ்வாறு உதவமுடியும் எனப் பலர் சிந்திக்கின்றனர். ஆனாலும் மூலோபாய முக்கியத்துவம் மிக்க திருகோணமலைத் துறைமுகத்தின் பெற்றோலிய சேமிப்பு வசதிகளை மேலும் விரிவுபடுத்துவதில் இந்தியா ஆர்வத்துடன் உள்ளது.

பெற்றோலிய அமைச்சர் தர்மேந்திரா பிரதன் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார். இவரது நிகழ்ச்சி நிரலில் திருகோணமலைத் துறைமுகத்தில் பெற்றோலிய சேமிப்பு வசதிகளை உருவாக்குவது தொடர்பான பேச்சுக்கள் மிகவும் முக்கிய இடத்தைப் பிடிக்கும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

வடக்கு மாகாணத்தில் இடம்பெற்ற தேர்தலின் பின்னர் முதலமைச்சராக பிரதம நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவு செய்யப்பட்டார். மாகாண அரசாங்கத்திற்கு மேலும் அதிகாரங்களைப் பகிர்ந்து கொடுக்க வேண்டும் எனப் பல்வேறு முறைப்பாடுகள் வைக்கப்பட்டுள்ளன.

இலங்கை அரசாங்கமானது பல்வேறு அரசியல் மாற்றங்களை மேற்கொள்வதற்கான வாக்குறுதிகளை வழங்கியுள்ள அதேவேளையில், வடக்கிலுள்ள தமிழ் மக்களின் எதிர்பார்ப்பையும் இது நிறைவு செய்யவேண்டும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட வேண்டும் என தமிழ் மக்கள் கோரிக்கை விடுக்கின்ற போதிலும் இன்னமும் இது தொடர்பாக இலங்கை அரசாங்கம் தீர்வை எட்டவில்லை. கிழக்கு மாகாணத்திலுள்ள சிங்கள மற்றும் தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் கருத்து வாக்கெடுப்புக்களை மேற்கொள்வதன் மூலம் வடக்கு, கிழக்கு இணைப்புத் தொடர்பான தீர்வை எட்ட முடியும்.

இதேவேளையில், இலங்கையில் பாரியதொரு அரசியல் யாப்பு மாற்றங்கள் இடம் பெறவுள்ளன. கடந்த காலத்தில் ஏற்பட்ட இனப் புறக்கணிப்பிற்கு வழிவகுத்த பல்வேறு விடயங்கள் இலங்கையின் புதிய அரசியல் யாப்பில் இடம்பெறும் என்கின்ற நம்பிக்கை காணப்படுகிறது.

தேசிய கட்சிகளை ஒன்றிணைக்கும் மைத்திரி- ரணில் ஐ.தே.க மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி போன்றன ஒன்றிணைந்துள்ளன. மகிந்தவின் குடும்ப ஆட்சியின் விளைவாக அரசியல்வாதிகளும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனாலேயே இவர்கள் தற்போது ஒன்றிணைந்துள்ளனர். இந்தக் கூட்டு அரசாங்கமானது அடுத்த தேர்தலிலும் இணைந்து போட்டியிட வேண்டுமா என்பது தெளிவில்லை.

(18 ஆம் பக்கம் பார்க்க...)

# அனர்த்த பகுதிகளுக்கு படையெடுக்கும் அரசியல்வாதிகளால் பாரிய நெருக்கடி

## பாதுகாப்புச் செயலாளர் விசனம்



(கொழும்பு)


**அனர்த்தப் பகுதிகளுக்குப் படையெடுக்கும் அரசியல்வாதிகளால், மீட்பு மற்றும் உதவிப் பணிகளை முன்னெடுப்பதில் பாரிய நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக இலங்கைப் பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.**

இதையடுத்து, அனர்த்த நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள் எந்த தொந்தரவும் இன்றி பணியாற்ற அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அரசியல் வாதிகள் மற்றும் ஏனைய குழுக்கள் செல்வதைத் தடுக்குமாறும், தாம், பொலிஸ்மா அதிபருக்கு தெரியப்படுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட பிரதேசங்களை நோக்கி படையெடுத்துச் செல்வதால், கடுமையான போக்குவரத்து நெருக்கடி ஏற்படுகிறது.

நிலச்சரிவினால் பாதிக்கப்பட்ட அரநாயக்கவுக்கு, கொழும்பில் இருந்து குடிநீரை எடுத்துச் செல்லும் நீர்த்தாங்கிகள், சென்றடைவதற்கு ஐந்து மணிநேரம் செல்கிறது. அந்த இடத்தைப் பார்க்கச் செல்பவர்களால் ஏற்பட்டுள்ள போக்குவரத்து நெரிசலே இதற்குக் காரணம்.

வெள்ள அபாயமுள்ள பகுதிகளில் வாழும் மக்களை புதிய கொழும்புத் திட்டத்தின் கீழ், பாதுகாப்பான இடங்களில் மீளக்குடியேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-10)



# மண்சரிவினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களை பார்வையிட்ட திகாம்பரம்


அண்மையில் ஏற்பட்ட மண்சரிவு அனர்த்தத்தில் சாமிமலை லெட்புரூக் தோட்டத்தில் 18 குடும்பங்களைச் சேர்ந்த 96 பேரும், கவரவிலை தோட்டத்தில் 17 குடும்பங்களைச் சேர்ந்த 65 பேரும் வீடுகளை இழந்து உறவினர் வீடுகளிலும், பாடசாலையிலும் தங்கவைக்கப் பட்டுள்ளார்கள்.

பாதிக்கப்பட்ட மக்களை மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சர் பி. திகாம்பரம், மத்திய மாகாண சபை உறுப்பினர் சரஸ்வதி சிவகுரு ஆகியோர் அம்பகமுவ பிரதேச சபை முன்னாள் தலைவர் ஜீ. நகுலேஸ்வரன் நேற்று முன்தினம் நேரில் சென்று பார்வையிட்டனர்.

இதன்போது அவர்களுக்கு ஆறுதல் கூறிய அமைச்சர், புதிய வீடுகளை தலா ஏழு பேர்ச் காணியில் அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுப்பதாகவும், தற்காலிகக் குடிகளை அமைக்க கூரைத் தகடுகள் வழங்குவதாகவும் உறுதியளித்தார். (இ-10)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 729

மது



ரோகன்




ரக்தி




நிஷாந்தன்




சுதா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.

அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தமிழ் சினிமா வரலாறு

165

## தோல்வி அடைந்த படத்தை வெற்றிப்படமாக்கிய எம்.ஜி.ஆர்.

...இதில் மனோகர், பாரதி, சந்திரகாந்தா ஆகியோரும் நடித்தனர். அய்யாப்பிள்ளை வசனம் எழுத, எம்.ஜி. பாலு டைரக்ட் செய்தார்.

இந்தப்படம் தோல்வி அடைந்தது.

இந்தக் கதையை எழுதியவர் சின்னப்பதேவர்தான். என் கதை நல்ல கதைதான். சரியானபடி தயாரித்தால் அது வெற்றி பெறும் என்று அவர் கூறி வந்தார்.

**எம்.ஜி.ஆர்.**

தெய்வச்செயல் கதையை எம்.ஜி.ஆரை வைத்து படமாக்கினால் நிச்சயமாக பெரிய வெற்றி பெறும் என்று நினைத்தார் தேவர்.

கதையை எம்.ஜி.ஆரிடம் சொன்னார். எம்.ஜி.ஆருக்கு ரொம்பவும் பிடித்து விட்டது.

தெய்வச் செயல் என்ற பெயருக்குப் பதிலாக நல்ல நேரம் என்று பெயர் சூட்டி மீண்டும் அதே கதையைப் படமாக்கத் தொடங்கினார் தேவர்.

எம்.ஜி.ஆருடன் கே.ஆர். விஜயா, அசோகன், சுந்தரராஜன், நாகேஷ், சச்சு ஆகியோர் நடித்தனர்.


முழுக்க முழுக்க ஒரு யானையும் எம்.ஜி.ஆரையும் சுற்றிப்பின்னப்பட்ட கதை இது.

ராஜு (எம்.ஜி.ஆர்.) சிறுவனாக இருந்தபோது சிறுத்தையிடம் இருந்து காப்பாற்றப்படுகிறது ஒரு யானை. இதனால் யானைகளிடம் மிகவும் அன்பு கொள்கின்றான் ராஜு. தனக்கு பல உதவிகள் செய்த ராமு என்ற யானையிடம் மிகவும் பாசம் கொள்கிறான்.

அவனுடைய மனைவி (கே.ஆர்.விஜயா) யானை ராமு மீது கொலைக்குற்றம் சாட்டுகிறாள். அதை விரட்டி அடிக்கும்படி கூறுகிறாள். இதனால் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. இறுதியில் தான் நிரபராதி என்பதை ராமு நிருபிக்கிறது.

வழக்கமாக எம்.ஜி.ஆர். படங்களில் இருந்து மாறுபட்ட படம் நல்ல நேரம். 10.03.1972 இல் வெளிவந்த இந்தப் படம் சென்னையில் 4 தியேட்டர்களிலும் மற்றும் முக்கிய ஊர்களிலும் நூறு நாட்கள் ஓடியது.

கண்ணதாசன் எழுதிய ஓடி ஓடி உழைக்கணும், டிக்... டிக்...டிக்... இது மனசுக்குத் தாளம், நீ தொட்டால் எங்கும் பொன்னாகுமே, அவிநாசி மணி எழுதிய ஆகட்டுண்டா தம்பி நடராஜா ஆகிய பாடல்கள் கே.வி. மகாதேவன் இசையில் ஹிட்டாக அமைந்தன.



**ராமன் தேடிய சீதை**

இதே ஆண்டில் சங்கே முழங்கு, ராமன் தேடிய சீதை, அன்னமிட்ட கை, இதய வீணை, ஆகிய படங்களில் எம்.ஜி.ஆர்.நடித்தார்.

ராமன் தேடிய சீதை, அன்னமிட்ட கை ஆகிய படங்களில் ஜெயலலிதாவும் நான் ஏன் பிறந்தேன் படத்தில் கே.ஆர்.விஜயாவும் சங்கே முழங்கு படத்தில் லட்சுமியும் எம்.ஜி. ஆருடன் நடித்தனர்.

இவற்றில் ராமன் தேடிய சீதை நூறு நாட்களுக்கு மேல் ஓடிய படம்.

**இதய வீணை**

தனது நண்பர்களான இதயம் பேசுகிறது மணியம், வித்வான், வே.லட்சுமணன் ஆகியோருக்காக ஒரு படம் செய்து கொடுக்க விரும்பினார் எம்.ஜி.ஆர்.

இதைத் தொடர்ந்து மணியனும் வித்வான் வே.லட்சுமணனும் சேர்ந்து உதயம் புரொடக்ஷன்ஸ் என்ற பட நிறுவனத்தைத் தொடங்கினர். இந்த நிறுவனத்தின் முதல் தயாரிப்பு இதய வீணை. இது மணியன் எழுதிய கதை.

எம்.ஜி.ஆருடன் மஞ்சுளா நடித்தார். படத்தை கிருஷ்ணன்-பஞ்சு டைரக்ட் செய்தனர்.


படத்தின் பெரும் பகுதி காஷ்மீரில் படமாக்கப்பட்டது. (தொடரும்)

# முன்னாள் இந்திய இராஜதந்திரியின்...

(16 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ஆனால், இலங்கை மீதான சீனாவின் ஒவ்வொரு நகர்வையும் இந்தியா சந்தேகக் கண்கொண்டு பார்ப்பது அறிவற்ற செயல் என்றாலும் கூட, இதன்மூலம் ஏற்படக்கூடிய பாதுகாப்புப் பிரச்சினைகளை இந்தியா கண்காணிக்க வேண்டியுள்ளது. இதேவேளையில், சீனாவானது கொழும்பு மற்றும் இலங்கையின் பிற இடங்களில் நிலைத்திருப்பதால் இந்தியாவின் பாதுகாப்பிற்கு எவ்வித சவால்களும் ஏற்படாது என்பது தெளிவாக நோக்கப்பட வேண்டிய நிலை காணப்படும் அதே வேளையில் இந்தியாவும் திருகோணமலையில் தனது நிலையைப் பலப்படுத்திக் கொள்ள வேண்டும்.

சீன- பாகிஸ்தானிய ஜே.எப் - 17 போர் விமானத்தைக் கொள்வனவு செய்வதில் இலங்கை தயக்கம் காண்பிக்கின்றது. இதற்குப் பதிலாக இந்தியாவின் இலகு ரக போர் விமானத்தைக் கொள்வனவு செய்வதற்கான தயார்ப்படுத்தலை இந்தியா மேற்கொள்கிறது.



இலங்கையுடனான இந்தியாவின் வர்த்தக மற்றும் முதலீட்டுத் தொடர்புகள் அதிகரித்து வருகின்றன. இந்தியா தற்போது இலங்கையின் மிகப்பாரிய வர்த்தகப் பங்காளியாக செயற்படுகிறது. முதலீட்டுத் தொடர்புகளும் அதிகரிக்கின்றன. குறிப்பாக வர்த்தகம், பெற்றோலியம் மற்றும் இரசாயனம், ரயர்கள், சீமெந்து, கட்டுமாணம் போன்றவற்றில் இந்தியாவுடனான இலங்கையின் தொடர்புகள் வலுத்து வருகின்றன.

சீனி சுத்திகரிப்பு ஆலைகள் போன்றவற்றை நிறுவுவது தொடர்பான பேச்சுக்கள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன. இலங்கையின் பெரும்பான்மை மக்கள் புத்த மதத்தைச் சேர்ந்தவர்களாவர். புத்தபிக்குக்களை உருவாக்குவதோடு மட்டுமல்லாது பூட்டான், மியன்மார் மற்றும் தாய்லாந்து போன்ற வங்களா விரிகுடாவின் எல்லை நாடுகளுடன் ஆன்மீக வழக்காறுகளைப் பகிர்ந்து கொள்வதிலும் இந்தியா நாட்டங்காட்ட வேண்டும்.

இவ்வாண்டின் பிற்பகுதியில் இந்தியாவின் டில்லியில் BIMSTEC உச்சி மாநாடு நடைபெறவுள்ளது. இந்தியா, நேபாளம். பூட்டான், பங்களாதேஷ், மியன்மார் மற்றும் தாய்லாந்து போன்ற நாடுகள் பௌத்த மரபுகளைப் பகிர்ந்து கொள்வதுடன், இப் பிராந்தியத்தை சுற்றுலாத்துறை மையமாக உருவாக்குவதற்காகவும் இதன் மூலம் உலகெங்கும் வாழும் 535 மில்லியன் பௌத்தர்களை இதன்பால் ஈர்த்துக் கொள்ள முடியும்.

மதசார் சுற்றுலாத் துறை என்பது தற்போது உலகெங்கும் பிரபலம் பெற்றுவருகிறது. சீனாவில் மட்டும் 250 மில்லியன் மக்கள் புத்த மதத்தைப் பின்பற்றுகின்றனர். குறிப்பாக இந்தியா தனது கிழக்கு அயல்நாடுகளுடன் ஒப்படும் போது தன்னை அனைத்துலக ரீதியான ஒரு கவர்ச்சிமிக்க சுற்றுலாத்துறை மையமாக மாற்றுவதற்கு இன்னமும் நீண்ட தூரம் பயணிக்க வேண்டியுள்ளது என்பது மிகவும் வேதனைமிக்க விடயமாகும். (முற்றும்)

# திருஞானசம்பந்தப் பெருமானின் பக்திச் சிறப்பு

சமய குரவர்கள் நால்வருள்ளும் முதல்வராகக் கொள்ளப்படுபவர் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார். சீர்காழி என்னும் திருப்பதியிலே அவதரித்து பாலகனாய் விளையாடும் பருவத்திலேயே பல கனிந்த பாடல்களைப் பாடியவர். மூன்று வயதிலேயே உமையம்மையாரின் ஞானப்பாலருந்தி ஞானம் பெற்றமை பற்றிச் சேக்கிழார் பாடுகிறார்.

சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கினி லோங்கிய ஞானம்
உவமையிலாக்கலை ஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தா ரந்நிலையில்

பெற்ற ஞானத்தினால் இன்னிசையினால் தமிழ் பரப்பினார் ஞானசம்பந்தர். தன்னை புதல்வராகவும் சிவபெருமானை தந்தையாகவும் சிவனுக்கு இசையாராதனை செய்துள்ளமை அவரது பக்திப் பாசுரங்கள் மூலம் புலனாகின்றது.

திருஞானசம்பந்தர் பிள்ளைப் பருவத்திலேயே இறைவனைப் பாடியவர் . ஆடல், பாடல் ஆகிய கலைகளை வழிபாட்டிற்கு உரியவை ஆக்கினார். அவர் பல பாடல்களில் அந்தந்த ஊர்க் கோயில்களைப் பாடும் இடத்தில் கோயில்களைச் சூழ்ந்த இயற்கை அழகுகளை எடுத்துரைத்துள்ளார். சங்க இலக்கியத்திற்கு அடுத்தபடி இயற்கையின் அழகைப் பலவாறு பாடிய சொல்லோவியங்களை அவருடைய தேவாரத்திலே காணலாம்.

"சீதப் புனல் வயல் சூழ்ந்த திருவாலவாயான் திருநீறே'' எனத் திருநீற்றின் மகிமையைக் கூறிய சம்பந்தர் சீதப் புனல் வயல் சூழ்ந்த என இயற்கை வனப்பை எடுத்துக் காட்டுகின்றார். பெருமானின் திருமேனி எழிலையெல்லாம் சிறப்புற வர்ணிக்கின்றார்.



சிவபெருமானின் திருவிளையாடல்களை மனங்குளிர, வாய்குளிர கவித்துவம் அமையுமாறு பாடியதால் "நற்றமிழ் வல்லஞானசம்பந்தன்" என்று சுந்தரரால் போற்றப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

உமையம்மையிடம் ஞானப்பாலுண்டமையைத் தொடர்ந்து முத்துப்பல்லக்கு, படிக்காசு என்பவற்றையெல்லாம் சிவனருளால் பெற்றார். எலும்பைப் பெண்ணாக்கி, பாம்பு கடித்த வணிகனை உயிர்ப்பித்து, ஆண் பனையை பெண் பனையாக்கியமை எனப் பதிகங்கள் பாடிப் பல அற்புதங்கள் செய்தார். திருநீற்றின் ஒளி விளங்க வைத்த செம்மலாக இவர் கொள்ளப்படுகின்றார். பாண்டியனது வெப்பு நோயை திருநீறு பூசி "மந்திர மாவது நீறு'' என்னும் திருநீற்றுப்பதிகத்தைப் பாடி நீக்கினார்.

திருஞானசம்பந்தப் பெருமானின் ஒவ்வொரு பதிகத்திலும் எட்டாவது பாடலில் இராவணன் கைலைமலையைத் தூக்கி எடுக்க முயன்று துன்பப்பட்டதை பற்றியும் சிவபக்தன் ஆனதைப் பற்றியும் பாடுவார். ஒன்பதாம் பாடலில் பிரமனும் திருமாலும் தேடிக் காண முடியாத பெருமை உடையவன் சிவபெருமான் எனவும் பத்தாம் பாடலில் சைவ பௌத்தத் துறவிகளின் போலி வாழ்க்கையை எள்ளியும் கடிந்தும் கூறுவார். பதினொன்றாம் பாடலில் தம் பெயரைப் பெருமிதத்துடன் குறிப்பிடுவார். சைனரும் பௌத்தரும் துறவறத்தையே பெருமையாகப் பேசி இல்லறத்தை பழித்து வந்தனர்.

திருஞானசம்பந்தர் பெண்களுக்கு நேர்ந்த தாழ்வைப் போக்குவதிலும் போலித்துறவை வெறுத்துப் பழிப்பதிலும் ஆர்வம் காட்டினார்.

"மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவில்லை
கண்ணில் நல்ல ஃதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணின் நல்லா ளொடும் பெருந்தகை இருந்ததே"

இப்பாடல் சைவர்களின் திருமணங்களின் போது மகிழ்ச்சியுடன் ஓதப்படுவதாகும். இறைவன் பெண் ஒரு பாகமாய் அர்த்தநாரீஸ்வரனாய் இருக்கும் கோலத்தைச் சுட்டிக்காட்டி இந்த உலகத்தில் நல்லபடி வாழ்வதற்கு இல்லற வாழ்க்கையே சிறந்தது என ஊக்கமும் நம்பிக்கையும் ஊட்டுகின்றார்.

அவரது பார்டல்க ளில் குதூகலம் நிரம்பி இருக் கும், சோர்வையோ ,கலக்கத்தையோ, துயரத்தையோ அவரது பாடல்களில் காண்பது அரிது.

மதுரையில் சைணர்களோடு வாதிடுவதற்கு திருஞானசம்பந்தர் புறப்பட்டார். அந்த நாள் சோதிடப்படி நல்ல நாள் இல்லை என உடன் இருந்தவர்கள் தடை எழுப்பினர்.

ஆ ன ா

திருஞானசம்பந்தர் எங்கள் தலைவன்சிவபெருமான்பெண் ஒருபாகமாகக் கொண்டவன். விஷத்தையே உண்டு கண்டம் கறுத்தவன் .கங்கையையும் பிறைச்சந்திரனையும் முடியில் அணிந்து என் உள்ளத்தில் குடி புகுந்தவன்.

அவ்வாறு அவன் என் உள்ளத்தில் இருப்பதால் சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி ஆகிய நாட்களும் ராகு, கேது என்பனவும் ஒரு தீமையும்செய்யமாட்டா. அவை எல்லாம் நல்லவைகளே. அடியார்களுக்கு மிக நல்லவை என்று அஞ்சாமையும் ஊக்கமும் பிறக்க "வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்"

என்ற பாடலை பாடினார்.

யான் உரைப்பன சிவன் உரையே என்பார். ஆணை நமதே என்று உறுதி ஊட்டுவார். இவ்வாறே அவருடைய வாழ்வினிலும் பாடல்களிலும் அஞ்சாமையும் தெளிவும் ஆர்வமும் நம்பிக்கையும் நிரம்பியிருந்தன. அவற்றை உணர்ந்த பிற்காலச் சான்றோர் அவருடைய பிறப்பு மற்றவர்களைப் போன்ற எளிய மனிதப்பிறவி அல்ல என்று வியந்து அவரை முருகனுடைய அவதாரம் என்று போற்றிப் பாடியுள்ளனர்.

ஞானசம்பந்தர் இல்லையென்றால் தமிழ் ஏது? சைவம் ஏது? திருநீறு ஏது?

இலங்கைத் திருநாட்டிலேயே யா/வண்ணை நாவலர்மகாவித்தியாலயத்திலேயே சைவசமய குரவர் நால்வருக்கான ஆலயம் அமைந்துள்ளது.

இங்கே நால்வ ருக்கான குருபூசை சிறப்புற நடத்தப்பட்டு வருகின்றது.

திருமதி ஜெ.சிவலோகநாதன்
யா/வண்ணை நாவலர்
மகாவித்தியாலயம்
யாழ்ப்பாணம்.

**திருஞானசம்பந்தரின் குருபூசைத் தினம் இன்று**

# மண்சரிவு அபாயத்தால் மக்கள் வெளியேற்றம்

## தொடரும் இயற்கையின் சீற்றம்

புலத்கொஹூபிட்டிய, அமபலம பிரதேசத்திலுள்ள பல இடங்களிலும் வீடுகளிலும் நிலம் மற்றும் சுவர்களில் வெடிப்புக் கோடுகள் விழுந்துள்ள நிலையில், அப்பிரதேசத்தைச் சேர்ந்த பலர், அங்கிருந்து வெளியேறி வருகின்றனர்.

இதேவேளை, மண்சரிவு அபாயத்துக்கு இலக்காகியுள்ள ரணால, தெடிகமுவ மலையை அண்மித்த 13 குடும்பங்களையும் அப்பிரதேசத்திலிருந்து வெளியேற்ற, அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அத்துடன், அரநாயக்க பிரதேசத்தில் தொடர்ந்து பெய்துவரும் மழை காரணமாக, அம்பலம மலையும் நேற்று முன்தினம் சரிந்துள்ளது. இந்த அம்பலம மலையானது, அரநாயக்க சாமசர மலையின் மற்றுமொரு வளைவிலேயே அமைந்துள்ளது.

இந்த மண்சரிவு காரணமாக, அம்பலம மலையடிவாரத்தில் அமைக்கப்பட்டிருந்த தற்காலிக முகாமொன்றை அங்கிருந்து அகற்றியுள்ள செஞ்சிலுவைச் சங்கம், அதனை அண்மித்த பிரதேசமான திக்பிட்டியவில் அம்முகாமை அமைத்துள்ளது. இதேவேளை, சாமசர மலையிலும் தொடர்ந்து மண்சரிவு ஏற்படக்கூடும் என அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது.

நாட்டில் தொடர்ந்து நிலவும் சீரற்ற வானிலை காரணமாக, கொழும்பு மாவட்டத்தின் பல பிரதேசங்களில் ஏற்பட்டிருந்த வெள்ளப் பெருக்கின் நிலைமை, தற்போது படிப்படியாகக் குறைவடைந்து வருவதாக, நீர்ப்பாசனத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணியளவில், நாகலகம்வீதி அகலப்பாதையின் நீர் மட்டம், 6 அடியாகக் குறைவடைந்துள்ளது என்றும் கொலன்னாவ மற்றும் கடுவெல பிரதேச செயலகப் பிரிவுகளில் நிரம்பியிருந்த வெள்ள நீரும், படிப்படியாகக் குறைவடைந்துள்ளது என்றும் அத்திணைக்களம் குறிப்பிட்டது.

எவ்வாறாயினும், இரத்தினபுரி, கேகாலை, மாத்தளை, நுவரெலியா, கண்டி, களுத்துறை மற்றும் பதுளை மாவட்டங்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்த மண்சரிவு அபாயம், தொடர்ந்தும் நீடிப்பதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்தது.

இதேவேளை, களனி கங்கையின் நீர் மட்டமும், படிப்படியாகக் குறைவடைந்து வருவதாகக் கூறிய அனர்த்த முகாமைத்துவ நிலையம், கங்கையை அண்மித்த பகுதிகளிலுள்ள வெள்ள நீரின் மட்டம், படிப்படியாகக் குறைவடைந்து வருகின்ற போதிலும், முற்றாக நீர் வற்றிவிடவில்லை என்றும் கூறியுள்ளது. (இ-10)

# செய்தித்துளிகள்

## சிறுத்தையின் தாக்குதலில் ஆறு பெண்கள் படுகாயம்

கொட்டகலை, ஸ்டொனிகிளிப் தோட்டத்தில் பணிபுரிந்த ஆறு பெண் தொழிலாளர்கள், சிறுத்தையொன்றின் தாக்குதலுக்கு இலக்கான நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.15 இற்கு மேற்படி பெண்களை, சிறுத்தையொன்று தாக்கியுள்ளது.

சிறுத்தைத் தாக்குதலில் படுகாயமடைந்த பெண்கள் அறுவரும், கொட்டக்கலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். (இ-10)

## மட்டு. பழுகாமத்தில் ஆணின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பழுகாமத்தில் இரண்டு பிள்ளைகளின் தந்தை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நடராசா நடேஸ்வரன் வயது-47 என்ற நபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலையில் அவரது வீட்டில் சடலமாக கிடந்துள்ளார். (இ-10)

## மின்னல் தாக்கியதால் 6 வீடுகளுக்குச் சேதம் சிறுமி காயம்

(கொழும்பு)

காலி பத்தேகம, இந்துருபத்வல பிரதேசத்தில் மின்னல் தாக்கியதில் 6 வீடுகள் சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மின்னல் தாக்கம் காரணமாக குறித்த வீடுகளில் இருந்த மின் உபகரணங்கள், மின் கட்டமைப்பு என்பன முற்றாகச் சேதமடைந்துள்ளதாக மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் பாதிக்கப்பட்ட ஒரு வீட்டில் இருந்த சிறுமி காயமடைந்துள்ளதாகவும், பத்தேகம வைத்தியசாலையில் குறித்த சிறுமி நேற்றுக்காலை அனுமதிக்கப்பட்டுள்ளார் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-10)

## கண்டி புறக்கணிப்புக்கு இ.தொ.காவே காரணம்

(கொழும்பு)

இந்திய வீடமைப்புத் திட்டத்தில் பதுளை மற்றும் நுவரேலியா தவிர்ந்து ஏனைய மாவட்டங்கள் புறக்கணிக்கப்பட்டமைக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் செயற்பாடே பிரதான காரணியாகும் என தமிழ் முற்போக்குக் கூட்டணி குற்றஞ்சாட்டியுள்ளது.

இது தொடர்பில், அக்கூட்டணியின் பிரதிச் செயலாளர் சண். பிரபாகரன் விடுத்துள்ள அறிக்கையொன்றில் மேற்கண்டவாறு குற்றம் சாட்டியுள்ளார். (இ-10)

## சமயச் சடங்கு போர்வையில் சிறுமிகள் மீது துஷ்பிரயோகம்

(கொழும்பு)

சமயச் சடங்கு என்ற போர்வையில் 16 வயது சிறுமியையும் 10 வயது சிறுமியையும் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய நபரொருவரை ஹசலக பொலிஸார் நேற்றுக்காலை கைது செய்துள்ளனர்.

சந்தேக நபருக்கு 40 வயது எனவும் அவர் தெஹிவளை பிரதேசத்தை சேர்ந்தவர் எனவும் தெரிய வந்துள்ளது. (இ-10)

## பெருமளவு தங்கக்கட்டிகளுடன் 3 இலங்கைப் பெண்கள் சிக்கினர்

(கொழும்பு)

டுபாயிலிருந்து சுமார் 10 கிலோகிராம் தங்கத்துடன் இலங்கை வந்த மூன்று பெண்கள், நேற்று திங்கட்கிழமை காலை கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்றுக் காலை 9 மணியளவில் கட்டுநாயக்க வந்தடைந்தபோது, சுங்கப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போதே கைது செய்யப்பட்டனர். குறித்த மூன்று பெண்களும் கொழும்பைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

கைப்பற்றப்பட்ட தங்கத்தின் பெறுமதி, சுமார் 60 மில்லியன் ரூபாய்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. (இ-10)

# தோட்டத் தொழிலாளர்களுக்கு இடைக்கால நிவாரணத் தொகை

## 2500 ரூபா வழங்க நடவடிக்கை

தோட்டத் தொழிலாளர்களுக்கு இடைக்கால நிவாரணத் தொகையாக 2,500 ரூபாயினை வழங்குவது தொடர்பில், இன்று செவ்வாய்க்கிழமை மாலைக்குள் பதில் வழங்குமாறு, அரசாங்கத்தினால் தோட்ட நிறுவனங்களுக்கு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில், கடந்த வெள்ளிக்கிழமை மாலை அலரிமாளிகையில் இடம்பெற்ற கலந்துரையாடலொன்றின் போதே அறிவிக்கப்பட்டுள்ளது என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் அமைச்சருமான மனோ கணேசன் தெரிவித்தார். இக்கூட்டத்தின் போது, நாட்டில் நிலவிய சீரற்ற வானிலை காரணமாக ஏற்பட்ட மண்சரிவு மற்றும் வெள்ளம் தொடர்பிலும் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினை தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், பெருந்தோட்டத் தொழிற் சங்க சம்மேளனத்தின் சார்பாக தமிழ் முற்போக்குக் கூட்டணி தலைவர் மனோ கணேசன், பிரதித் தலைவரகளான பழனி திகாம்பரம், வே.இராதாகிருஷ்ணன் மற்றும் தொழில் அமைச்சர், கூட்டு ஒப்பந்தத் தொழிற்சங்க பிரதிநிதிகள், தோட்ட நிறுவன சம்மேளனப் பிரதிநிதிகள், தொழில் ஆணையாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-10)

## 2016 ஆம் ஆண்டுக்கான 1 ஆம் பருவகால மீள் பரீட்சைக்கான விண்ணப்பம் கோரல்

2016 ஆம் ஆண்டு 1 ஆம் பருவ கால மீள் பரீட்சைக்கான (1St Semester-2016-Repeat E xam|) விண்ணப்பங்கள் யாழ். உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தால் கோரப்பட்டுள்ளன. இவ்விண்ணப்பங்களை 30. 05. 2016 தொடக்கம் பெற்று சமர்ப்பிக்க வேண்டிய இறுதித் திகதி 15.06.2016 ஆகும். எனவே அதற்கு முன் விண்ணப்பங்களை எமது நிறுவனத்தில் பெற்று பூர்த்தி செய்து நிர்வாகப் பகுதியில் வழங்கவும். மேலதிக விபரங்களுக்கு உதவிப் பதிவாளரை தொடர்புகொள்ளவும். (இ)

## பால் விநியோகிக்கும் லொறியும் காரும் நேருக்கு நேர் மோதியதில் விபத்து இருவர் பலி

கண்டி - கொழும்பு பிரதான வீதியின் கடுகண்ணாவைக்கு அருகில் நேற்று காலை இடம்பெற்ற விபத்தில் இருவர் பலியாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண்டியிலிருந்து கொழும்பு நோக்கி சென்ற பால் விநியோகிக்கும் லொறியொன்றும், எதிர் திசையில் வந்த கார் ஒன்றும் நேருக்கு நேர் மோதியதால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவத்தில் குறித்த காரின் சாரதியும், பெண் ஒருவரும் கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 150 | 200 | 140 | 200 | 250 |
| உருளைக்கிழங்கு | 100 | 150 | 110 | 120 | 120 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 100 | 80 | 120 | 160 | 120 |
| தக்காளி | 250 | 300 | 200 | 200 | 200 | 200 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 80 | 50 | 60 | 60 | 80 | 60 |
| கோவா | 130 | 200 | 120 | 140 | 140 | 200 | 150 |
| கரட் | 180 | 100 | 100 | 160 | 100 | 200 | 120 |
| பூசணி | 60 | 40 | 40 | 40 | 40 | 60 | 40 |
| புடோல் | 120 | 100 | 70 | 100 | 80 | 120 | 120 |
| வாழைக்காய் | 40 | 40 | 35 | 30 | 30 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 130 | 150 | 120 | 100 | 120 | 160 | 120 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 90 | 100 | 90 | 100 | 100 |
| பாகற்காய் | 200 | 200 | 140 | 200 | 120 | 120 | 140 |
| வெண்டிக்காய் | 140 | 100 | 100 | 100 | 80 | 120 | 140 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 80 | 120 | 100 | 120 | 100 |
| பயற்றங்காய் | 180 | 200 | 150 | 100 | 250 | 200 | 160 |
| லீக்ஸ் | 140 | 300 | 140 | 160 | 160 | 200 | 200 |
| பீற்றூட் | 120 | 150 | 120 | 160 | 140 | 160 | 120 |
| கறிமிளகாய் | 180 | 200 | 140 | 120 | 140 | 240 | 150 |
| முருங்கைக்காய் | 180 | 150 | 100 | 120 | 120 | 200 | 150 |
| போஞ்சி | 250 | 200 | — | 220 | 200 | 300 | 250 |
| கத்தரிதம்புள்ள | 180 | — | 120 | — | — | 160 | 200 |
| கீரை – 1 பிடி | 60 | 50 | 15 | 40 | 30 | 50 | 40 |
| தேசிக்காய் | 350 | 400 | 300 | 300 | 350 | 200 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 30-50 | 15-30 | 40 | 20-30 | 20-25 | 40 |
| இராசவள்ளி | 150 | 300 | 130 | 180 | 160 | 200 | 160 |
| வெங்காயப்பூ | 350 | — | — | — | — | — | — |
| முள்ளங்கி | 80 | — | — | 100 | 100 | 100 | 100 |
| பொன்னாங்காணி | 50 | 50 | 20 | 30 | 40 | 35 | 25 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 80 | 120 | — | 80 | — | — | — |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## குண்டு வெடித்தது ஜனாதிபதி சந்திரிகா படுகாயம் 187

சந்திரிகாவுக்கும் மனித வெடிகுண்டுக்குமிடையே கார் இல்லாமல் இருந்திருந்தால் குண்டு வெடிப்பில் அவர் பலியாகி இருப்பார். கார்தான் அவருடைய உயிரைக் காப்பாற்றியது.

வெடிகுண்டுப் பெண்ணை வழிமறித்து மடக்கிய டி.ஐ.ஜி., 3 பொலிஸார், ஜனாதிபதியின் மெய்க்காவலர்கள் 4 பேர் அந்த இடத்திலேயே உடல் சிதறிப்பலியானார்கள்.

### சிகிச்சை

சந்திரிகாவின் கை, வலது கண், மற்றும் நெற்றியில் வெடிகுண்டுச் சிதறல்கள் புகுந்து இருந்தன. இரத்தம் கொட்டிய நிலையில் அவரை நவலோக என்ற தனியார் வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்த்தனர். தீவிர சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்ட அவருக்கு உயர் வைத்தியர்கள் குழு உடனடியாகச் சிகிச்சை அளித்தனர்.

சந்திரிகாவின் உடலில் புகுந்திருந்த வெடிகுண்டுச் சிதறல்களை சிகிச்சை மூலம் அகற்ற வைத்தியர்கள் முடிவு செய்தனர். இரவோடு இரவாக சிகிச்சை நடந்தது.

வலது கண்ணில் புகுந்து இருந்த வெடிகுண்டுச் சிதறல்கள் வெற்றிகரமாக அகற்றப்பட்டுக் கண்ணின் மீது பண்டேச் போடப்பட்டது. அதேபோல கையிலும் நெற்றியிலும் பதிந்து இருந்த வெடிகுண்டுச் சிதறல்களும் வெளியே எடுக்கப்பட்டன. விடிய விடிய சிகிச்சை நீடித்தது.

### குணம் அடைந்தார்

சிகிச்சைக்குப்பிறகு அவர் வேகமாகக் குணம் அடைந்து வருவதாகவும் அவருடைய உடல் நிலை திருப்திகரமாக இருப்பதாகவும் வைத்தியர்கள் தெரிவித்தனர். அவருடைய கண் பார்வையில் பாதிப்பு இல்லை என்றும் அவர்கள் கூறினார்கள். வைத்தியசாலையில் படுக்கையில் இருந்தபடி நாட்டு மக்களுக்கு அவர் ஒரு செய்தியையும் வெளியிட்டார். இந்த நெருக்கடியான நேரத்தில் மக்கள் அனைவரும் அமைதியாக இருந்து சட்ட ஒழுங்கைக் காப்பாற்ற வேண்டும் என்று அந்தச் செய்தியில் அவர் கூறி இருந்தார். தொலைக்காட்சியிலும் வானொலியிலும் அந்தச் செய்தி வாசிக்கப்பட்டது.

### இன்னொரு குண்டு வெடிப்பு

கொழும்பு நகரில் இருந்து 15 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள ஜாஎல என்ற இடத்தில் 18.12.1999 அன்று இரவு எதிர்க்கட்சி சார்பில் தேர்தர் பிரசாரம் நடந்தது. சந்திரிகா கூட்டத்தில் குண்டு வெடித்த சிறிது நேரத்தில் அந்தக் கூட்டத்திலும் குண்டு வெடித்தது. இந்தச் சம்பவத்தில் 10 பேர் கொல்லப்பட்டனர். 40 பேர் படுகாயம் அடைந்தனர்.

வவுனியாவில் இராணுவ தலைவராக இருந்து ஓய்வு பெற்ற முன்னாள் இராணுவ ஜெனரல் லக்கி அல்காமா என்பவரும் இந்தக் குண்டு வெடிப்பில் பலியானார்.

கொழும்பில் நடந்த 2 குண்டு வெடிப்புச் சம்பவங்கள் குறித்தும் ஜனாதிபதித் தேர்தலுக்கான எதிர்க்கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க கருத்துத் தெரிவித்தார்.

எங்கள் கட்சிக் கூட்டத்தில் குண்டு வைத்தது ஜனாதிபதி சந்திரிகாவின் ஆட்கள் தான் என்று அவர் குற்றம் சுமத்தினார்.

இரு சம்பவங்கள் குறித்தும் இங்கிலாந்தின் ஸ்காட்லாண்டுயார்டு பொலிஸ் விசாரணை நடத்த வேண்டும் என்றும் அவர் வற்புறுத்தினார்.

ஜனாதிபதியாக சந்திரிகா மீண்டும் பதவி ஏற்றார்.

ஜனாதிபதி ஆட்சி முறை நாடான இலங்கையில் ஜனாதிபதியை மக்கள் நேரடியாக வாக்களித்துத் தேர்ந்தெடுப்பார்கள்.

ஜனாதிபதி சந்திரிகாவின் பதவிக்காலம் முடிவடைந்ததைத் தொடர்ந்து புதிய ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்க 21.12.1999 அன்று தேர்தல் நடந்தது.

### பலத்த பாதுகாப்பு

தேர்தல் களத்தில் 13 வேட்பாளர்கள் இருந்த போதிலும் ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் முக்கிய எதிர்க்கட்சி வேட்பாளரான ரணில் விக்கிரம சிங்கவுக்கும் இடையேதான் உண்மையான போட்டி இருந்தது.

18.12.1999 அன்று மனித வெடிகுண்டு மூலம் ஜனாதிபதி சந்திரிகாவைக் கொலை செய்ய நடந்த சம்பவத்தைத் தொடர்ந்து தேர்தல் வரலாறு காணாத பாதுகாப்பு ஏற்பாடு களுடன் நடைபெற்றது.

### 9 ஆயிரம் ஒட்டுச்சாவடி

கொழும்பு உட்பட பல நகரங்களில் துப்பாக்கி ஏந்திய பெலிஸார் ரோந்து சுற்றிப் பாதுகாப்பு ஏற்பாடுகளைத் தீவிரமாகக் கவனித்தனர். நாடு முழுவதும் 9 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டிருந்தன. ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் தேர்தல் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

### விறுவிறுப்பான வாக்குப்பதிவு

வாக்குப்பதிவு காலை 7 மணிக்குத் தொடங்கியது. நாடு முழுவதும் நிலவிய பதற்றமான சூழ்நிலையிலும் வாக்குப்பதிவு விறுவிறுப்பாக நடைபெற்றது.

குண்டு வெடிப்பு, விடுதலைப்புலிகளின் மிரட்டல் போன்ற பதற்றங்களுக்கு இடையே ஒரு சில வன்முறைச்சம்பவங்களைத் தவிர தேர்தல் அமைதியாகவும் விறுவிறுப்பாகவும் நடைபெற்றது.



குண்டு வெடிப்பில் படுகாயம் அடைந்த சந்திரிகா, கண்ணில் கட்டுடன். அருகே தாயார் சிறிமாவோ பண்டாரநாயகா.

(தொடரும்)

நேர்மையான பாதையில் விடாப்பிடியாகச் சென்று உங்களது முயற்சியில் வெற்றியடையுங்கள். அதுவே நிலையான வெற்றி.
– ஓர் அறிஞர்.

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழக முதல்வர் ஜெயலலிதாவை முதலமைச்சர் விக்கி சந்திக்க வேண்டும்

தமிழக சட்டசபைத் தேர்தலில் வெற்றி பெற்ற அதிமுக பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா நேற்றைய தினம் மீண்டும் முதலமைச்சராகப் பதவி ஏற்றுள்ளார்.

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா மீண்டும் முதலமைச்சராகப் பதவி ஏற்றுள்ளமை ஈழத்தமிழர்களுக்கு சாதகமானது என்பதை கூறித்தானாக வேண்டும்.

தமிழகத்தின் சட்ட சபையில் ஈழத்தமிழர்கள் தொடர்பில் காத்திரமான தீர்மானங்களை நிறைவேற்றியவர் முதல்வர் ஜெயலலிதா என்பது மறுக்க முடியாத உண்மை.

இந்நிலையில் மீண்டும் செல்வி ஜெயலலிதா தமிழகத்தின் முதல்வராக தெரிவாகியுள்ளமை ஈழத் தமிழர்களுக்கு பலத்த பக்கபலம் என்பதை யாரும் மறுத்து விட முடியாது.

சட்டசபைத் தேர்தலின் போது கச்சதீவு முதல் ஈழத்தமிழர்களின் பிரச்சினைக்கான தீர்வு வரை தேர்தல் பிரசாரத்தில் பிரஸ்தாபித்திருந்த செல்வி ஜெயலலிதா மீண்டும் முதல்வராகியுள்ளமை அவரின் தேர்தல் பிரசாரத்திற்கு தமிழ் நாட்டு மக்கள் வழங்கிய ஒப்புதல் என்று கூறிக்கொள்ளலாம்.

எனவே, ஈழத்தமிழர்கள் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவுடனும் தமிழக மக்களுடனும் நல்லதொரு உறவைப் பேணிக்கொள்ள வேண்டும்.

பொதுவில் ஈழத்தமிழர்கள் அண்டை நாடுகளுடனான உறவிலோ அல்லது உள்நாட்டின் தென் பகுதியில் இருக்கக் கூடிய தமிழர் சார்புடைய சிங்கள மக்களுடனான உறவைப் பலப்படுத்துவதிலோ, இலங்கை ஆட்சியாளர்களுக்கு ஆதரவு வழங்கி தமிழர்களை எதிர்க்கண் கொண்டு பார்க்கின்ற நாடுகளுடன் ஒரு நல்லுறவை ஏற்படுத்தி அதனூடு எங்களுக்கும் அவர்களுக்குமான விரிசலைக் குறைக்கின்ற ஏற்பாடுகளோ எங்களிடம் ஒரு போதும் இருக்கவில்லை.

மாறாக நாங்கள் சந்தர்ப்பவாதிகளாகவே மற்றவர்களின் கண்களுக்குத் தெரிகின்றோம். இதற்கு மேலாக அரசியல் இராஜதந்திரம் அறவே இல்லாதவர்கள் என்பதும் நிர்வாகப் பணிகளை செம்மையாகச் செய்யத் தெரியாதவர்கள் என்ற பெயருமே எங்களுக்குச் சொந்தமாக உள்ளது.

எனவே, இந்த நிலைமையில் இருந்து எங்களை நாம் திருத்தியும் மாற்றியும் கொள்ள வேண்டும். இதற்காக எங்களிடம் இருக்கக்கூடிய பலவீனம் என்ன என்பதை நாம் அறிந்து கொள்வது கட்டாயமானது. இதை நாம் செய்யத் தவறினால் எங்கள் தொடர்பில் சர்வதேச சமூகம் கொஞ்சமேனும் கொண்டுள்ள அனுதாபமும் கரிசனையும் அறவே இல்லாமல் போய் விடும்.

சர்வதேசம் என்று கூறுவதை சற்று விரிவுபடுத்திப் பார்த்தால் எங்கள் புலம்பெயர் உறவுகள் கூட, எங்களின் அரசியல் தலைமை தொடர்பில் அதிருப்தி கொண்டுள்ளன.

நிதியைப் பெறும் நோக்குடனேயே தமிழ் அரசியல் தலைமை தங்களிடம் வருவதாகவும் அவர்கள் நினைக்க ஆரம்பித்து விட்டனர். இந் நிலைமை அவ்வளவு ஆரோக்கியமானது அல்ல.

பொதுவில் தமிழ் அரசியல் தலைமையில் இருக்கக் கூடிய அதிருப்தி நிலைமையில், வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் நம்பிக்கைக்குரிய தலைவராக இருக்கின்ற வகையில், தமிழ் அரசியல் தரப்பின் ஒற்றுமை; தரமான அரசியல் இராஜதந்திரம் என்பவற்றை கட்டி எழுப்பி தமிழ் அரசியல் தலைமையை நெறிப்படுத்துகின்ற தார்மிகப்பணி வடக்கின் முதலமைச்சரிடம் உள்ளது.

எனவே, இவற்றைச் செய்ய வேண்டிய பெரும் பொறுப்பில் உள்ள வடக்கின் முதல்வர், இந்தியாவுக்கு விஜயம் செய்து தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவை நேரில் சந்தித்து அவருக்கு தமது வாழ்த்தை தெரிவிப்பதுடன் பிரதமர் மோடியையும் சந்திப்பது அவசியமாகும்.

## அனுர சேனநாயக்க நேற்றுக் கைது

(கொழும்பு)

முன்னாள் சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் அனுர சேனநாயக்க நேற்று குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ரக்பி விளையாட்டு வீரர் வசீம் தாஜுதீன் கொலை தொடர்பாகவே அவர் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்று காலை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு விசாரணைக்காக அழைக்கப்பட்ட அனுர சேனநாயக்கவிடம், வாக்குமூலம் பெறப்பட்ட பின்னர் அவர் கைது செய்யப்பட்டார்.

அவரை கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொலை தொடர்பாக அனுர சேனநாயக்கவிடம் ஏற்கெனவே இரண்டு நாட்கள் விசாரணை நடத்தப்பட்டிருந்தது.

கைது செய்யப்பட்ட அனுர சேனநாயக்க, முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு மிகவும் நெருக்கமானவர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)

## கடற்படை மருத்துவர்கள் மக்களுக்கு சிகிச்சை

(கொழும்பு)

வெள்ளம் காரணமாக இடம்பெயர்ந்த மக்களுக்கு இலங்கை மற்றும் இந்திய கடற்படை மருத்துவர்கள் மருத்துவ சிகிச்சைகளை வழங்கியுள்ளனர்.

இரு நாடுகளின் கடற்படைய மருத்துவர்கள் கடந்த சில நாட்களாக இந்த மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ளனர்.

வெல்லம்பிட்டி, ஒருகொடவத்தை, கடுவலை, பியகம, மல்வானை, மாப்பிட்டிகம, அவிசாவளை ஆகிய இடங்களில் இந்த மருத்துவச் சேவைகள் நடத்தப்பட்டுள்ளன.

நிவாரண உதவிகளை ஏற்றி வந்த இரண்டு இந்திய கப்பல்களில் இந்திய மருத்துவர்களும், மருத்துவ உதவியாளர்களும் இலங்கை வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

# உயர்பாதுகாப்பு வலயங்களாக அனர்த்த பாதிப்பு பகுதிகள் அறிவிப்பு

## ஜனாதிபதி மைத்திரி பணிப்புரை

(கொழும்பு)

சீரற்ற வானிலையால் பாதிக்கப்பட்ட பகுதிகளை உயர் பாதுகாப்பு வலயங்களாக பிரகடனப்படுத்துமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பணிப்புரை வழங்கியுள்ளார்.

அனர்த்தங்களுக்குள்ளான பகுதிகளில் இடம் பெறக்கூடிய திருட்டு சம்பவங்கள் மற்றும் குற்றங்களை தடுக்கும் நோக்கில் இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை கொழும்பு மாவட்டத்தில் நேற்றிலிருந்து தாழ் நிலங்களில் மண் நிரப்பி விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் அனர்த்த நிலைமையினால் ஏற்பட்ட சூழல் பாதிப்பை முகாமைத்துவம் செய்வதற்கு விசேட சூழல் நிவாரண செயலணியொன்றை நியமிப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் மக்களின் வாழ்க்கைக்கு ஏற்ற சூழலொன்றை ஏற்படுத்துதற்கான நடவடிக்கைகள் இதனூடாக முன்னெடுக்கப்படவுள்ளன

அனர்த்த நிலைமையினால் சூழலுக்கு ஏற்பட்ட பாதிப்பை முகாமைத்துவம் செய்வதற்கு, மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்வதற்கு நேற்று முற்பகல் இடம்பெற்ற கலந்துரையாடலில் ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார்

மத்திய சுற்றாடல் அதிகார சபை, அனர்த்த முகாமைத்துவ அமைச்சு, முப்படையினர், பொலிஸார், மாவட்ட செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள் மற்றும் அனைத்து அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் போன்று சுயாதீன அமைப்புக்களை பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் குறித்த செயலணியை உருவாக்குமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார்

வெள்ளம் வடிந்தோடி வரும் நிலையில் மக்கள் முகம்கொடுக்கும் டெங்கு போன்ற நோய்களை தடுப்பது குறித்தும் அவதானம் செலுத்த வேண்டுமென ஜனாதிபதி இதன்போது மேலும் அறிவுறுத்தியுள்ளார். (செ-11)

# நான் அவ்வாறு கூறவில்லை

## வடக்கு ஆளுநர் கூரே

(யாழ்ப்பாணம்)

சமஷ்டி கோரி பிரேரணை நிறைவேற்றும் உரிமை வட மாகாணசபைக்கு கிடையாது என தான் உரையாற்றியதாக வெளியிடப்பட்டுள்ள செய்திகளை மறுத்து தான் அவ்வாறு உரையாற்றவில்லை என்பதற்கு ஆதாரமாக உரையின் இறுவெட்டினை வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே நேற்றைய தினம் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்கேஸ்வரனிடம் கையளித்துள்ளார்.

வடமாகாண முதலமைச்சர் மேலதிகமாக 3 அமைச்சுப் பொறுப்புக்களை பதவியேற்கும் நிகழ்வு நேற்றைய தினம் வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது. அந்த நிகழ்வின் இறுதியிலேயே முதலமைச்சரிடம் ஆளுநர் குறித்த இறுவெட்டினை கையளித்தார்.

வட மாகாணசபையில் அண்மையில் நிறைவேற்றப்பட்ட அரசியல் யாப்புக்கான யோசனையில் சமஷ்டி முறையிலான தீர்வை முன்வைத்து அது பிரேரணையாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

குறித்த பிரேரணை தொடர்பில் வட மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே கொழும்பில் கருத்து வெளியிட்டதாக கொழும்பில் இருந்து வெளிவரும் ஊடகங்களில் செய்தி வெளிவந்திருந்தது.

இவ்வாறு செய்திகள் வெளிவந்தமையினையிட்டு ஆளுநர் தனது பொறுப்பின் எல்லையை மீறி விட்டார். அதனால் அவராக பதவி விலகவேண்டும் அல்லது ஜனாதிபதி அவரை மீளப் பெறவேண்டும் என பல்வேறு கருத்துக்கள் வெளிவந்திருந்தன.

இதற்கு பதிலளித்துள்ள ஆளுநர், தமக்கு எது வேணடும் என கோரும் உரிமை ஓர் மாகாணத்துக்கு உண்டு. அவர்கள் எதைக்கோரினாலும் அது சட்டம் ஆக்கப்பட வேண்டும். சட்டத்தினை பாராளுமன்றமே உருவாக்கும் என்ற கருத்தையே தெரிவித்ததாக கூறியுள்ளதுடன் இதற்கு ஆதாரமாக தான ஆற்றிய உரையின் இறுவெட்டினை பார்வையிடுமாறு கோரி அதன் பிரதியினை சமர்ப்பித்தார். (செ-9,4)

## யாழில் வெசாக் தினத்தன்று மதுபானம் விற்றவர் கைது

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் கிழக்குப் பகுதியிலுள்ள வீடொன்றில் வைத்து மதுபானம் விற்பனை செய்த குடும்பஸ்தரை கோப்பாய் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

கைது செய்யப்பட்டவரிடமிருந்து 180 மில்லி லீற்றர் கொள்ளவுடைய 2 மதுபானப் போத்தல்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.


வெசாக் தினத்தை முன்னிட்டு நாடு பூராகவுமுள்ள மதுபான விற்பனை நிலையங்கள் கடந்த இரண்டு நாட்களாக மூடப்பட்டதால் இந்த நபர், மதுபானங்களை தனது வீட்டில் வைத்து அதிக விலைக்கு விற்பனை செய்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கோப்பாய் பொலிஸார் இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணையினை மேற்கொண்டு வருகின்றனர். (செ-11)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மறறும்பராமரிப்புவேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 8 மணி முதல்மாலை 5.30 மணிவரை யாழ் பிரதேசத்தில் பிறவுண் வீதி, அரசடி வீதி புகையிரத கட வையிலிருந்து தட்டார் தெரு சந்தி வரை, கே.கே. எஸ். வீதி நாச்சிமார் கோவிலிலிருந்து சிவன் கோவில் வரை, நாவலர் வீதியில் ஐந்து சந்தியிலிருந்து இலுப்பையடி சந்தி வரை, கஸ்தூரியார் வீதியில் அரசடி வீதி சந்தியிலிருந்து ஸ்ரான்லி வீதி சந்தி வரை, மானிப்பாய் வீதியில் ஓட்டுமடம் சந்தியிலிருந்து கே.கே.எஸ் வீதி வரை, அசாத் வீதி, வி.ஏ.தம்பி லேன், பிரப்பங்குளம் வீதி, பொன்னப்பா வீதி, சிவலிங்கப்புளியடி, கன்னாதிட்டி, மணிக்கூட்டு வீதி, சிவன்பண்ணை வீதி, காதி அபூபக்கர் வீதி, கம்பஸ் லேன், நாவற்குழி, பனைவள ஆராய்ச்சி நிலையம், சங்கன் கொங்கிறீட் மிக்சர் பிளான்ட் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில தீவீரகம (பெரிய உளுக்குளம்), கோவில்குளம் சிவன் கோவிலடி பிரதேசம் ஆகிய இடங்களில் மின் தடைப்படும். (இ-9)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்




நமது நாட்டுக்குத் தேவையானது இதுவே. பொறுமையாயிருங்கள். மரணம் வரை நன்றியோடிருங்கள். உங்களுக்குள்ளே சண்டை போடாதீர்கள். பணவிடயங்களில் முற்றும் தூய்மையாக இருங்கள். நம்பிக்கையும் நேர்மையும் பக்தியும் உங்களிடம் உள்ளவரையில் எல்லாம் முன்னேற்றமடையும். உங்களுக்குள் பிளவு உணர்ச்சி ஏற்படாதவரையில் இறைவனருளால் உங்களுக்கு அபாயமில்லை என்று நான் உறுதி கூறுவேன். நிச்சயமாக நன்மை விளையும் என்று உணராமல் உங்கள் மனத்தில் உள்ளதை வெளியிட வேண்டாம். மிகப் பெரிய எதிரியாயிருந்தாலும் அவனிடமும் அன்பு நிறைந்த இதமான மொழிகளையே பேசுங்கள். எல்லாப் பெருக்கமும் வாழ்வு; எல்லாச் சுருக்கமும் சாவு. எல்லா அன்பும் பெருக்கம்; எல்லாச் சுயநலமும் சுருக்கமே. எனவே வாழ்வைப் பற்றிய ஒரே விதி அன்பே.

வடமாகாண வல்லவன்

# கழுகுகளின் உதைபந்தாட்டம் புங்குடுதீவு நசரேத் வெற்றி









பருத்தித்துறை உதைபந்தாட்ட சங்க அனுமதியுடன் நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண வல்லவன் உதைபந்தாட்ட தொடரில் நடைபெற்ற போட்டியில் புங்குடுதீவு நசரேத் வி.க. எதிர்த்து மன்னார் றீகன் ஸ்ரார் வி.க. மோதியது.

பரபரப்பான போட்டியில் முதலாவது கோலினை ஆட்டத்தின் இரண்டாவது பாதியின் 33 ஆவது நிமிடத்தில் றீகன் ஸ்ரார் வி.க. மதுரன் பதிவு செய்தார். தொடர்ந்த ஆட்டத்தில் நசரேத் வி.க. வீரர் பிரசாந் ஆட்டத்தின் 45 ஆவது நிமிடத்தில் கோலினை அடிக்க மீண்டும் சமநிலையானது. தொடர்ந்து இரு அணியினரும் பல முயற்சிகள் மேற்கொண்ட போதும் கோல் பெற முடியாது போக சமநிலை தவிர்ப்புக்காக போட்டி சமநிலை தவிர்ப்பு உதைக்கு தள்ளப்பட்டது. சமநிலை தவிர்ப்பு உதையில் 3:2 என நசரேத் வி.க. வெற்றி பெற்றது.

போட்டியின் ஆட்ட நாயகனாக நசரேத் வி.க வீரர் பிரசாந் தெரிவு செய்யப்பட்டு அவருக்கான பணப் பரிசு மற்றும் பதக்கத்தினை ஓய்வு பெற்ற சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் வே.கந்தசாமி வழங்கி கௌரவித்தார். (கு)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## ஹாட்லிக்கல்லூரி வீரர்கள் தேசிய மட்டத்தில் சாதனை





இலங்கை மெய்வன்மை சங்கம் நடத்திய 59 வது கனிஷ்ட தேசிய தடகளப் போட்டியில் பருத்தித்துறை ஹெட்லிக்கல்லூரி வீரர்கள் சாதனை படைத்துள்ளனர். அண்மையில் கொழும்பு தியகம சர்வதேச விளையாட்டு அரங்கில் நடைபெற்ற கனிஷ்ட தேசிய 16 வயதுப்பிரிவு தட்டு எறிதல் போட்டியில் துரைராஜா அபிசாந் 43:99, பாலச்சந்திரன் ஆனந் 42:88 தூரம் வீசி 1,2 ஆம் இடத்தை பெற்று சாதனை படைத்துள்ளனர். (கு)

## அன்ரனிராஜ் ஹெற்றிக்கோல்

## சென்.அன்ரனிஸ் வி.கழகத்தை வென்றது இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி

இளவாலை ஹென்றிஸ் இளைஞர் விளையாட்டுக்கழகம் ஹென்றீசியன் சவால் கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் விலகல் முறையிலான ஆட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

நடைபெற்ற போட்டியில் கொத்மலை சொக்ஸ் சம்பியன் இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி அணியை எதிர்த்து அந்தோனியார் புரம் சென். அன்ரனிஸ் அணி மோதியது.

பல்கலைக்கழக அணியுடன் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய கல்லூரி அணியும் வடக்கின் வல்லவன், வடக்கின் சமர் தொடர்களில் பலமான அணிகளை வீழ்த்தி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய அந்தோனியார் புரம் அணிகளும் மோதியதால் ஆட்டம் மிகவும் எதிர்பார்ப்புடன் ஆரம்பமானது.

ஆனால் தமது சொந்த மைதானத்தில் அதிக ரசிகர்களின் ஆதரவுடன் களமிறங்கிய சென்.ஹென்றிஸ் அணி போட்டி ஆரம்பமாகி 9 நிமிடங்களுக்குள் அடுத்தடுத்து 3 கோல்களை போட்டு ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

குறிப்பாக u-19 தேசிய அணி வீரர் அன்ரனிராஜ் ஆட்டம் மிகச் சிறப்பாக அமைந்திருந்தது. இவை தவிர கொத்மலை நாயகர்கள் தனேஸ்,அனோயன் ஆட்டம் அணிக்கு மேலும் பலம் சேர்த்தது.

இதனைப் பயன்படுத்திய கல்லூரி அணி மேலும் ஒரு கோலைப் போட்டு முதல் பாதியில் 4:0 என்ற கோல்கணக்கில் முன்னிலை பெற்றது.

எனினும் இரண்டாவது பாதியில் அன்ரனிஸ் அணி ஆட்டத்தை வேகப்படுத்திய போதும் முன்கள வீரர்கள் தமக்குக்கிடைக்கப் பெற்ற கோல்போடும் சந்தர்ப்பங்களைத் தவறவிட இதை பயன்படுத்திய கல்லூரி அணி மேலும் 3 கோல்களைப் போட்டது.

இறுதி நேரத்தில் 2 கோல்களை அடித்து ஆறுதலளித்த போதும் சென் அன்ரனிஸ் அணியால் வெற்றியிலக்கை எட்ட முடியவில்லை. முடிவில் 7:2 என்ற கோல் அடிப்படையில் சென்ஹென்றிஸ் அணி வெற்றிபெற்று A பிரிவில் லீக் சுற்றுக்குத் தகுதி பெற்றது.



போட்டியில் சென்.ஹென்றிஸ் கல்லூரி வீரர் அன்ரனிராஜ் ஹெற்றிக் கோல் அடித்து அசத்தினார். பல்கலைக்கழக அணியுடனான கடந்த ஆட்டத்திலும் மற்றொரு சென் ஹென்றிஸ் கல்லூரி வீரர் தனேஸ் ஹெற்றிக் கோல் அடித்திருந்தார். இவை தவிர பொம்மர்ஸ் அணி வீரர் சாரங்கனும் காளியம்பாள் அணிக்கு எதிராக ஹெற்றிக் கோல் அடித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (கு)

## இன்றைய போட்டிகள்

அராலி வடக்கு திருமகள் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்டத்தில் உள்ள விளையாட்டுக்கழகங்களுக்கிடையே உதைபந்தாட்ட போட்டியினை அராலி வடக்கு மடத்தடி திருமகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடத்துகின்றது. இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் கலைநகர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து உடுப்பிட்டி யுத் விளையாட்டுக்கழகமும் மாலை 4.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து றோயல் விளை யாட்டுக்கழகம் மோதவுள்ளன.

➢➢➢➢➢

பருத்தித்துறை உதைபந்தாட்ட சங்க அனுமதியுடன் நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண உதைபந்தாட்ட தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் போட்டியில் வல்வை விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக்கழகமும் மாலை 4 மணிக்கு நடைபெறும் போட்டியில் மன்னார் விடத்தல் தீவு விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து நாமகள் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன.

➢➢➢➢➢

இளவாலைஹென்றிஸ் இளைஞர் விளையாட்டுக்கழகம் ஹென்றிஸ் சவால் கிண்ணத்திற்கான உதைபந்தாட்ட போட்டியினை புனித ஹென்றியரசர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடத்துகின்றது. இன்று செவ்வாய்க்கிழமை இரவு 8.15 மணிக்கு நடைபெறும் போட்டியில் றோயல் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (கு)

# பசிலின் செயலாளர், பொருளாளர் நிபந்தனைப் பிணையில் விடுவிப்பு

(கொழும்பு)

முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கு சொந்தமான கம்பஹா ஒருதொட்ட காணி சம்பந்தமான முறைகேடான கொடுக்கல் வாங்கல் தொடர்பில் கைது செய்யப்பட்ட இருவர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

பசில் ராஜபக்ஷவின் முன்னாள் செயலாளர் கலாநிதி விலி கமகே, ராஜபக்ஷ நிதியத்தின் பொருளாளர் ஆரியரத்ன தஹநாயக்க ஆகியோரை கடும் நிபந்தனை பிணையில் விடுதலை செய்யுமாறு கம்பஹா மேலதிக நீதவான் லலித் கன்னங்கர உத்தரவிட்டார்.

தலா 50 ஆயிரம் ரொக்கப் பிணை மற்றும் தலா 40 லட்சம் ரூபாய் பெறுமதியான சரீரப் பிணைகளில் சந்தேக நபர்களை விடுதலை செய்யுமாறு உத்தரவிட்ட நீதவான், வெளிநாடு செல்லவும் தடை விதித்துள்ளார்.

பிரதி மாதந்தோறும் இறுதி தினத்தில் பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவில் ஆஜராகி கையெழுத்திட வேண்டும் எனவும் நீதவான் உத்தரவிட்டார்.

பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவினரால் இவர்கள் நேற்று கைது செய்யப்பட்டதுடன் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்ட நிலையில் இவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். (செ-11)

# அதிவேகத்தால் விபத்து; ஒருவர் பலி; 3 பேர் காயம்





(மன்னார்)

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஆண்டாங்குளம் சந்தியில் நேற்று திங்கட்கிழமை மாலை 4.30 மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்ததோடு மூவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வட்டக்கண்டல் கிராமத்தில் இருந்து ஆண்டாங்குளம் சந்தியூடாக வற்றாப்பளை ஆலயத் திருவிழாவிற்கு சென்ற ஹயஸ் வாகனத்துடன், அதிவேகமாக செலுத்தி வரப்பட்ட மோட்டார் சைக்கிள் மோதியதிலே குறித்த விபத்து இடம் பெற்றதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதன்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் படுகாயமடைந்தனர். இந்த நிலையில் உடனடியாக அம்புலன்ஸ் வண்டி வரவழைக்கப்பட்டு குறித்த இருவரும் மன்னார் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

மேலும் ஹயஸ் வாகனத்தில் பயணித்த இருவர் காயமடைந்த நிலையில் ஒருவர் அடம்பன் வைத்தியசாலையிலும், மேலும் ஒருவர் மன்னார் வைத்தியசாலையிலும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் மோட்டார் சைக்கிளில் பயணித்து விபத்திற்கு உள்ளான இருவரும், மன்னார் பொது வைத்தியசாலையில் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்ட நிலையில் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மேலும் ஒருவர் அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

உயிரிழந்தவர் மற்றும் அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருபவரும் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. மேலதிக விசாரணைகளை அடம்பன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-4)

# அதிகார...

வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே தன்னுடைய தலைமையில் நடைபெறும் நகர அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் ஒன்றுக்கு இன்றையதினம் வட மாகாண அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்களை அழைத்துள்ளார்.

இந்தநிலையில் நகர அபிவிருத்தி தொடர்பான கூட்டத்தை கூட்டுவதற்கு முதலமைச்சரே முன் உரிமையுடையவர் எனவும் தவிர ஆளுநரே இதில் தன்னிச்சையான முடிவு எடுக்கிறார் என வட மாகாண சபை உறுப்பினர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

ஏற்கெனவே ஆளுநர் கடந்தவாரம் பாதுகாப்பு தொடர்பான கூட்டம் ஒன்றினை கூட்டி அதற்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கு அழைப்பிதழ் அனுப்பியிருந்தார். ஒருசிலர் இக் கூட்டத்தில் கலந்து கொண்டதுடன் பல உறுப்பினர்கள் அதனைப் புறக்கணித்திருந்தனர்.

இந்தநிலையில் இன்றையதினம் இவ்வாறான ஒரு கலந்துரையாடலுக்கு வடக்கு ஆளுநர் அழைப்பு விடுத்துள்ளார் என தெரிய வருகிறது.

13ஆம் திருத்தச் சட்டத்துக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளசட்டம், ஒழுங்கு, பாதுகாப்பு அதிகாரங்கள் முதலமைச்சரிடமே உள்ளது. அதற்குரிய பொறுப்புக்களை முதலமைச்சரேதன் வசம் வைத்துள்ளார். 13ஆம் திருத்தச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இவ் அதிகாரங்கள் மாகாண சபைக்கு வழங்கப்பட்டாலும் இவற்றை நடைமுறைப்படுத்த மத்திய அரசு முட்டுக்கட்டைபோட்டுவரும் நிலையில் ஆளுநர் இவ்விடயம் தொடர்பாக தன் தலைமையில் ஒரு கூட்டத்தை ஒழுங்கு செய்வது ஏற்றுக் கொள்ள முடியாது.

சட்டம், ஒழுங்கு, பாதுகாப்பு தொடர்பாக மாகாண சபை உறுப்பினர்கள் பேசிவரும் நிலையில் வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் மற்றும் பாதுகாப்புடன் தொடர்புடைய ஏனையவர்களையும் அழைத்து மாகாண சபை உறுப்பினர்களுடன் இணைந்து சட்டம், ஒழுங்கு, பாதுகாப்பு தொடர்பாக உத்தரவு பிறப்பிப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ள கட்டளையிடும் அதிகாரம் முதலமைச்சருக்கே உண்டு.

இது இவ்வாறு இருக்க ஆளுநர் வடக்கு மாகாண சபைக்குரிய அதிகாரங்களில் தலையிட்டுவரம்பு மீறி செயற்படுவ தென்பது ஏற்புடைய செயல் அல்ல. தொடர்ச்சியாக இவ்வாறான செயற்பாடுகளை தொடர்ந்தவண்ணமே அவர் உள்ளார்.

ஆளுநருடைய செயற்பாடுகள் தொடர்பாக அதிருப்தி நிலவி வருவதுடன் நல்லிணக்கத்தையும் அது பாதிப்பதாக அமைகிறது.

எனவே இவர் தலைமையில் நடக்கும் இவ்வா றான கூட்டங்களை வடமாகாண சபை உறுப்பினர்கள் புறக்கணிப்பதற்குமுடிவு செய்துள்ளனர் என ஊடகங்களுக்கு மாகாண சபை உறுப்பினர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (செ-9)

## அனர்த்தங்களை தடுக்க நடவடிக்கை அவசியம்

அனர்த்தங்களை தடுத்து நிறுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென முன்னாள் அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றைய தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பங்கேற்றபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பருவப் பெயர்ச்சி மழை ஆரம்பிக்கப்பட உள்ள நிலையில், அனர்த்தங்கள் உக்கிரமடையக் கூடுமென அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சராக தாம் கடமையாற்றிய காலத்தில் அனர்த்த முகாமைத்துவ நிறுவனத்தை ஸ்தாபித்ததாகத் தெரிவித்துள்ளார்.

அனர்த்தங்களின் பின்னர் நடவடிக்கை எடுப்பதனை மட்டும் இலக்காகக் கொண்டு தாம் இந்தப் பிரிவினை உருவாக்கவில்லை எனவும், அனர்த்தங்களை வரையறுப்பதுவும் தமது நோக்கம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அனர்த்தங்கள் இடம்பெறும் போது அரசாங்கம் துரித கதியில் செயற்பட வேண்டியது மிகவும் அவசியமானது என அவர் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

# புகையிரதம்...

நேற்று பிற்பகல் 12.45 மணியளவில் சுன்னாகம் புகையிரத நிலையத்தில் உள்ள கடவையில் இவ்விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணப் பக்கமாக இருந்து காங்கேசன்துறை நோக்கி புகையிரதம் வந்து கொண்டிருந்தவேளை புகையிரத கடவை மூடப்பட்டிருந்தது.

இதன்போது அப்பகுதியில் நின்ற வயோதிபர் திடீரென புகையிரத கடவை மறிப்புக்கு கீழே புகுந்து புகையிரதத்தை நோக்கி ஓடியுள்ளார்.

அப்பகுதியில் நின்றவர்கள் அவரைத் தடுக்க முற்பட்டபோதும் வேகமாக வந்த புகையிரதம் முதியவரை மோதித் தள்ளியுள்ளது.

இவ்வாறு உயிரை மாய்த்துக் கொண்டவர் சுன்னாகம் ஆலடி பகுதியைச் சேர்ந்த 60 வயது மதிக்கத்தக்க சின்னராசா என அடையாளம் காணப்பட்டுள்ளது.

சடலம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு வைக்கப்பட்டுள்ள நிலையில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த முதியவர் இதற்கு முன்னரும் இது போன்று உயிர்மாய்ப்புக்கு முயற்சித்தபோது பொது மக்களால் காப்பாற்றப்பட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (செ-30,60)

# தன்னாட்சி அதிகாரம்...

எனவே இதனை மீறி தீர்வை வழங்க முடியாது. சர்வஜன வாக்கெடுப்பு நடத்தினாலும் ஒற்றையாட்சியை மீறி மக்கள் சமஷ்டிக்கு ஆதரவு வழங்கமாட்டார்கள்.

ஜனாதிபதி ஒற்றையாட்சிக்குள் தீர்வு என்ற அடிப்படையிலேயே உள்ளார். ஆனால பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐ.தே. கட்சிக்கு மக்களையும் நாட்டையும் பிரித்தாளும் தேவையே மேலோங்கியுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியினர் பிரிவினைக்கான சமஷ்டியையே ஆதரிக்கின்றனர். இவ்வாறானதொரு சூழ்நிலையில் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான சம்பந்தன் தனி நாட்டுக் கோரிக்கையை கைவிட்டுள்ளதாக அறிவித்திருப்பது வரவேற்கத்தக்கது.

எனவே தம்மைத் தாமே ஆளும் அதிகாரம் வடமாகாணம் உட்பட நாட்டின் அனைத்து மாகாணங்களுக்கும் வழங்கப்பட வேண்டும். நான் சுயநிர்ணய உரிமையை ஆதரிக்கவில்லை. தம்மைத் தாமே ஆளும் அதிகாரத்தை வழங்க வேண்டும் என்பதையே வலியுறுத்துகிறேன். இதன்மூலம் அதிகாரப் பரவலாக்கல் வலிமை பெறும். தம்மைத் தாமே ஆளும் அதிகாரத்தால் அந்த மாகாண மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பது இலகுவாக அமையும் என்றும் வாசுதேவ நாணயக்கார எம்.பி. தெரிவித்தார். (செ-11)

# முட்கம்பி வேலியோடு மோதி குடும்பஸ்தர் படுகாயம்!

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தினால் அமைக்கப்பட்ட முட்கம்பி வேலியோடு மோட்டார் சைக்கிள் மோதியதில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். இதில் தெல்லிப்பழையை சேர்ந்த சிவப்பிரகாசம் சிவகாந்தன் (வயது 35) எனும் குடும்பஸ்தர் ஒருவரே படுகாயமடைந்தவர் ஆவார்.

நேற்று மாலை 5.30 மணியளவில் குறித்த குடும்பஸ்தர் வெல்லம்பிட்டி ஆயுர்வேத வைத்தியசாலை அமைந்துள்ள வீதி வழியாக சென்று கொண்டிருந்த போதே குறித்த விபத்து ஏற்பட்டுள்ளது.

படுகாயமடைந்த குடும்பஸ்தர் தெல்லிப்பழை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (செ-4)

# அனர்த்த உயிரிழப்புக்கள்; அரசாங்கம் நட்டஈடு

(கொழும்பு)

மண் சரிவு மற்றும் வெள்ளத்தினால் மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபா வீதமும் அழிவடைந்து போன வீடுகளுக்காக ரூபா ஒரு லட்சம் முதல் 25 லட்சம் வரை நட்டஈடு வழங்குவதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.

இயற்கை அனர்த்தம் தொடர்பான தேசிய காப்புறுதித் திட்டத்தின் அடிப்படையில் ஒதுக்கப்பட்டுள்ள இந்த நட்டஈட்டுத் தொகையை எந்தவித பாரபட்சமுமின்றி பாதிக்கப்பட்ட அனைவருக்கும் வழங்க நடவடிக்கை எடுப்பதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

அழிவடைந்த வீடுகளின் கணக்கெடுப்பை ஆரம்பிக்குமுகமாக குறித்த சுற்றுநிருபம் பிரதேச செயலாளர்களுக்கும் மாவட்ட செயலாளர்களுக்கும் அனுப்பி வைத்துள்ளதாகவும் இரண்டு வாரங்களுக்குள் இந்த நடவடிக்கைகளை முடிவுக்குக் கொண்டுவர எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்துள்ளார். (செ-11)

# சேத மதிப்பீடு கடினமானது!

இயற்கை அனர்த்தம் காரணமாக ஏற்பட்ட சேத விபரங்களை மதிப்பீடு செய்வதில் சிரமங்கள் காணப்படுவதாக நிதி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஆர்.எம்.எஸ்.அமரதுங்க தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில், வெள்ளம் மற்றும் மண் சரிவு காரணமாக ஏற்பட்டுள்ள சேதம் பற்றிய பொருளாதார ரீதியான மதிப்பீடுகளை மேற்கொள்வது மிகவும் சிரமமான காரியமாகும்.

குறிப்பாக பாதிக்கப்பட்டவர்களின் தனிப்பட்ட சொத்துக்களுக்கு ஏற்பட்ட நஷ்டம் பற்றிய விபரங்களை துல்லியமாக திரட்ட முடியாதுள்ளது. இன்னமும் வெள்ளம் முழுமையாக குறையவில்லை. எனவே இன்னமும் மழை வெள்ளம் மற்றும் மண்சரிவினால் ஏற்பட்டுள்ள சொத்து சேதம் பற்றிய முழு மதிப்பீடுகள் செய்யப்படவில்லை என அமரதுங்க தெரிவித்துள்ளார். (செ-11)

## வாள்களுடன்...

இந்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டவர்கள், 17 வயதுடைய மாணவனும் மற்றும் 19 வயதுடைய இளைஞனும் என சுன்னாகம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் குழு மோதல் ஒன்றுக்கு தயாராகவிருந்த வேளையிலேயே பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் மேலதிக விசாரணையினை மேற்கொண்டு வருகின்றனர். மேலும் கடந்த இரு வாரகாலமாக யாழில் குற்றச்செயல்கள் குறைவடைந்து வருகின்ற நிலையில் இவர்கள் இருவரும் வாள்களுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை இவர்களோடு தொடர்பு உடைய ஏனையவர்களையும் தாம் தேடி வருவதாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்துள்ள அதேவேளை, இது தொடர்பில் ஏதும் தகவல்கள் கிடைக்கப்பெற்றால் உடனடியாக தமக்கு அறியத்தருமாறும் பொலிஸார் கோரியுள்ளனர். (செ-4)

## அனர்த்த உயிரி...

தமது இருப்பிடங்களிலிருந்து வெளியேறி பாதுகாப்பு மையங்களில் தங்கியுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை குறைந்து வருகின்றன.

மழை வெள்ளம் தற்போது குறைந்து வருவதால் கணிசமான குடும்பங்கள் தங்களது வீடுகளுக்கு திரும்பியுள்ளதாக கூறப்படுகிறது.

இடர் முகாமைத்துவ அமைச்சகத்தினால் நேற்று வெளியிடப்பட்டுள்ள தகவல்களின் படி பாதுகாப்பு மையங்களில் தங்கியுள்ளவர்களின் எண்ணிக்கை 42 ஆயிரம் குடும்பங்களை சேர்ந்த ஒரு இலட்சத்து 86 ஆயிரமாக குறைந்துள்ளது.

மழை வெள்ளம் காரணமாக பெரும் பாதிப்புக்குள்ளான கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை ஆகிய மாவட்டங்களை கொண்ட மேல் மாகாணத்தில் ஏற்கெனவே 60 ஆயிரம் குடும்பங்களை சேர்ந்த இரண்டு லட்சம் பேர் வரை பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டிருந்தனர். அந்த எண்ணிக்கை தற்போது 37 ஆயிரம் குடும்பங்களை சேர்ந்த ஒரு இலட்சத்து 70 ஆயிரமாக குறைந்துள்ளது.

இந்த நிலையில், மழை வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளில் சிக்கி இறந்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்தும், காணாமல் போனவர்களின் எண்ணிக்கை குறைந்தும் வருகின்றது.

நேற்று திங்கட்கிழமை நண்பகல் நிலைவரப்படி 92 ஆக் அதிகரித்துள்ளது. காணாமல் போனவர்களின் எண்ணிக்கை 109 ஆக குறைந்துள்ளதாக இடர் முகாமைத்துவ அமைச்சகம் கூறியுள்ளது.

கேகாலை மாவட்டம் அரநாயக்க சம்பவத்தில் மட்டும் 39 பேர் பலியாகியுள்ளனர். இந்த சம்பவத்தில் மட்டும் 105 பேர் காணாமல் போயுள்ளனர்.

மாவட்ட ரீதியான தகவல்களின்படி நிலச்சரிவு அனர்த்தங்களின் போது கேகாலை மாவட்டத்திலே கூடுதலான உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன.

அரநாயக்க, தெகியோவிட்ட மற்றும் புளத்கோபிட்டிய ஆகிய பகுதிகளில் ஏற்பட்ட நிலச்சரிவுகளில் புதையுண்டு இறந்தவர்களின் எண்ணிக்கை 57 ஆகும்.

கண்டி மாவட்டத்தில் நிலச்சரிவுகளில் புதையுண்டு 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

நிலச்சரிவுகள் காரணமாக 64 மரணங்கள் பதிவாகியுள்ள அதே வேளை 29 மரணங்கள் மழை வெள்ளம் காரணமாக ஏற்பட்டுள்ளன.

மேல் மாகாணத்தில் 15 பேரும், வடமத்திய மாகாணத்தில் 04 பேரும், வட மேல் மாகாணத்தில் 9 பேரும், தென் மாகாணத்தில் 2 பேரும் மழை வெள்ளத்தில் சிக்கி உயிழந்துள்ளதாக இதுவரை வெளியாகியுள்ள தகவல்கள் தெரிவிக்கின்றன.

இச்சூழலில், அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவ வடக்கு - கிழக்கு மாகாணங்களிலுள்ள மக்களும் முனவந்துள்ளனர்.

சமூக சமய அமைப்புகள் முன் வந்து நிவாரண பொருட்களை சேகரித்து வருகின்றன. இதனைத் தவிர அரசாங்கம் மற்றும் தனியார்துறை அலுவலகங்களினாலும் நிதி மற்றும் நிவாரணங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## பிரமிட் கட்ட...

டியில் ஈடுபட்டு வருகின்றது. இந்த மோசடியில் குடாநாட்டைச் சேர்ந்த பலர் சிக்கி சின்னாபின்னமாகியிருக்கின்ற அதேவேளை, மேலும் பலர் நாள்தோறும் சிக்கிக்கொண்டிருக்கின்றனர்.

குடாநாட்டிலுள்ள பிரபல மண்டபங்களிலும் ஹொட்டல்களிலும் கூட்டங்கள் நடத்தி இதற்குள் மக்கள் இணைத்துக் கொள்ளப்படுகின்றனர். இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்கே நுழைவுக் கட்டணமாக 250 ரூபாய் அறவிடப்படுகின்றது.

குறிப்பாக தென்னிலங்கையைச் சேர்ந்த அந்த நிறுவனத்தின் நிதிசார் பிரமிட் கட்டமைப்பில் இணைகின்ற ஒருவர் சுமார் ஒரு இலட்சத்து நாற்பது ஆயிரம் (140,000) ரூபாயைச் செலுத்தவேண்டும். இவ்வாறு செலுத்தியவுடன் அவருக்கு 10 ஆயிரம் ரூபாய் பெறுமதியான சோலர் அல்லது அதற்கு இணையான மின் உபகரணம் ஒன்று வழங்கப்படும்.

இதன் பின்னர் இணைந்த அந்த நபர் மேலும் இரண்டு பேரை அதற்குள் இணைக்கவேண்டும். பின்னர் அந்த இருவரும் ஆளுக்கு இருவரை இணைக்கவேண்டும்.

இவ்வாறு இணைகின்ற ஒவ்வொருவரும் குறித்த நிதிக் கம்பனிக்கு ஒரு இலட்சத்து 40ஆயிரம் ரூபாயைச் செலுத்தவேண்டும். இப்படியே இணைத்துக்கொண்டு செல்லும் போது அது பிரமிட் போன்று வளர்ந்து செல்லும்.

குறித்த நிதிக் கம்பனியின் இந்த செயற்றிட்டத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் இணைந்திருக்கின்றனர். கிராமப் புறங்களில் உள்ள மக்களுக்கு ஆசை வார்த்தைகள் கூறி அவர்களை இந்த திட்டத்தில் இணைத்து அவர்களை நிதி நெருக்கடிக்கு கொண்டு வருகின்ற நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன.

இதில் பிரதானமாக இருக்கின்ற ஒருசில நபர்களுக்கு இலட்சக்கணக்கான பணம் கிடைக்கும். ஆனால், ஏனையோர் ஏமாற்றமடைவதை தடுக்க முடியாமல்போகும். தங்கள் சுகபோகங்களுக்காக அவர்கள் மற்றவர்களை இந்த திட்டத்திற்குள் மாட்டிவிடுகின்றனர். இந்த உண்மை தெரியாமல் பல பொதுமக்கள் வங்கிகளில் கடன் பெற்று இந்த திட்டத்தில் இணைந்து வருகின்றமை வேதனைக்குரியதாக உள்ளது.

அத்துடன் மத்திய வங்கியால் இந்த நடவடிக்கை தொடர்பாக பொலிஸாருக்கு செயலமர்வு ஒன்று நடத்தப்பட்டுள்ளது. ஆனால் இதுவரை பொலிஸார் உரிய நடவடிக்கைகள் எதையும் மேற்கொள்ளவில்லை. மேலும் மக்கள் பிரதிநிதிகளுக்கு இது தொடர்பாக மக்கள் அறிவித்திருந்த போதும் அவர்கள் இந்த விடயம் தொடர்பில் கண்டுகொள்ளாமல் இருக்கிறார்கள். எந்தவிதமான விழிப்புணர்வு செயற்பாடுகளையும் செய்வதாக தெரியவில்லை எனவும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (செ-9)

## சகோதரியோடு...

வாறு மாணவர்கள் தடம்புரண்டு சென்றால், அது அந்த சமூகத்தின் அழிவாகத்தான் இருக்கும். மாணவர்கள் எதிர்கால சந்ததியினராக வரப் போகின்றவர்கள். அவர்களை தவறான வழியில் விட்டுவிட்டு ஒரு சமூகம் முன்னேற்றம் அடைய இயலாது.

யாழ்.மாவட்டத்தின் கல்வி நிலை 1970 ஆம் ஆண்டளவில் உச்சத்தில் காணப்பட்டது. நாட்டில் உள்ள அனைத்து பல்கலைக் கழகங்களிலும் யாழ்.மாவட்ட மாணவர்கள் காணப்பட்டனர், ஆனால் இப்போது யாழ். மாவட்டம் கல்வி நிலையில் இருபத்தியொராம் இடத்தில் உள்ளது. நாம் 1970 ஆம் ஆண்டளவில் இருந்த கல்வியின் முதன்மை நிலையை மீளப் பெற வேண்டும்.

இதற்காக நாம் அனைவரும் ஒன்று திரண்டு செயற்பட வேண்டும். ஆசிரியர்கள் அதிபர்கள், சமூகத்தில் உள்ள சேவையாளர்கள் ஒன்று திரள வேண்டும். யாழ்.மாவட்டத்தின் இந்த கல்வி நிலையை ஒருவருடத்தில் மாற்றி அமைக்க வேண்டும். மாணவர் சமுதாயத்திற்கு நாம் அனைவரும் வழிகாட்டியாக இருக்க வேண்டும்.

கடந்த இரு வாரங்களாக யாழில் அமைதி நிலை ஏற்பட்டுள்ளது. இந்த அமைதி நிலை தொடர்வதற்கு நாம் தொடர்ந்தும் நடவடிக்கை எடுப்போம். மேலும் தனியார் கல்வி நிலையங்களுக்கு செல்லும் மாணவிகள் தொடர்பில் பெற்றோர்கள் அவதானமாக இருங்கள். அவர்களது பாதுகாப்பை உறுதிப்படுத்துங்கள்.

ஒருவருடைய சுதந்திரம் எனப்படுவது, உன்னுடைய விரலை எனது மூக்கு நுனி மட்டும் கொண்டுவருவதுதான், ஆனால் அந்த விரல் எனது மூக்கில் பட்டுவிட்டால் அவரது மூக்கினை தற்பாதுகாப்புக்காக உடைப்பது எனது சுதந்திரம். ஆகவே உங்களது சகோதரியுடன் யாரும் சேட்டை விட்டால் அவரது மூக்கை நீங்கள் உடைக்க முடியும் பின் மூக்கு உடைத்ததை ஒப்புக்கொண்டு நீதிமன்றில் வந்து கூறுங்கள் உங்களுக்கு விடுதலை கிடைக்கும்.

ஐ.நாவின் நீதி மற்றும் சித்திரவதைகளுக்கான விசேட அறிக்கையாளர்கள், அண்மையில் இங்கே வருகை தந்திருந்தனர். அவர்கள் என்னை சந்தித்து இங்கு நடைபெறும் வாள்வெட்டுக்கள் குறித்து கேட்டார்கள் என்னால் பதிலளிக்க முடியாமல் போய் விட்டது. குடாநாட்டு பெண்கள் இரவு பன்னிரண்டு மணிக்கு சுதந்திரமாக நடமாடும் காலம் வரையில் எனது நடவடிக்கைகள் தொடரும் என்றார் நீதிபதி இளஞ்செழியன்.(செ-4)


## 15 பவுண் நகை...

தொழில் நிமிர்த்தம் சென்றிருந்த வேளை மேற்படி திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் தெல்லிப்பளை பொலிஸாரிடமும் முறையிடப்பட்ட நிலையில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன. (செ-91)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## வடக்கு அமைச்சில் மாற்ற...



அமைச்சுக்கள் சிலவற்றை வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் மீண்டும் பொறுப்பேற்றுக்கொண்டார்.

வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து அவற்றை பெற்றுக்கொண்டுள்ளார்.

வடக்கு மாகாண சபை ஆரம்பத்தில் பொறுப்பேற்றுக் கொள்ளப்பட்ட போது முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு கீழ் சமூக சேவை, புனர்வாழ்வு, மகளிர் விவகாரம் ஆகிய அமைச்சு பொறுப்புக்கள் காணப்பட்டன. எனினும் இந்த மூன்று அமைச்சு பொறுப்புக்களையும் சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கத்திடம் முதலமைச்சர் அப்போது ஒப்படைத்திருந்தார்.

சுகாதார அமைச்சர் இம்மூன்று பொறுப்புக்களையும் கடந்த இரண்டு வருடகாலமாக செயற்படுத்தி வந்த நிலையில், நேற்றைய தினம் மீண்டும் முதலமைச்சர் தன்னிடம் ஏற்கெனவே இருந்த மேற்படி பொறுப்புக்களை மீள பெற்றுள்ளார். இதற்கமைய வடக்கு மாகாண ஆளுநருக்கு இது தொடர்பில் தெரியப்படுத்தப்பட்டதுடன், ஆளுநர் முன்பாக வடக்கு மாகாண முதலமைச்சர் பதவிப்பிரமாணமும் செய்து கொண்டார்.

நேற்று மாலை ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் வடக்கு மாகாண உறுப்பினர்கள் சிலரும் கலந்து கொண்டிருந்தனர். முதலமைச்சர் தனது பொறுப்புக்களை கையேற்றமை தொடரபில், வர்த்தமானி அறிவித்தலும் கொடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-4-9)

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய
நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்
Spoken English with Grammar 1 1/2 Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)
Diploma in English 2 1/2 Months
* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
* Excellent Teachers' Panel & Individual Attention
No.15 1/2, Siriampiyady Lane,
(Above Sathosa SM)
Jaffna. Tel :021-2224550
Hotlines
077 036 5728, 077 758 5913,
077 722 2422
Batch 1 : 25.05.2016
Batch 2 : 28.05.2016
Batch 3 : 30.05.2016
Batch 4 : 01.06.2016
கிழமை நாட்கள் மற்றும் சனி, ஞாயிறு வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன.
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் தங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்
(C-4972)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.05.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.